உ

ஓம்சக்தி

# தொழில் நுட்ப வித்தகி

# சிவகாமி



## சேவை நலன் பாராட்டு மலர்

## 2009

வெளியீடு

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்

கொழும்பு




யாழ் இந்து மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழாவில்
சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட போது



கல்லூரிச் சஞ்சிகை வெளியிடும் போது



கொழும்புக்கு வருகை தந்திருந்த கல்லூரி
அதிபர், மாணவிகள், திரு. திருமதி ஜனாப்
அஷ்ரப் உடன் திருமதி வினோதன் வீட்டில்




அகில இலங்கை இரசாயன (பட்டயவியலாளர்)
சங்கத்தின் பழைய தலைவர்களுடன்



அகில இலங்கை இரசாயன (பட்டயவியலாளர்)
சங்கத்தின் இணைச் செயலாளருடன் மங்கல
விளக்கேற்றும்போது




அகில இலங்கை இரசாயன (பட்டயவியலாளர்)
சங்கத்தின் ஆராய்ச்சி மகாநாட்டின் போது

உ
ஓம்சக்தி

# தொழில் நுட்ப வித்தகி

# சிவகாமி

B.Sc. (Ceylon) 1966 (பொதுப் பட்டம்)
பாடங்கள்: இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல்.

M.Sc. (Manchester) 1971
Pharmacology by thesis.

சேவை நலன் பாராட்டு மலர்
2009

வெளியீடு

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு



"நான் இங்கு வசிக்கிறேன். இவ்விடம் அழகாக இருக்கும்."

**"It ought to be beautiful, I live here."**

**யாழ் இந்து மகளிர் கல்லூரி ப.மா.ச. கொழும்பு**

**Jaffna Hindu Ladies' College O.G.A. Colombo.**



சேவை பாராட்டு விருது – 2009

Honourary Award for the Meritorious Service

"Technical Service Award"

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் பூத்து மலராகி, கல்லூரியைத் தொடர்ந்தும் காப்பாற்றி, யாழ் இந்து மகளிர் கல்லூரி – கொழும்பு பழைய மாணவிகள் சங்கச் செயலாளராகவும், பொருளாளராகவும், தற்போதைய தலைவியாகவும் இருக்கின்றவரும், இலங்கைப் பரிசோதனை ஆய்வுகூடங்களின் சங்கத் தலைவியாகவும், Bamber & Bruce நிறுவனத்தில் பிரதம இரசாயன, நுண்உயிரியல் ஆய்வாளர் ஆகவும் விளங்குகின்ற **திருமதி சிவகாமி அம்பலவாணர்** அவர்களுடைய நீடிய காலத் தொண்டையும் சேவையையும் அவரது கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றையும் பாராட்டிக் கௌரவிக்கும் முகமாக சர்வதேச மகளிர் தினமாகிய **இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு பங்குனித் திங்கள் எட்டாம் திகதி (2009.03.08)** ஆகிய இன்று கொழும்பு 4 பம்பலப்பிட்டியில் அமைந்திருக்கும் சரஸ்வதி மண்டபத்தில் நடாத்தப்படுகின்ற சர்வதேச மகளிர் தின விழாவின் நிமித்தம்

**"தொழில் நுட்ப வித்தகி"**

என்னும் சிறப்புப் பட்டத்தை எமது சங்கத்தினர் ஏகமனதாகத் தீர்மானித்து அம்மையார் அவர்களுக்கு மனமுவந்து வழங்கிக் கௌரவிப்பதிற் பெருமைப்படுகின்றோம்.

அவரின் இப்பாரிய சேவை என்றும் தொடர்ந்தும் அனைத்து மக்களுக்கும் கிடைக்க இறைவன் ஆசிர்வதிப்பாராக.

S. Jeyarajah

திருமதி சரஸ்வதி ஜெயராஜா
சங்கப் போஷகர்

**08. 03. 2009**

**President**
Mrs. Sivakamy Ambalavanar
61/2, Abdul Gaffoor Mawatha
Colombo 3
Tel: 2573638
Email: ambaly@slt.lk

**Secretary**
Mrs. Gowri Ramana
15, Madangahawatta Lane,
Colombo 6
Tel: 2360228
Email: ramanahg@gmail.com

**Treasurer**
Miss. Sivamalar Subramaniam
24, Deal Place A
Colombo 3
Tel: 2575566
Email: hariomak@gmail.com

# J/JAFFNA HINDU LADIES' COLLEGE

Principal
MRS.V.PERINPANATHAN, B.Sc., Dip. in Edu., SLPS I
Phone:- 0212222346

Jaffna
(Sri Lanka)
16.04.2009

பிரபல கணித ஆசிரியரும் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் கொம்யூனிஸ்ட் கட்சியின் பிரபல உறுப்பினருமாகிய திரு. அ. வைத்தியலிங்கம் அவர்களின் கல்விப் பாரம்பரியத்தில் தோன்றிய திருமதி. சிவகாமி அம்பலவாணர் அவர்கள் எமது யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும் கல்லூரியின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டவருமாவார்.

எமது கல்லூரியின் பொன்விழா ஆண்டாகிய 1993ம் ஆண்டு கொழும்பில் எமது பழைய மாணவர் சங்கக்கிளையை ஸ்தாபிப்பதில் திருமதி.அபிராமி கயிலாசபிள்ளையுடன் இணைந்து பாடுபட்ட இவர் அச்சங்கத்தில் பொருளாளர், செயலாளர் எனப் பல்வேறு பங்களிப்புகளை ஆற்றியதுடன், தற்போது தலைவியாகவும் தொடர்ந்து த்மது சேவைகளை வழங்குவதோடு, இலங்கைப் பரிசோதனை ஆய்வுகூடங்களின் சங்கத் தலைவியாகவும் Bamber & Bruce நிறுவனத்தின் பிரதம பகுப்பாய்வாளராகவும் பணிபுரிகின்றார். எமது கல்லூரியின் தேவை நிமித்தம் நாம் எந்நேரம் தொடர்பு கொள்ளும் போதும் இன்முகத்துடன் வரவேற்று உடனுக்குடன் அவற்றைப் பூர்த்தி செய்யும் இனிய உள்ளம் கொண்டவர். இவ்வாறான வேளைகளில் இவரது கணவர் திரு.அம்பலவாணர் அவர்களின் ஒத்துழைப்பும் எமது கல்லூரிக்குக் கிடைப்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

எமது கல்லூரியின் புகழ் உலகெங்கும் ஓங்க எமது கல்லூரியின் பெயரால் www.jhlc.lk எனும் இணையத்தளத்தினை கொழும்பு பழைய மாணவர் சங்கம் சார்பில் ஆரம்பிக்க உறுதுணையாக விளங்கியதுடன் கல்லூரியின் வளர்ச்சிப் படிகளை வர்ண, ஓவிய, எழுத்து வடிவமாக மாற்றி யாழ் நாதமாக ஒலிக்க வழிசெய்து வருகின்றார்.

இத்தகைய சிறப்பும் ஆற்றலும் கொண்டவரான இவருக்கு **"தொழில் நுட்ப வித்தகி"** எனும் பட்டம் வழங்கப் பட்டமை சாலச்சிறந்ததே ஆகும்.

மேலும் இவரது பணிகள் சிறந்து மிளிர எல்லாம் வல்ல நடுத்தோட்ட இராஜவரோதய பிள்ளையாரின் திருவருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

W. S. SENTHILNATHAN 181/1, W.A.Silva Mawatha
B.A., Dip in Ed., F.R.A.S., J.P. U.M. Colombo 6
Attorney at Law & Notary Public
Kalabushanam Ph: 2587796, 0602159280

---

1940ஆம் ஆண்டுகளில் நான் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் மாணவனாக இருந்தபோது அக்கல்லூரிக்கு அண்மையில் வசித்த மாணவர்கள், ஆசிரியர்கள் பலரை அறிந்து வைத்திருந்தேன். விசேஷமாக இடதுசாரி ஆசிரியர்களிடம் எனக்கு அலாதியான விருப்பம். அதற்கு இரு காரணங்கள் இருந்தன. ஒன்று அங்கு கடமையாற்றிய தோழர் மு.கார்த்திகேயன், தோழர் அ.வயித்தியலிங்கம் ஆகிய இருவரும் எல்லோரிடமும் நன்கு பழகுபவர்கள். மற்றது எனக்கும் இடதுசாரி இயக்கமாகிய லங்கா சமசமாஜக் கட்சியுடன் சிறு தொடர்பிருந்தது.

திரு வயித்தியலிங்கம் பெரிய பதவிகளை எல்லாம் உதறித்தள்ளிவிட்டு யாழ் இந்துக்கல்லூரியில் ஆசிரியராகவும் பின்னர் உரும்பிராய் இந்துக்கல்லூரியின் அதிபராகவும் கடமையாற்றினார். அப்போது அவர் தன் மனைவியாராகிய அன்னபூரணி அம்மையாருடன் கல்லூரி வீதியில் வசித்து வந்தார். அவ்வீதியால்தான் நான் பிறவுண் வீதியிலிருந்து தினமும் கல்லூரிக்குப் போய்வருவதுண்டு. அவர்களுக்கு 1944ஆம் ஆண்டு ஒரு புத்திரி பிறந்தார். அவரே சிவகாமி. தந்தையாரை ஒத்த மகளான இச்சிறுமி பிற்காலத்தில் ஆற்றப்போகும் சாதனைகளுக்கு பெற்றோரின் வளர்ப்பு அத்திபாரம் இட்டது.

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் பள்ளிப்படிப்பை முடித்த சிவகாமி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டதாரியாகச் சித்திபெற்றார். அதன்பின் அந்த நாளைய குடும்ப வழக்கப்படி அவர்களின் நெருங்கிய உறவினராகிய திரு. வி. அம்பலவாணரைக் கரம் பிடித்தார். அத்திருமணத்துக்கு நானும் சென்று புதுத்தம்பதிகளை வாழ்த்தினேன்.

திருமணமாகி ஒரு வருடத்தில் இருவரும் இங்கிலாந்து சென்று அங்கு கணவர் கலாநிதிப் பட்டம் பெற சிவகாமி மஞ்செஸ்டர் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான முதுமானிப் பட்டம் பெற்றார். பின் திரும்பி வந்ததும் சிவகாமி Bamber and Bruce நிறுவனத்தில் உதவிப் பகுப்பாய்வாளராகச் சேர்ந்து படிப்படியாகப் பதவி உயர்வு பெற்று தற்போது பிரதம பகுப்பாய்வாளராகக் கடமையாற்றுகிறார். அந்த நிறுவனத்தை நாட்டின் தலைசிறந்த பரிசோதனை ஆய்வுகூடமாக மாற்றி அமைத்த பெருமை சிவகாமியையே சாரும். அதை விட இலங்கை இரசாயனமன்றத்தின் இணைச்செயலாளராக பல வருடங்கள் கடமை புரிந்தார். இலங்கை பரிசோதனை ஆய்வுகூடச் சங்கத்தை உருவாக்கி முதலில் அதன் செயலாளராகவும் பின்பு பொருளாளராகவும் கடமையாற்றிய சிவகாமி

தற்போது அதன் தலைவியாகக் கடமையாற்றுகிறார்.

தான் கற்ற யாழ் இந்து மகளிர் கல்லூரியின் "பழைய மாணவர் சங்கம் - கொழும்பு" இதனை உருவாக்க அரும்பாடுபட்ட சிவகாமி சங்கத்தின் செயலாளராகவும் பொருளாளராகவும் கடமை புரிந்து இறுதியில் தலைவியாகப் பொறுப்பேற்றுள்ளார். மேலும் அண்மைக் காலங்களில் வடகீழ்பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சம்மேளனத்தின் இணைச்செயலாளராகவும் கடமை புரிந்து வருகின்றார்.

சிவகாமியின் சாதனைகளைப் பார்த்துமகிழ அவருடைய தந்தையார் எம்மிடையே இன்றில்லை. ஆனால்

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

எனும் வள்ளுவர் வாக்கினுக்கமைய அவரின் 83 வயதை அண்மிக்கும் தாயாராகிய அன்னபூரணி அம்மையார் மகள் அண்மையில் கௌரவிக்கப்பட்டதைக் கண்டுகளித்தார்.

கடமை உணர்ச்சியும் விடாமுயற்சியும் கொண்ட சிவகாமி தன் தொண்டுகளில் மென்மேலும் வெற்றிபெற்று கணவர் அம்பலவாணருடன் பல்லாண்டு சுகமாக வாழவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

W.S. செந்தில்நாதன்

பரிசுடன் வந்த வாழ்த்து.

To

Dear Sivakami

The joy of this occasion
Is shared by others, too—
Here's Hoping that
life's finest things
Will always come to you!

Best Wishes Always

Very Proud of your achievements Keep it up

With Love
Dayanithi acca

08-03-2009

# சகோதர இந்துக் கல்லூரிகளும் நாமும்

நான் கல்வி கற்ற யாழ் இந்துக் கல்லூரியின் சகோதரக் கல்லூரியாக திகழ்வது யாழ் இந்து மகளிர் கல்லூரி ஆகும். இந்த இரு கல்லூரிகளின் பழைய மாணவர்கள் பிற்காலத்தில் வகித்த பொறுப்பு வாய்ந்த பதவிகளுக்கு அடித்தளம் இட்ட பெருமை இவ்விரு கல்லூரிகளையே சாரும். இப்போது நாம் சற்றே பின் நோக்கிச் செல்வோம். யாழ்ப்பாணம் பிரவுண் வீதி மற்றும் கல்லூரி வீதி ஆகியவற்றில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்தோரின் வழித்தோன்றல்கள் படித்த கல்விக்கூடம் யாழ் இந்துக் கல்லூரி ஆகும். தற்போது 82 வயது மூதாட்டியாக கொழும்பில் எம்மிடையே வாழும் அன்னபூரணி அம்மையார் கண்டியில் தொழில் புரிந்து பின்னர் அவ்விடத்தில் வசித்த வைத்திய கலாநிதி சங்கரப்பிள்ளை திருமதி காரைக்காலம்மை சங்கரப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வி ஆவார். அவர் கல்வி கற்ற காலத்திற்கு பின்னர் அவருடைய வளர்ப்பு மகள்போல தோன்றிய கல்லூரி யாழ் இந்து மகளிர் கல்லூரி ஆகும். அவருடைய மகள்மார், மருமக்கள் மற்றும் பேத்திமார் அங்கு கல்வி கற்றார்கள்.

· 1943 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 10 ஆம் நாள் யாழ் இந்து மகளிர் கல்லூரி நிறுவப்பட்டது. 1945 செப்ரெம்பர் 7 ஆம் நாள் இக் கல்லூரி யாழ்ப்பாணம் அரசடி வீதியில் தனது சொந்த வீட்டைக் கண்டது. இந்த இரண்டு வருடங்களுக்கு இடையில் அதாவது 1944 செப்ரம்பர் 20 எங்கள் மதிப்புக்குரிய ஆசிரியராக பின்னர் கடமையாற்றிய திரு. அ. வயித்தியலிங்கம் அவர்களுக்கும் அன்னபூரணி அம்மையாருக்கும் மூத்த புதல்வியாக உதித்தார் சிவகாமி. இந்த மூன்று செப்ரம்பர் மாதங்களும் இப்பாடசாலைக்கு முக்கியமான மாதங்கள். பாடசாலை வளர்ச்சியும் சிவகாமியின் வளர்ச்சியும் ஒருங்கிணைந்த மாதிரி நடந்தன. சகோதர கல்லூரியில் சிறப்புடன் கற்ற சிவகாமியை எனது கல்லூரியான யாழ் இந்துக் கல்லூரியில் சிறப்புடன் கற்று பின்னர் அரசாங்க திட்டமிடல் துறையில் கடமைக்கு சேர்ந்த திரு. அம்பலவாணர் அவர்கள் 1966 செப்ரெம்பர் 16 இல் கரம்பிடித்தார்.

பிற்காலத்தில் வெவ்வேறு தருணங்களில் இவர்கள் இருவரும் யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கொழும்பு), யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் (கொழும்பு) ஆகியவற்றில் செயலாளர், தலைவர் போன்ற பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகித்து தத்தம் கல்லூரிகளுக்கு அருந்தொண்டாற்றினார்கள். கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற எளிமையான சர்வதேச மகளிர் தின ஒன்றுகூடலின்போது திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்கள் கௌரவிக்கப்பட்ட வேளையில் நானும் அங்கு

சென்றிருந்தேன்.

கலாநிதி அம்பலவாணர் வெளிநாட்டில் வசிப்பதால் அங்கு வர முடியவில்லை. ஆனால் சிவகாமியின் தாயாரும் ஏனைய நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரும் பெருந்திரளாக குழுமியிருந்து சிவகாமியை கௌரவித்தார்கள். சகோதர சங்கமான யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கொழும்பு) உறுப்பினர்கள் பலரை நான் அங்கு காண முடிந்தது. இதற்கு ஒரு முக்கிய காரணம் உள்ளது. எமது சங்கத்தின் எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் சிவகாமி தவறாமல் கணவருடன் வந்து பங்குபற்றுவார். எங்கள் நிதி சேகரிப்பு முயற்சிகளுக்கு என்றும் அவர் உறுதுணையாக இருப்பார். சகோதர சங்கங்கள் இரண்டும் மிகவும் நெருக்கமாக இயங்கி வந்ததற்கு இவரைப்போன்ற உறுப்பினர்களின் விடா முயற்சியே பிரதானமான காரணமாகும்.

1995 பழைய மாணவர் ஒன்றியம் ஆரம்பித்தோம். இங்கும் எமது இரு சங்கங்களின் உறுப்பினர்கள் முன் நின்று உழைத்தார்கள். கணவர் தலைமை தாங்கி ஆரம்பித்து வைத்த ஒன்றியத்தின் இணைச் செயலாளர்களில் ஒருவராக சிவகாமி அயராதுழைத்தார். இதன்மூலம் எமது சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய தொண்டு அளப்பரியது. விஞ்ஞானத் துறையில் குறிப்பாக இலங்கை இரசாயன (பட்டயவியலாளர்) சங்கம், இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம், இலங்கை ஆய்வுகூடங்களின் சங்கம் ஆகியவற்றின் அபிவிருத்திக்காக அவர் ஆற்றிய பணிகள் பலராலும் விவரித்து பாராட்டப் பட்டது.

எமது சகோதர சங்கத்தில் முக்கிய உறுப்பினராக பல்லாண்டு காலம் சேவை செய்த சிவகாமி அவர்கள் தம் குடும்பத்தினருடன் நீண்டகாலம் சுகமாக வாழ அருள் புரியுமாறு எல்லாம் வல்ல இறைவனை யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கொழும்பு) உறுப்பினர்களும் நானும் வணங்கித் துதிக்கின்றோம்.

செ. இராகவன்
தலைவர்
யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கொழும்பு)
2009 ஜுன்

கல்லூரி வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட திருமதி சிவகாமி அம்பலவாணர் தன் தந்தை திரு. அம்பலவாணர் வயித்தியலிங்கம் நினைவாக கல்விப் பொதுத்தராதர சாதாரண வகுப்பில் படிக்கும் கணிதத்தில் சிறந்த மாணவிக்கு வருடம்தோறும் பொன் விருது கொடுக்க 'THE VS TRUST' மூலம் ஒழுங்கு செய்துள்ளார்.

அத்துடன் தனது பேத்தியார் திருமதி காரைக்காலம்மை சங்கரப்பிள்ளை நினைவாக கல்விப் பொதுத்தராதர சாதாரண வகுப்பில் படிக்கும் சைவசமயத்தில் சிறந்த மாணவிக்கு வருடந்தோறும் பரிசு வழங்க ஏற்பாடு செய்துள்ளார்.

# Tiny Sweet Siva

Mrs. Sivakamy Ambalavanar, fondly known as Siva among her friends in Manchester, joined as a Technician in the Department of Pharmacology, University of Manchester, U.K. in February 1968. She worked for Professor Harold Schnieden while I was doing a PhD with Prof. Schnieden also. As a result Siva and I occupied the same room belonging to Prof. Schnieden.

I came to understand that the working environment at Manchester was quite different from that in Sri Lanka. Here staff members did not often show superiority to their juniors. Even the Professor treated his staff members as his friends. To begin with Siva found it difficult to adjust to the work environment. However, soon she picked up everything and adjusted to the new environment. Apart from Professor Schnieden, she helped Dr. George Mawer also in his research work.

As a Technician she helped most of the lecturers and Research Assistants voluntarily in their research work, in organizing and conducting practical classes for the undergraduates and functioning as invigilator in examination halls during her free time. As a result she gathered a fair amount of knowledge about Pharmacology. Apart from Prof. Schnieden and Dr. Mawer she was closely associated with Dr. Bob Foster, Dr. Arthur Weston, Dr. Barry Cox, Dr. John Fozard, Dr. Roger Wilson and myself.

Among the Technicians Mrs. Margaret Rodger was a friend and Mrs. Mona as a mother assisted Siva in her day to day activities.

Siva was always a keen worker. As Siva obtained good results for Professor Schnieden, he promoted her to Research Assistant from Technician in October 1970. He also told her to write her observations and conclusions from her work in the form of an M.Sc. thesis. Siva was very happy about the offer as she was always interested in higher studies. She received her M.Sc. degree by thesis.

Siva was a good companion for me in the work place. She was a pleasant lady and always had a smiling face. She walked so softly sometimes we do not know that she has come so close to us. Suddenly we hear that she was speaking to us. I invited Siva and her husband to our house on Newmarket Road in Ashton-under-Lyne so she has the chance to see an English person's house.

She was with us to the end of January 1972, when she left to return to Sri Lanka.

In June 1994, when Siva came to Manchester to see her son, she paid a visit to the Department of Pharmacology and met her old friends. She also met her friends who had retired at that time in their respective homes.

When my wife, Christine, and I went to Sri Lanka on a holiday in April 2005 we made it a point to meet Siva. Both of us were happy to meet each other and we had a long chat exchanging news.

I wish her well in her retirement.

Dr. Michael Hollingsworth,
Honorary Senior Lecturer,
Faculty of Life Sciences,
Manchester University,
7.04.2009

# Mrs. Sivakamy Ambalavanar

I have been working closely with Mrs. Sivakamy Ambalavanar at Bamber & Bruce (Pvt.) Ltd. since 1st June 1991. Prior to this date Bamber & Bruce was owned by John Keells Holdings Ltd. In 1991 I retired from the post of City Microbiologist and Chief Medical Officer of Health of the Colombo Municipal Council and was looking for a Laboratory to work with. This coincided with the decision of John Keells to sell Bamber & Bruce Laboratory. A few eminent scientists along with me jointly purchased Bamber & Bruce. Mrs. Ambalavanar was retained as the Chief Analyst of Bamber & Bruce.

Bamber & Bruce was shifted to 56 1/1, Vajira Road, Colombo 5 and started to function at the new location on 1st June 1991. After that the Laboratory was shifted to No. 4 Jayaratna Mawatha, Colombo 5 and then to the current location of 22/A Vijaya Kumaranatunga Mawatha, Colombo 5.

Mrs. Ambalavanar is a dedicated, sincere, methodical, skilled and hard-working person. She worked for Bamber & Bruce for the last 34 years. When she joined Bamber & Bruce on 15th February 1975 as Assistant Analyst, the total turnover of the company was merely Rs.3,000/- per month. Due to her single-handed capability the Company grew gradually and expanded more than 100 folds.

Due to her untiring efforts Bamber & Bruce received provisional accreditation under Accreditation Scheme for Testing Laboratories (ASTEL) way back in 1996 followed by proper accreditation under ASTEL and then accreditation under Sri Lanka Accreditation Board for Conformity Assessment (SLAB). Bamber & Bruce was the first Laboratory that has obtained accreditation in Sri Lanka. The accreditation number of Bamber & Bruce is 001.

During her tenure of employment she has trained the staff Members who worked with her. Most of them are holding high positions in the respective Institutions to which they are attached

since leaving Bamber & Bruce Ltd. while others are still employed at Bamber & Bruce.

Mrs. Ambalavanar is attached to scientific Institutions and Associations such as (a) Sri Lanka Association for the advancement of Science, (b) Institute of Chemistry, Ceylon, and (c) Sri Lanka Association of Testing Laboratories. She contributed tremendously to the betterment of these organizations. In recognition of her contributions she gradually moved up and held/holds Key positions in these organizations. She was the founder Secretary of the Sri Lanka Association of Testing Laboratories and functioned as the main person in the establishment of the Association.

Due to her association with many scientific organizations in Sri Lanka and her ability to communicate meaningfully with the scientific community involved in analytical chemistry at all levels, she has earned the respect of the scientific community in Sri Lanka as well as abroad. Her contacts in Sri Lanka and abroad indirectly helped in the progress of Bamber & Bruce.

Bamber & Bruce is Mrs. Ambalavanar and Mrs. Ambalavanar is Bamber & Bruce. It was difficult to separate the two while she was at Bamber & Bruce and it would be difficult to replace her.

She is retiring from the post of Chief Analyst on 1st April 2009, after which she will move to New Zealand to live with her daughter and grand children.

I wish her a long healthy retired life.

Dr. C. S. S. de Silva,
Managing Director,
Bamber & Bruce (Pvt.) Ltd.
30.03.2009

சர்வதேச மகளிர் தின விழாவில் கௌரவ அனுசரணையாளர்:-

சந்தன மாலை - திருமதி அபிராமி கயிலாசபிள்ளை.
பொன்னாடை - யா. இ. ம. க. ப. மா. சங்கம் கொழும்பு.
பரிசு - யா. இ. ம. க. ப. மா. சங்கம் கொழும்பு.
சான்றிதழ் - திருமதி விமலா மணிவாசகன்.

**‘பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் இப்பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்’**

‘யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு’
நடாத்திய சர்வதேச மகளிர் தின நிகழ்வு

இந்நிகழ்வு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் 08.03.2009 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு பிரதம விருந்தினரும், சங்கப் போஷகரும், யாழ் இந்து மகளிர் கல்லூரி முன்னாள் அதிபருமாகிய திருமதி சரஸ்வதி ஜெயராஜாவின் தலைமையில் நடைபெற்றது.

சங்க இசைக்குயில்களான திருமதி சிவச்செல்வி சிவலோகநாதனும் திருமதி குகஜோதி விஜயநாயகமும் தேவாரம் பாடினார்கள். சங்க அங்கத்தவர்கள் எல்லோரும் சேர்ந்து கல்லூரிக்கீதம் பாடினார்கள்.

பிரதம விருந்தினர் திருமதி சரஸ்வதி ஜெயராஜா, சங்கத் தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணர், உப தலைவிகள் செல்வி சற்சொரூபவதி நாதன், திருமதி அபிராமி கயிலாசபிள்ளை, திருமதி தயாநிதி செல்வநாயகம், பாராட்டுரை வழங்க வந்தவர்கள் திருமதி சிவச்செல்வி சிவலோகநாதன், செல்வி சீதா செல்லையா, செல்வி மாலினி ரட்ணசிங்கம், திருமதி ரிசெற் நைல்ஸ், திருமதி யமுனா கணேசலிங்கம், திருமதி சகுந்தலா துரைரட்ணம், திருமதி சுமதி ராஜசிங்கம், பொருளாளர் செல்வி சிவமலர் சுப்பிரமணியம், செயலாளர் திருமதி கௌரி ரமணா, யாழ்நாதம் ஆசிரியர் திருமதி விமலா மணிவாசகன், வருகை தந்திருந்தவர்களான திரு வி. கயிலாசபிள்ளை, திரு செ. ராகவன், திரு W.S. செந்தில்நாதன், வைத்திய கலாநிதி சே. ஆனந்தராஜா ஆகியோர் மங்கல விளக்கு ஏற்றினார்கள்.

சிறப்பு நிகழ்வாக யாழ் இந்து மகளிர் கல்லூரியின் புகழ் பூத்தமாணவியும் எமது சங்கத் தலைவியுமான **திருமதி சிவகாமி அம்பலவாணர்** சிறந்த பெண்மணியாகப் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

இவருக்குச் சங்கத்தின் சார்பில் திருமதி தயாநிதி செல்வநாயகம் பொன்னாடை போர்த்தார். திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தன் மாலை அணிவித்தார். திருமதி கௌரி ரமணா பரிசு வழங்கினார். திருமதி சரஸ்வதி ஜெயராஜா பட்டம் வழங்கினார். (பட்டவிபரம் 2ஆம் பக்கத்தில்)

இதழாசிரியர் திருமதி விமலா மணிவாசகன் முதற் பிரதியை பிரதம விருந்தினர் திருமதி சரஸ்வதி ஜெயராஜாவிற்கு வழங்கி யாழ்நாதம் வெளியீட்டை ஆரம்பித்து வைத்தார்.

இறுதியாகத் திருமதி கௌரி ரமணா நன்றி கூறினார். பின்னர் தேவாரம் பாடிவிழாவை நிறைவு செய்து வைத்தார்.

இந்த நிகழ்வைத் தொகுத்து வழங்கியவர் உப தலைவி திருமதி தயாநிதி செல்வநாயகம் அவர்கள். அவர்களின் தொகுப்பினை பார்த்தும் கேட்டும் மகிழ்ந்தோம்.

## சர்வதேச மகளிர் தின நிகழ்வு
## 08-03-2009 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 - 8.00
## முன்னுரை
## (Introduction)

மார்ச் மாதம் 8ந் திகதி சர்வதேச மகளிர் தினமாக உலகெங்கும் பிரகடனப்படுத்தப்பட்ட நாளாகும். இச் சம்பிரதாயத்திற்கு ஏற்ப எமது கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு அங்கத்தினர் இத் தினத்தில் ஒவ்வொரு வருடமும் அரும்பணி ஆற்றிய அல்லது எமது கல்லூரிக்கு புகழ் தேடிக் கொடுத்த எமது பழைய மாணவிகளைக் கௌரவித்து பாராட்ட வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

எமது கல்லூரி வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றி விஞ்ஞானத் துறையில் சிறந்து விளங்கி எமது கல்லூரிக்குப் புகழ் தேடிக் கொடுத்த பிரபல்யமான அங்கத்தவர்களில் ஒருவரான எமது சங்கத் தலைவி **திருமதி சிவகாமி அம்பலவாணரை** இவ் வருடம் கௌரவித்து வெகு விமரிசையான முறையில் பாராட்டு விழாவினைக் கொண்டாடிப் பல் வேறு கலை நிகழ்ச்சிகளையும் நடாத்துவதற்கு எண்ணினோம்.

ஆனால் எமது நாட்டில் நிலவும் அவல நிலை காரணமாக இவற்றினைத் தவிர்த்து அன்னாரை எளிய முறையில் கௌரவித்து, யாழ் நாத இதழினையும் வெளியிட உள்ளோம். இப்பொழுது நிகழ்வுகளைப் பார்த்து மகிழலாம்.

## திருமதி அபிராமி - வரவேற்புரை

இன்றைய வைபவத்தின் வரவேற்புரையை திருமதி அபிராமி கயிலாசபிள்ளை ஆற்றவுள்ளார். அதற்கு முன் அவரைப் பற்றிய ஒரு சில வார்த்தைகள்.

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய சகோதரியின் இனிய சுபாவம், எங்கள் எல்லோரையும் மகிழ்வித்துக் கொண்டேயிருக்கும். அவர் செய்யும் தன்னலமற்ற சேவைகள், சிரித்த முகத்தோடும், கருணை உள்ளத்தோடும், ஆற்றும் அளப்பரிய தொண்டுகள் எல்லாம் தனது ஆத்ம திருப்திக்காகவே ஆற்றி வருகின்றார் என்பதை நான் நன்கு அறிவேன்.

இத்தகைய ஒரு உத்தம புதல்வியை உருவாக்கிய பெருமை எமது கல்லூரியையே சாரும்.

இன்று பார்புகழும் பட்டயக் கணக்காளராகவும், அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவராகவும் செயலாற்றி வரும் திரு. வி. கயிலாசபிள்ளை அவர்களைத் திருமணம் செய்து கொண்டார். இத் தம்பதிகளைப் பார்க்கும் பொழுது "They are made for each other" என்ற கூற்று மற்றவர் உள்ளத்தில் பளிச்சென்று தோன்றுகின்றது.

திருமதி அபிராமி ஒரு சிறந்த இல்லத்தரசியாக மட்டுமல்ல, உற்றார் உறவினருக்கும், ஊர் மக்களுக்கும் கலங்கரை விளக்காக நம் மத்தியில் வாழும் Mother Theresa ஆக வாழ்ந்து வருகின்றார் என்பதைப் பெருமையுடன் கூற விரும்புகின்றேன்.

இப்பொழுது அபிராமி கயிலாசபிள்ளையை தமது வரவேற்புரையை நிகழ்த்துமாறு அன்புடன் அழைக்கிறேன்.

"பார் புகழ் சேவகி" திருமதி அபிராமி கயிலாசபிள்ளையின்

# வரவேற்புரை

முதற்கண் எல்லாம் வல்ல இறைவனுக்கு எனது வணக்கம் உரித்தாகுக. எங்கள் சங்கத் தலைவியும் இன்று சிறந்த பெண்மணியாக கௌரவம் பெற இருப்பவரும் ஆகிய திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்களே, பல சாவல்களுக்கு மத்தியில் யுத்த அனர்த்தம் காரணமாக எமது பாடசாலை அழிவுற்று இருந்த காலத்தில் பாடசாலையைப் பல வழிகளிலும் மறுசீரமைத்து ஓர் உன்னத நிலைக்குக் கட்டியெழுப்பிய ஓய்வு பெற்ற அதிபரும் எமது பிரதம விருந்தினருமான திருமதி சரஸ்வதி ஜெயராஜா அவர்களே, செல்வி மாலினி, திருமதி ரிசெற், திருமதி யமுனா, திருமதி சகுந்தலா, திருமதி சுமதி மற்றும் எமது சங்க அங்கத்தவர்களே, பெரியோர்களே, சகோதரிகளே, குழந்தைகளே உங்கள் எல்லோருக்கும் எனது மாலை வந்தனம்.

சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடுவதற்காக இங்கு வருகை தந்திருக்கும் உங்கள் அனைவரையும் வரவேற்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

விஞ்ஞானம் பெரிதும் வளர்ச்சியடைந்துள்ள இக்காலத்தில் பெண்கள் பல துறைகளிலும் முன்னேற்றமடைந்துள்ளனர். ஆண்களுக்குச் சமமாகப் பெண்கள் எல்லாத் துறைகளிலும் பதவி வகிக்கின்றனர். இருந்தாலும் உரிமைகள் என்று சொல்லும் பொழுது பெண்கள் பல இன்னல்களுக்கு உள்ளாகி வருவது இன்னும் இருந்து கொண்டே வருகிறது. இதற்காகச் சேவை செய்ய Women International போன்ற பல அமைப்புகளும் இப்பொழுது தொண்டாற்றி வருகின்றன.

ஒவ்வொரு வருடமும் எமது பாடசாலைக்குத் தொடர்புடைய ஒரு பெண்மணியைச் சர்வதேச மகளிர் தினத்தன்று கௌரவித்து வருகின்றோம். இன்று எமது சங்கத் தலைவியான திருமதி சிவகாமி அம்பலவாணரைக் கௌரவிக்க இருக்கின்றோம். அக்காலத்தில் Communist வயித்தியலிங்கம் என்றால் தெரியாதவர்கள் இல்லை. அவர் தன் கொள்கைகளைத் தன் சொந்த வாழ்க்கையிலும் கடைப்பிடித்த உத்தமர். அவரின் மூத்த புதல்வியே திருமதி சிவகாமி அம்பலவாணர். சுபாவத்தில் அமைதியானவர். தனது இளைய சகோதரர்களை நல்வழிப்படுத்தி, அவர்களுக்கு ஒரு முன் மாதிரியாகத் திகழ்பவர். சிவகாமியும் நானும் சிறுவயது முதல் பாடசாலைக்கு ஒன்றாகச் சென்று வந்தது இன்னும் பசுமையாக என் நினைவில் இருக்கிறது. பாடசாலைக் காலங்களில் ஒருவருக்கொருவர் ஒத்தாசையாகப் படிக்க வசதி செய்து கொடுப்பதையும் இன்னும் என்னால் மறக்கமுடியாது.

சிவகாமி எமது சங்கம் தொடங்கிய நாள் முதல் செயலாளர், பொருளாளர், தலைவி போன்ற பதவிகளை வகித்தவர். எல்லாவற்றிற்கும் மேலாக யாழ்நாதம் சஞ்சிகை ஆசிரியராகக் கடந்த 15 ஆண்டுகளாக இருந்து வந்துள்ளார். உண்மையில் சொல்லப்போனால்

இவரின் முயற்சி இல்லாவிடில் இச்சஞ்சிகை வெளிவந்திருக்கவே முடியாது என்று சொல்லலாம். இவரின் சிறப்புகள் பற்றிப் பலர் உரையாற்ற இருப்பதால் நான் அதிகம் உரையாற்றாது இவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து எமது பாடசாலைக்கும் சமூகத்திற்கும் தொண்டு செய்ய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

மீண்டும் இச்சர்வதேச மகளிர் தின நிகழ்விற்கு வருகை தந்த உங்கள் எல்லோரையும் வருக வருக என்று வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

நன்றி, வணக்கம்.

## *செல்வி சற்சொரூபவதி பாராட்டுரை*

*செல்வி சற்சொரூபவதி நாதனைத் தெரியாதவர்கள் யாருமே இல்லை - 40 வருடங்களுக்கு மேலாக அவரது கணீரென்ற குரல் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. கல்லூரிக்கு பெருமை தேடித்தந்து கொண்டேயிருக்கும் பழைய மாணவி.*

*எமது சங்கத்தின் முதன்மை வாய்ந்த தலைவியாக பலமுறை கடமை ஆற்றியுள்ளார் - எமது சங்கத்தின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய வித்தகி. அவர் அறிவின் ஊற்று என்றால் மிகையாகாது. அவர் ஊடகத்துறையில் பெற்றுள்ள பிரபல்யம் எமது சங்கத்தின் பிரபல்யத்திற்கும் பெரும் பங்களித்தது.*

*இதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் புகழ் பூத்த மாணவி சற்சொரூபவதியின் 40 வருட ஒலிபரப்புச் சேவைத் திறனைப் பாராட்டி கௌரவிக்கும் வைபவம் 2005ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 2ந் திகதி நடைபெற்ற பொழுது - சகலகலா வித்தகி என்ற விருது எமது சங்கத்தினால் வழங்கப்பட்டது. அத்துடன் ஒரு சிறப்பிதழும் வெளியிடப்பட்டது.*

*சமீபத்தில் கலாச்சார அமைச்சு சற்சொரூபவதிக்கு கலாபூஷண விருதினை வழங்கி கௌரவித்தது.*

*எல்லாத் திறமைகளும் ஒருங்கே இணையப் பெற்ற அறிவுக் களஞ்சியமாகிய சற்சொரூபவதி நாதனை ஒரு சில வார்த்தைகள் கூறுவதற்கு மேடைக்கு வரும்படி அழைக்கின்றேன்.*

## செல்வி சற்சொரூபவதி நாதனின் உரை

சங்கம் கடந்த சில ஆண்டுகளாக மகளிர் தினத்தை அநுஷ்டிப்பதுடன் கல்லூரி தொடர்பாக சிறந்து விளங்கிய அல்லது சிறந்த சேவை நல்கியவர்களை இத்தினத்தில் பட்டமளித்து கௌரவித்து வருகிறது. முதல் மரியாதை எனக்கு கிடைத்தது. சகலகலா வித்தகிப் பட்டம் வழங்கி சிறப்பு மலரும் வெளியிட்டு வைத்தனர் பழைய மாணவிகள் - தொடர்ந்து திருமதி. அபிராமி, திருமதி. தயாநிதி செல்வநாயகம் சென்ற வருடத்தில் திருமதி. சரஸ்வதி ஜெயராஜா இம்முறை திருமதி. சிவகாமி அம்பலவாணர் கௌரவிக்கப்பட இருக்கிறார்.

இதிலே சிறப்பு என்னவென்றால் விஞ்ஞானத் துறை சார்ந்த

சாதனைக்கு இவர் கௌரவிக்கப்படுவது. ஊடகம், சமூக சேவை, ஆசிரியத் தொழில் என்றெல்லாம் கௌரவம் அளிக்கப்பட்ட பின் - முதற் தடவையாக எமது கல்லூரியில் இருந்து இலங்கையில் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானத் துறையில் பிரவேசித்த இரு மாணவர்களில் ஒருவர் சிவகாமி. அவர் Microbiology துறையில் சிறந்து விளங்கினார். நுண்ணுயிர் தாவரவியலில் பெண்கள் சிறந்து விளங்க முடியும் என்கிறார் சிவகாமி. உடல் ரீதியாக அவர்களது மென்மையான விரல்கள் ஆய்வுக்கு உறுதுணையாக உள்ளன. பொறுமை - கவனம் - இவையும் பெண்களுக்கே உண்டு Fingers ஒரு Asset.

சிவகாமி குடும்பத்தில் மூத்த பெண். இவருக்கு மூன்று சகோதரிகள். லீலா, விமலா, அம்பிகா. அம்பிகாவும் பட்டதாரி. சகோதரர் இருவர் - கோபால் சங்கரப்பிள்ளை பொறியியலாளர். இவரின் மனைவி சந்திராவும் பட்டதாரி. அடுத்தவர் மோகன் சுப்பிரமணியம் - இவர் In Service Advisor (கல்வித் திணைக்களம்). இவரின் மனைவி Dr. நந்தினி. சிவகாமியின் மகளும் பொறியியலாளர். மகனும் பொறியியலாளர்.

தந்தையார் கம்யூனிஸ்ட் வயித்தியலிங்கம். இடதுசாரிகளில் நாம் படித்த காலத்தில் எங்களுக்கு நல்ல மரியாதை. புரட்சி மூலம் சமூகத்தில் சமத்துவத்தை அவர்கள் ஏற்படுத்துபவர்கள் என்று தனி மதிப்பு. சிவகாமி அரசியலில் நாட்டத்தைக் காண்பிக்கவில்லை ஆனால் அவரது தந்தை கொள்கைப்படி வாழ்ந்து பெயர் பெற்றவர். கணவரும் படித்தவர், கொழும்பு பல்கலைக் கழகத்தில் Maths Hons, U.K. யில் Ph.D. செய்து எம்மால் Dr. அம்பலவாணர் என்று அழைக்கப்படுபவர்.

என்ன பொருத்தம் இந்தப் பெயர்ப் பொருத்தம் என்று நாம் மூக்கில் விரலை வைப்போம். அம்பலவாணருக்குப் பொருத்தமாகச் சிவகாமி அண்ணர் கயிலாசபிள்ளைக்குப் பொருத்தமாக ஒரு அபிராமி. சிவகாமி வெளிநாட்டில் கல்வி கற்றவர். அவரது கல்வி பற்றி எனது மதிப்பிக்குரிய அக்கா தயாநிதி நிறையச் சொல்ல இருக்கிறார்.

சிவகாமி செயல் வீராங்கனை. நாம் நிறையப் பேசுவோம் - ஆனால் செயல் என்றால் அது சிவகாமிதான். நாம் பேசுவதை எந்த விதமான மறுப்பும் இன்றி - முகத்தில் உணர்ச்சிகளைப் பிரதிபலிக்காமல் அமைதியாக செவிமடுப்பார். செயலாளராகப் பதவி வகித்தவர். இவர் 'உம்' என்று இருக்கிறாரே என்று எண்ணினோம். ஆனால் செயலாளரின் அறிக்கைகளை அவர் வாசிக்கும் போது நினைப்போம் ஒரு சின்ன அம்சத்தைக் கூடவிட்டு வைக்காது அறிக்கையிடுவதில் திறமைசாலி. யாழ் நாதம் சிவகாமியின் Brain Child. எங்கே இது தொடர்ந்து வெளிவரப் போகிறது என்று எண்ணினோம். ஆனால் சஞ்சிகை தொடர்கிறது. அது எமது சங்க நடவடிக்கையின் பதிவேடாகவும், ஒரு ஆவணமாகவும் பேணத்தக்கதாக உள்ளது.

சிவகாமியை நாம் சிறு வட்டத்துள் பார்க்கிறோம். ஆனால் அவர் Institute of Chemistry யில் பெரும் பதவி வகித்து Paper சமர்ப்பித்துள்ளார். இனி இப்பொழுது Chief Analyst என்ற அவரது

தொழில் ரீதியாக Accredited Lab. அதில் Accreditation என்ற உதவி பயன் படுத்தப்பட்டு பல்வேறு இடங்களில் பொருட்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு வெவ்வேறு முடிவுகள் வருவதைத் தவிர்த்து, பல ஆய்வுகளையும் ஒரு முகப்படுத்தி ஒரே முடிவாக வெளியிடும் இன்றைய போக்கு. இதில் முக்கிய பங்கை எமது சிவகாமி வகிக்கிறார் என்பது எமக்கு பெருமை தருகிறது.

இவரது கணவர் Planing Ministry யில் முக்கிய பதவி வகித்தார். முன்னாள் பிரதமரும் ஜனாதிபதியுமான R. பிரேமதாசாவின் மேலதிகச் செயலாளராக இருந்தவர். நிழல் போல் எப்பொழுதும் மனைவியின் செயற்பாட்டுக்கு பின்னணியில் இருந்து கை கொடுப்பவர். இவரும் வடக்கு கிழக்கு பிராந்திய பாடசாலைகளின் வளர்ச்சிக்கு ஆற்றிவரும் பங்கு அளப்பரியது.

நல்லதொரு தங்கை விமலா மணிவாசகன். அக்காவின் யாழ் நாதம் வெளியீட்டுக்கு உறுதுணையாற்றுபவர். இன்று இங்கு நாம் பேசி முடித்ததும் கையில் வைத்திருக்கும் பேச்சுப் பிரதிகளை உடனே வாங்கி வைத்துவிடுவார். அடுத்த யாழ் நாதத்தில் அவை பிரசுரிக்கப்படுவதற்கு இன்றே செயலில் இறங்கி விடுவார். பேப்பரில் எழுதாமல் மனதில் தோன்றியதை பேசுவோம் என்று முதலில் நினைத்தேன். விமலாவை கஷ்டத்துக்கு உள்ளாக்கக் கூடாது. அத்துடன் நான் மனப்பூர்வமாகச் சிவகாமியைப் பாராட்டிப் பேசுபவை யாழ் நாதத்தில் பதிவாக வேண்டும் என்று பேப்பரில் எழுதிவிட்டேன்.

எனக்கு முதல் மரியாதை நடைபெற்ற போது சிவகாமி பிரதான பங்கு ஏற்றார். எப்பொழுதும் எனது ஆலோசனைக்கு மதிப்பு அளிப்பார். என்ன பழையவர்கள் தானே என்று அவர் அலட்சியப் படுத்துவது கிடையாது. இதனால் இன்று எனது மனநிலை எம் குடும்பத்தில் ஏற்பட்ட பாரிய இழப்பால் பாதிக்கப்பட்டிருப்பினும், சிவகாமியைப் பாராட்டிச் சில வார்த்தைகள் பேசுவது எனது கடமை என்று எண்ண வைத்தது. அவர் இங்கிருந்து ஏன் எமது நாட்டை விட்டு வேறுநாடு செல்லினும் கற்றோருக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு என்பது போல் சிறந்த தொழில் புரியும் வாய்ப்பு அவருக்குக் கிடைக்கும். அவர் எமது நாட்டிற்கும், கல்லூரிக்கும் மேலும் புகழ் சேர்க்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

## *திருமதி தயாநிதி செல்வநாயகம்*

*இவர் கல்லூரியின் புகழ்பூத்த மாணவிகளில் ஒருவர் ஆவார். எங்கள் கல்லூரி 1943இல் ஸ்தாபிக்கப்பட்ட நாளில் இருந்து கல்வி கற்று 1953இல் பல்கலைக்கழகம் சென்ற முதல் மாணவி. இவர் 1957இல் கலைப்பட்டதாரியானார். பேராதனை பல்கலைக்கழகத்தில் உதவிப் புவியியல் விரிவுரையாளராக இருந்த அமரர் திரு செ. செல்வநாயகத்தை காதல் திருமணம் செய்து கொண்டார்.*

*இவர் ஒரு சிறந்த ஆசிரியர் என்பதற்கு எடுத்துக் காட்டாக மூன்று ஆண்டுகள் மட்டுமே இவரிடம் கல்வி பயின்ற ஹஷிம் உமர் "எனக்கு தமிழைக் கற்றுத் தந்தது மட்டுமல்ல, தமிழ் மீது பற்றை ஏற்படுத்தியதுடன், பிறருக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தை இளமையில் என் நெஞ்சில் விதைத்தவருமாவார்."*

*என்று கூற கேட்டிருக்கிறோம்.*

*துர்அதிர்ஷ்டவசமாக இளமையிலேயே தன் கணவரை இழக்கும் கொடுமையான நடக்கக் கூடாதது நடந்த போதும் 'எதையும் தாங்கும் இதயம் உண்டு.' என்று மனவலிமையோடு தயாநிதி அக்கா தன் காலத்தை கழித்து வருகின்றார்.*

*அமரர் திருமதி புஷ்பம் சுப்பிரமணியத்துடன் இணைந்து செயலாற்றி 1993ஆம் ஆண்டு ஆகஸ்ற் மாதம் 21ஆம் திகதி 'பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு' சம்பிரதாய முறைப்படி அங்குரார்பணம் செய்து வைத்தார்கள். அன்று தொட்டு இன்று வரை சங்க வளர்ச்சிக்கு அயராது உழைத்து வருகின்றார்.*

*அமரர் திரு செ. செல்வநாயகம் கொம்மியூனிஸ்ட் கட்சியில் முக்கிய அங்கத்தவராக இருந்த அமரர் திரு அ. வயித்தியலிங்கத்தின் மீது பெரும் மதிப்பு கொண்டதால் அவருடன் நெருங்கிய உறவை வைத்திருந்தார். தனது கணவரின் மூலமாக அவரின் அறிமுகம் தயாநிதி அக்காவுக்கு ஏற்பட்டது. பின்னர் சங்கம் தொடங்கிய காலத்தில் திருமதி சிவகாமியின் அறிமுகம் தயாநிதி அக்காவுக்கு ஏற்பட்டது. திருமதி சிவகாமியின் சாந்தமான குணமும், பிறர் மீது அவர் காட்டும் அன்பும், தன்னை 'அக்கா' என அழைத்து பழகும் விதமும் பிடித்துக்கொள்ளவும், அமரர் திரு அ. வயித்தியலிங்கத்தின் மகள் என தெரிந்ததும் இருவருக்கும் நெருங்கிய தோழமை ஏற்பட்டது.*

*இவர் ஒரு சில வார்த்தைகள் பேசினார்.*

புகழ்பூத்த மாணவி தயாநிதி செல்வநாயகத்தின் உரை

# திருமதி சிவகாமி அம்பலவாணரின் சாதனைகள்

எனக்கு முன் உரையாற்றிய அபிராமி, சற்சொரூபவதி ஆகியோர், சிவகாமி அம்பலவாணர் பற்றி தங்கள் கருத்துக்களைக் கூறினர். அபிராமி, நெருங்கின உறவினர்கள் சார்பிலும், சற்சொரூபவதி யாழ்/இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு இன் சார்பிலும் பேசினார்கள். எனது அன்பிற்கும் மரியாதைக்குமுரிய சிவகாமி பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறவிரும்புகின்றேன்.

சிவகாமி அம்பலவாணர் என்றால் ஒரு சாந்தமான, பண்பான, ஓரிரு வார்த்தைகளோடு சம்பாஷணையை நிறுத்திவிடும் சுபாவம் உள்ள பெண் என்றுதான் எல்லோருடைய எண்ணக்கருத்தும். என்னைப் பொறுத்தவரை பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய ஒரு விஞ்ஞானப் பட்டதாரி - Bamber & Bruce Ltd என்ற நிறுவனத்தில் Analyst ஆக கடமை ஆற்றுகின்றார் என்று மட்டுந்தான் எண்ணியிருந்தேன். ஆனால் இன்றைய விழாநாயகியைப் பற்றி மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக அவரின் Bio-data வை, தங்கை விமலாவிடம் பெற்றுக் கொண்டேன். அதனை விரிவாக படித்தபொழுது நான் ஆச்சரியத்திற் குள்ளாகிவிட்டேன்.

சிவகாமி கல்வித்தகைமைகள், பெற்ற பட்டங்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், அறிவாற்றல், செயற்திறன் - இவை யாவற்றையும் உள்ளடக்கி ஒரு சாதாரண குடும்பப்பெண் போல உலா வந்திருக்கிறார் என்றால் “நிறைகுடம் தழும்பாது” என்ற கூற்று எவ்வளவு உண்மை என்பதை நிரூபித்து விட்டார்.

எமது கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு ஆரம்பித்த காலத்தில் தான் எனக்கு சிவகாமி அறிமுகமானார். அன்றிலிருந்து அவர் என்னுடன் மிகவும் அன்பாகவும் பண்பாகவும் பழகி வருகின்றார். அவர் என்னை “தயாநிதி அக்கா” என்று அழைக்கும் விதம் எனக்கு நன்றாகப்பிடிக்கும். ஒரு அறிவுக் களஞ்சியமாகத் திகழும் சிவகாமியின் கல்வித் தகைமைகளை இங்கு கூறுதல் சாலப்பொருந்தும்.

சிவகாமியின் கணவர் கலாநிதி அம்பலவாணர் அவர்கள் University of Manchester, U.K யில் Ph.D. படிப்பினை மேற்கொள்வதற்காக இங்கிலாந்து சென்ற பொழுது, சிவகாமியும் கூடவே அங்கு சென்றார். அத்தருணம் அவரும் அதே பல்கலைக்கழகத்தில் M.Sc. in Pharmacology செய்து முடித்தார். அவருடைய ஆய்வுக்கட்டுரை (M.Sc. Thesis) அவரது மேற்பார்வையாளரினால் (Supervisor) வெகுவாகப் பாராட்டப்பட்டது. அது மட்டுமல்லாது சிவகாமியுடன் அவர்களும் இணைந்து மேலும் பல ஆய்வுக்கட்டுரைகள் வெளியிட்டுள்ளனர். (Joint publications with Prof. H. Schnieden and Dr. R. W. Foster in foreign journals) அத்தடன் பல புகழ் பெற்ற நிறுவனங்களில் முக்கிய பதவிகளை வகித்து மேலும் பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளார்.

இலங்கை திரும்பியதும் Bamber & Bruce Ltd என்னும் நிறுவனத்தில் Chief Analyst ஆகப் பல வருடங்கள் பணி புரிந்து பல ஆக்கபூர்வமான காரியங்களைச் சாதித்துள்ளார். அங்கு கடமை புரியும் எல்லோர் மனத்திலும் நன்றாக தடம் பதித்துவிட்டார். அவர் மீது வைத்திருக்கும் அன்பு, மரியாதை, வழிகாட்டல் போன்றவற்றை எடுத்துக் கூறுவதற்காகவும், தமது பாராட்டுக்களைத் தெரிவிப்பதற்காகவும் அவரது நலன் விரும்பிகள், இம் மேடையில் சமூகமளித்திருக்கின்றனர். இவ்வளவு சாதனைகளைப் புரிந்தும் அமைதியாக, அடக்கமாக இருக்கின்றீர்களே, எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றது என்று அவரிடம் வினவிய பொழுது, ஒரு புன்னகையுடன் “அக்கா, Simplicity is the Key to Success” என்று பளிச்சென்று பதில் கூறினார். அதன் மகத்துவத்தை நானும் புரிந்து கொண்டேன்.

இவையெல்லாவற்றிலும் மேலாக சிவகாமி அம்பலவாணர் எமது பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு இன் துரித வளர்ச்சிக்கும் அதன் புகழை உலகெங்கும் பரப்பி, பல நாடுகளில் சங்கங்கள் நிறுவுவதற்கும் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்துள்ளார். எமது சங்கம் புத்துணர்வுடனும் பொலிவுடனும் இன்றும் மிளிர்வதற்கு அவர் பெரும்பங்கு ஆற்றியுள்ளார். அது மட்டுமன்றி கொழும்புச் சங்கத்தின் வளர்ச்சியையும், பழைய

மாணவிகளின் திறமையையும், ஆற்றலையும் வெளிப்படுத்துவதற்கு இவரின் முதல் முயற்சியாக ஒரு சஞ்சிகை "யாழ் நாதம்" என்ற பெயரினைப் பெற்று; பல பழைய மாணவிகளின் கட்டுரைகள், கதைகள் போன்ற அம்சங்களை உள்ளடக்கி 1995இல் வெளியாகியுள்ளது. இந்த யாழ் நாதம் சஞ்சிகை எங்கள் செயற்பாடுகளை வெளிக்கொண்டு வரும் ஒரு ஆவணமாக, ஆண்டிற்கு ஒருமுறை மலர்கின்றது.

அத்துடன் உலகளாவிய ரீதியில் இங்குள்ள பழைய மாணவிகளுடன்; கனடா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளிலுள்ள பழைய மாணவிகள் தொடர்பு கொண்டு எமது கல்லூரியின் வளர்ச்சியை வளமாக்கும் வண்ணம் www.jhlc.lk என்ற இணையதளத்தையும் (website) ஸ்தாபித்தார். அது இன்றும் தொடர்ந்து நடைமுறையில் உள்ளது - இத்தகைய அரிய முயற்சியின் காரணகர்த்தா வேறு யாருமில்லை - எங்கள் சிவகாமியே தான். இதற்கு பொறுப்பாகவுள்ள சிவகாமி தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணித்து செயற்பட்டு வருகின்றார்.

அது மட்டுமா - எமது சங்கம் உருவாகிய நாள் முதல் - she played multiple roles - யாழ் நாதத்தின் ஆசிரியராக கடமை புரிந்த அதே வேளையில், சங்கத்தின் தலைவியாகவோ அல்லது செயலாளராகவோ அல்லது பொருளாளராகவோ செயலாற்றி வந்தார். இப்படியான ஒரு பெண்மணியின் அளப்பரிய சேவைகள் தொடர்ந்தும் எமது சங்கத்திற்கு கிடைக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

## *திருமதி சிவச்செல்வி சிவலோகநாதன்*

*சிவச்செல்வி சிவலோகநாதன் 1958ஆம் ஆண்டு யாழ்/இந்து மகளிர் கல்லூரியின் வகுப்பு 8இல் வந்து சேர்ந்து மூன்று வருடங்கள் கல்வி கற்றுள்ளார். அக்காலப் பகுதியில் சிவகாமி அம்பலவாணரும் அதே வகுப்பில் கல்வி கற்றுக் கொண்டிருந்த வேளையில் அவர்களின் நட்பு ஆரம்பித்தது. இவ்விருவரும் மிகவும் அமைதியான சுபாவம் கொண்டவர்கள்-மென்மையான பேச்சு-வெகு இலகுவில் பழகிக் கொள்ளமாட்டார்கள் இதனால் அவர்கள் நல்ல நண்பர்களானார்கள். இந்த அடிப்படையில் அவர்களது நட்பினைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறும்படி சிவச்செல்வியை அழைக்கின்றேன்.*

## திருமதி சிவச்செல்வி சிவலோகநாதனின் உரை

சங்கத் தலைவி அவர்களே, பிரதம விருந்தினர் திருமதி சரஸ்வதி ஜெயராஜா அவர்களே, சகலகலா வித்தகி செல்வி சற்செருபவதி நாதன் அவர்களே, பார்புகழ் சேவகி திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்களே, புகழ்பூத்த மாணவி திருமதி தயாநிதி செல்வநாயகம் அவர்களே, விழாநாயகி திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்களே, மற்றும் இங்கு வருகை தந்திருக்கும் பெரியோர்களே, சகோதரிகளே உங்கள்

அனைவருக்கும் அன்பார்ந்த வணக்கம்.

தாய் மொழிக்கும் நமது நாட்டிற்கும் பெருமை தேடித்தந்து கொண்டிருக்கும் மாணவிகளையும் இன்னும் கடல் கடந்து சென்றாலும் அங்கெல்லாம் கல்லூரிக்குப் பெருமை தேடித்தந்து கொண்டிருக்கும் மாணவிகளை எல்லாம் உருவாக்கிய கல்லூரியின் பழைய மாணவிகளில் நானும் ஒருத்தி என்பதில் மிகவும் பெருமை அடைகின்றேன். அதிலும் என்னுடன் படித்த மாணவி சிவகாமி அம்பலவாணர் இன்று கௌரவிக்கப்படுவதையிட்டு மேலும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

உங்கள் எல்லோருக்கும் சிவகாமியை ஒரு சிறந்த கல்வியாளராகவும், நுண்ணுயிரியல் துறையில் உயர் பதவி வகிக்கும் ஒரு தலைவியாகவும், தான் கற்ற கல்லூரிக்காக அல்லும் பகலும் அயராது உழைக்கும் ஒரு தியாகி ஆகவும், கல்லூரிக்கு வேண்டிய உதவிகளை வாரி வழங்கும் வள்ளல் ஆகவும் தான் தெரியும்.

ஆனால் நான் எட்டாம் வகுப்பில் இந்து மகளிர் கல்லூரியில் சேர்ந்த பொழுது சிவகாமி ஒரு சிறிய உருவத்துடன் ஒரு அழகான ஆரம்ப பாடசாலை மாணவி போலத்தான் தோற்றம் அளித்தார். அதிகம் கதைக்க மாட்டார். ஆனால் முதல் நாளே என்னுடன் கதைத்த மாணவி. சில நாட்களில் நாங்கள் நண்பிகளாகிவிட்டோம். எங்கள் இருவரினது பெயர்களில் ஒரு ஒற்றுமை அவர்கள் சிவகாமி நான் சிவச்செல்வி இருவரது தந்தையரும் மேல் படிப்புக்காக இலண்டன் சென்று வந்தவாகள். கொம்மியூனிஸ்ட் கட்சியில் முக்கிய அங்கத்தவர்கள். கல்லூரி அதிபர்களாக இருந்தவர்கள். எங்களை பாடசாலைக்கு கூட்டி வருபவர்களும் எங்கள் தந்தையர்தான். இந்த ஒற்றுமைகளினாலோ என்னவோ, எமக்கு நெருங்கிப் பழகும் வாய்ப்பு இருந்தது.

சிவகாமி படிப்பில் மிகவும் கெட்டிக்காரி அதுவும் கணித பாடம் என்றால் அவர்களுக்குத்தான் முதலிடம். வகுப்பில் ஆசிரியை கணக்கு செய்யக் கொடுத்தால் சிவகாமிதான் முதலில் செய்து முடித்து கொப்பி கொடுப்பார். நிறைய Red Star வாங்குவார் ஆனால் ஆடம்பரம் சிறிதும் இல்லை. எது கேட்டாலும், புகழ்ந்தாலும் ஒரு புன்சிரிப்பு.

எங்கள் கல்லூரியில் இருந்து அந்த காலத்தில் கலைப்பிரிவில் இருந்து வருடாவருடம் பல மாணவிகள் பல்கலைக்கழகத்திற்கு செல்வார்கள். ஆனால் விஞ்ஞானப் பிரிவில் பல்கலைக்கழக அனுமதி பெற ஆரம்பித்த ஒருசில மாணவிகளில் சிவகாமியும் ஒருவர்.

பல வருடங்களின் பின் எங்கள் பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு ஆரம்ப விழாவில் சிவகாமியை சந்தித்தேன். அப்பொழுதும் அதே அடக்கம், அதே சிரிப்பு, அதே பதுமை, அதே மென்மை. இப்படியான ஒரு மாணவி எங்கள் சங்கத்திலும் சரி தான் வேலை பார்க்கும் இடத்திலும் சரி உயர் பதவிகளையும் தலைமைத்துவத்தையும் ஏற்று தன் கல்லூரியின் வளர்ச்சிக்கும், புகழ்ச்சிக்கும் அயராது உழைத்துக் கொண்டு இருக்கின்றார் என்றால் எவ்வளவு போற்றப்பட வேண்டும். வளரும் மாணவிகளுக்கு இவர் ஒரு சிறந்த உதாரணம். ஒரு வழிகாட்டி.

இவர் இவ்வளவு பேரும் புகழும் பெற உறு துணையாக இருக்கும் கணவரைத்தான் நாம் முதலில் பாராட்ட வேண்டும். சிவகாமியின் பணி மேலும் மேலும் தொடர வேண்டும். நல்ல ஆரோக்கியத்தையும், நிறைந்த மனச் சந்தோஷத்தையும் இறைவன் அருள வேண்டும் என வணங்கி விடைபெறுகிறேன்.

## *சீதா செல்லையா*

*செல்வி சீதா செல்லையா ஆங்கிலத்தில் மிகவும் பாண்டித்யம் பெற்றவர். அவர் 1959-60ஆம் ஆண்டுகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் G.C.E O/L வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் பொழுது சிவகாமியுடன் நட்பு ஏற்பட்டது. இருவரும் இரு வருடங்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பினை மேற்கொண்டனர். அங்கும் ஒரே Hall Of Residence இல் தங்கியிருந்தனர். அவர்களின் நட்பு இன்னமும் நிலைத்துள்ளது.*

*சீதா செல்லையா தற்பொழுது Asian International School இல் உப அதிபராகக் கடமை யாற்றுகின்றார். Chemistry பாடத்தினை ஆங்கில மொழி மூலம் புகட்டும் திறமை வாய்ந்தவர். அவர் சாந்தமான பேச்சு வன்மையும் சிறந்த ஆளுமையும் கொண்டுள்ள பெண்மணி. சிவகாமி பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறும்படி அவரை அழைக்கிறேன்.*

## செல்வி சீதா செல்லையாவின் உரை

எங்கள் அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்திருக்கும் திருமதி சரஸ்வதி ஜெயராஜா அவர்களுக்கும், யாழ் இந்து மகளிர் பழைய மாணவிகள் சங்கம், கொழும்பு இன் தலைவி அவர்களுக்கும், சங்க அங்கத்தவர்களுக்கும் மற்றும் பழைய மாணவிகள் யாவருக்கும் எனது அன்பார்ந்த மாலை வணக்கம்.

இன்று சிறந்த பெண்மணியாகப் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்படும் திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்களைப்பற்றி ஏற்கனவே எனக்கு முன் பேசியவர்கள் நிறையக் கூறிவிட்டார்கள்.

இருந்தாலும் பல்கலைக்கழகத்தில் நாம் இருவரும் ஒரே காலத்தில் விஞ்ஞானப்பீடத்திலும், சங்கமித்தா விடுதியிலும் கழித்த பசுமையான காலத்தை நினைவு கூர விரும்புகிறேன்.

சிவகாமி ஒரு அமைதியான, அடக்கமான தோற்றமுடைய மாணவியாக இருந்த போதிலும், அவர் கல்வியில் சூரப்புலியாக சிறந்து விளங்கினார்.

அவர் சகமாணவர்களுடன், எவ்வித போட்டி மனப்பான்மையுமின்றி தனது திறமைகளைப் பகிர்ந்து, அவர்களின் முன்னேற்றத்திற்கும் பங்களித்தார். அத்துடன் விரிவுரையாளர்களின் மதிப்பைப் பெற்று பிரபல்யமாக விளங்கினார்.

சிவகாமி எப்பொழுதும் நிதானமாகக் காணப்படுபவர். ஒரு நாள் மிகவும் பரபரப்புடன் காணப்பட்டார். நான் சுந்தரி என்ற அவருடைய சினேகிதியிடம்

கேட்டேன் "ஏன் சிவகாமி இன்று 'excited' ஆக இருக்கிறா" என்று. அவர் சிரித்து விட்டுக் கூறினார், "ஏன் உமக்குத் தெரியாதா, சிவகாமிக்கு திருமணம் நிச்சயக்கப்பட்டு விட்டது., இன்று அவருடைய 'would be hubby' வருகிறார்" இதிலிருந்து நான் என்ன அறிந்தேன் என்றால், சிவகாமி தன்னைப் பற்றியோ அல்லது வேறு யாரைப் பற்றியோ தேவை இல்லாமல் பேசுவதில்லை. அத்துடன் தற்பெருமை பேசும் பழக்கமும் அவரிடம் இருக்கவில்லை.

சிவகாமி புத்தகப் படிப்புடன் மட்டும் இருக்கவில்லை. சிவகாமியுடன் சேர்த்து எங்களில் ஐந்து பேர். நாங்கள் வார இறுதியில் கண்டிக்கு சென்று 2 மணி show பார்த்து பின் Leons cafe இல் சிற்றுண்டியும் ஐஸ்கிறீமும் சாப்பிட்டு வரும் நாட்களை மறக்க முடியாது. இவ்வாறு பல சந்தோஷமான நிகழ்வுகளைக் கூறலாம்.

அத்துடன் நாங்கள் பகிடி, விநோதமாக ஏதாவது செய்ய முனைந்தால் சிவகாமி அதன் பின் விளைவுகளை எடுத்துக் கூறி எங்களை பாதுகாத்து இருக்கின்றார். அவற்றை எல்லாம் இப்பொழுது நினைக்கும் போது, சிவகாமிக்கு நான் நன்றி கூற வேண்டும்.

சிவகாமி திருமணமாகிய பின், அவர் கணவர் Dr Ambalavanar உடன் UK சென்று University of Manchester இல் M.Sc. பட்டப்படிப்பையும் வெற்றிகரமாக முடித்தார். அங்கும் Supervisors இடமிருந்து பாராட்டுப் பெற்றார்.

சிவகாமியை, மகளாகவும், சகோதரியாகவும், மனைவியாகவும், தாயாராகவும் அடைவதற்கு அவருடைய குடும்பத்தினர் பெரிதும் கொடுத்து வைத்தவர்கள்.

Bamber & Bruce என்னும் தனியார் நிறுவனத்தில் பல வருடங்களாக சேவையாற்றி வரும் சிவகாமி இன்று சமுதாயத்தில் ஒரு நல்ல பெண்மணியாக இருப்பதை எண்ணி நான் மிகவும் பெருமைப் படுகிறேன். அவர் மேலும் சமுதாயத்திற்கு சேவையாற்ற இறைவன் ஆரோக்கியத்தையும், வலுவையும் கொடுக்க வேண்டும் என பிரார்த்திக்கிறேன்.

நன்றி, வணக்கம்
Sita Chelliah
(Vice Principal, Asian International School, Colombo—5)

### செல்வி மாலினி ரட்ணசிங்கம்

*செல்வி மாலினி ரட்ணசிங்கம் Bamber & Bruce Ltd நிறுவனத்தில் 1975தொடக்கம் 1979 ஆண்டு வரை Assistant Analyst ஆக கடமை புரிந்த வேளையில் சிவகாமி அம்பலவாணரின் நட்பு கிடைத்தது. அந்தப் பசுமையான நினைவுகளை எங்களுடன் பகிர்ந்து கொள்வதற்காக அவரை அன்புடன் மேடைக்கு அழைக்கின்றேன்.*

## செல்வி மாலினி ரட்ணசிங்கத்தின் உரை

பிரதம விருந்தினர் திருமதி சரஸ்வதி ஜெயராஜா அவர்கள், சங்கத் தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்கள், சர்வதேச மகளிர் தின நிகழ்வை சிறப்பிக்க வந்துள்ள அன்பர்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு எனது சிற்றுரையை ஆரம்பிக்கின்றேன்.

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவியான திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்கள் சிறந்த பெண்மணியாக தேர்ந்தெடுக்கப்பட்டு இச்சபையிலே பாராட்டப்பட்டு கௌரவிக்கபடுதல் எமக்கு எல்லாம் பெருமைக்குரிய விஷயமாகும்.

"தோன்றிற் புகழுடன் தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்பது திருக்குறள். உலகில் பிறந்த எல்லா பெண்களுக்கும் இப்படியானதொரு பாராட்டு, பெருமை கிடைப்பதில்லை அப்படி கிடைப்பதற்கு சமூகத்திற்கு அளப்பரிய தொண்டுகளும், செயற்கரிய செயல்களும் ஆற்றியிருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட பெருமைக்குரிய திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்கள் எனக்கு 1975ஆம் ஆண்டு அறிமுகமாகி இன்று வரை நன்கு பரிச்சயமானவர். இவர் நான் பணியாற்றிய Bamber & Bruce நிறுவனத்தில் எனக்கு மேலதிகாரியாக பணியாற்றினார். இவர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, கண்டிப்பு அனைத்தும் ஒருங்கே அமைந்த பெண்மணியாக திகழ்ந்தார்.

இவருடன் பணியாற்றிய காலத்தில் எமக்கு தெரியாத விடயங்களை தெளிவுபடுத்தியும் வழிகாட்டியும் எவ்வித இடையூறுமின்றி நாம் அமைதியாக பணியாற்ற உதவினார். சக ஊழியர்களுடன் நட்பாகவும், தொழில் சார்ந்த விடயங்களில் ஒத்துழைப்பு வழங்குபவராகவும் விளங்கினார்.

இவருடைய வழிகாட்டலின் கீழ் நான் தொழில் அனுபவம் பெற்றதால் எனக்கு CISIR என்ற பிரபல ஆராய்ச்சி நிலையத்தில் பணிபுரியும் வாய்ப்பு கிடைத்தது. அதற்கு நான் இச்சந்தர்ப்பத்தில் அவருக்கு எனது நன்றியை தெரிவிக்க விரும்புகின்றேன். இவரின் தொழில் திறமையாலும், ஆளுமை பண்பினாலும் பதவி உயர்வு பெற்று இன்று அந்த நிறுவனத்தில் தலைமை பதவியை வகித்து வருவது இவரது திறமைக்குச் சான்றாகும். இதனால் இவர் பயின்ற கல்லூரிக்கும், பெண் குலத்திற்கும், இவரது பெற்றோருக்கும், ஊருக்கும் பெருமை தேடித்தந்துள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்தில் யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் ஒன்றிணைந்து அவரை பாராட்ட முன் வந்தது எமக்கும் பெருமைக்குரிய விடயம் என்றே கருதுகின்றேன்.

அந்த கல்லூரியில் கல்வி பயின்று வரும் மாணவிகளுக்கு இவர் ஒரு

எடுத்துக்காட்டு. இவரை பின்பற்றி மாணவிகள் கல்வி பயின்று நல்ல நிலைக்கு வந்து பெருமை சேர்க்க வேண்டும் எனக் கூறிக் கொண்டு எனது சிற்றுரையை முடித்துக் கொள்வதோடு இச் சிறப்பான விழாவில் எனக்கு இச் சந்தர்ப்பத்தை அளித்ததற்கு விழா அமைப்பாளர்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

வணக்கம்.

## Mrs. Triset Niles

*திருமதி ரிசெற் நைல்ஸ் சிவகாமியுடன் Bamber &Bruce Ltd நிறுவனத்தில் 1986ஆம் ஆண்டு பிற்பகுதியில் இருந்து பணிபுரிந்துள்ளார். இவர்கள் இருவரும் பத்து வருடங்கள் இந்த நிறுவனத்தில் ஒன்றாக வேலை பார்த்துள்ளனர். திருமதி நைல்ஸ் தற்பொழுது Astron Pharmaceutical Laboratory இல் கடமை புரிகின்றார்.*

*பத்து வருட கால நட்பின் நீங்காத நினைவுகள் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறுவார்.*

### திருமதி ரிசெற் நைல்ஸ்சின் உரை

விசேட அதிதியாக வருகை தந்துள்ள திருமதி சரஸ்வதி ஜெயராஜா அவர்கட்கும், அன்பிற்குரிய Madam அம்பலவாணர் அவர்கட்கும், இன்று மகளிர் தினத்தையொட்டி இந்த விசேட நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்திய யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு குழுவினருக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்!

அன்பிற்கும் கௌரவத்திற்கும் உரித்தான Madam அம்பலவாணர் அவர்களைப் பற்றி சில வார்த்தைகள் பேசக்கூடுமா? என்று என்னைக் கேட்ட போது எனக்குப் பெரும் அதிர்ச்சியாய் போய்விட்டது. நானா? அதுவும் தமிழிலேயா? என்ற கேள்வி என் மனதில் எழுந்தது. ஆயினும் மறுப்பதற்கும் என் மனம் இடம் கொடுக்கவில்லை. ஆகவே அவரின் மேல் வைத்த மரியாதையின் நிமித்தமும், பாசத்தின் நிமித்தமும் பேசத் துணிந்தேன். பிழையிருப்பின் மன்னிப்பீர்கள் என நம்புகிறேன்.

1986ஆம் ஆண்டிலேயே நான் முதன் முதலாக திருமதி அம்பலவாணரைச் சந்தித்தேன். எப்படியெனில் John Keells இல் கிளை நிறுவனமாக இயங்கி வந்த Bamber & Bruce இல் Assistant Analyst ஆக தெரிவு செய்யப்படுவதற்கான நேர்முகப் பரீட்சைக்குச் சென்ற போதே அவரைச் சந்தித்தேன். மிகுந்த பயத்துடன் அறைக்குள் நுழைந்த எனக்கு திருமதி அம்பலவாணரின் புன்முறுவலுடன் வரவேற்ற அழகிய முகத்தை கண்டதுமே பயமெல்லாம் ஓடி மறைந்து விட்டது. அவருடைய விநயமான பேச்சும், சிரித்த முகமும் என்னை மிகவும் கவர்ந்தது. நேர்முகப் பரீட்சையில் நானும் தெரிவு செய்யப்பட்டேன். வயதோ இளம் வயது. Analytical துறையிலும் எவ்வித அனுபவமும் அறிவும் எனக்கிருக்கவில்லை. ஆயினும் திருமதி அம்பலவாணர் Chief Analyst

ஆக இருந்த படியால் என்னையும், என்னோடு சேர்ந்த ஏனையோரையும் ஒரு வேலையும் தெரியாதிருந்த போதிலும் மிகப் பொறுமையுடனும், கிரமமுறைப்படியும் Analytical துறையில் பயிற்சி அளித்தார்.

நான் அவரிடம் கண்ட இன்னுமோர் சிறந்த குணம் என்னவெனில் எந்தவொரு காரியத்தையும், பதற்றம் அடையாது கவனமாய் எதையும் நிதானமாகவும், கிரமமாகவும் செய்து முடிப்பாது. பலதரப்பட்ட வேளையிலும் ஆழமான அறிவும் கிரமமுறைப்படி செய்யும் திறனும் அவரிடத்தில் காணப்பட்டது. அவர் கோபித்ததையோ, குரலை உயர்த்தி யாரையும் பேசினதையோ நான் கண்டதில்லை. இக்கட்டான சூழ் நிலையிலும் பொறுமையை இழந்துவிடாது விநயமான பேச்சினாலும், சாதுரியத்தினாலும் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பார்.

John Keells வியாபித்த ஒரு நிறுவனம். Bamber & Bruce அதனுடன் ஒப்பிடும் போது மிகவும் சிறியது. வேலை செய்வோரும் வெகு சிலரே. நாங்கள் ஒரு குடும்பம் போலவே ஒற்றுமையாகவும், சந்தோஷமாகவும் நாளாந்த கடமைகளை புரிந்தோம். நாங்கள் திருமதி அம்பலவாணரை Madam என்று தான் அன்புடன் அழைப்போம்.

சில சமயங்களில் வேலை, வேலை என்று சூழ்நிலையை மாற்றுவதற்காக உல்லாச பிரயாணங்களை ஒழுங்கு செய்தால் அவரும் எங்களுடன் சேர்ந்து கொள்ளுவார். ஒரு நாளும் மறுப்பு தெரிவிப்பதே கிடையாது. அது மட்டும் அல்ல எங்களுடைய குறும்புத்தனங்களையும் பார்த்து ரசிப்பார்.

1991இல் John Keells இன் முகாமையாளர் Bamber & Bruce ஐ வேறொரு முகாமையாளருக்கு விற்க முற்பட்டபோது நாங்கள் மிகவும் கவலையடைந்தோம். காரணம் மிகச்சிலரே தொடர்ந்து வேலை செய்ய தெரிவு செய்யப்பட்டனர். அவர்களில் நானும் ஒருத்தி. அத்தோடு திருமதி அம்பலவாணரே Bamber & Bruce இல் மீண்டும் Chief Analyst ஆக நியமிக்கப்பட்டதால் மறுபடியும் அவரின் கீழ் வேலை பார்க்கும் அதிஷ்டம் எனக்குக் கிடைத்தது. புதிய முகாமையாளரின் கீழ் வேலை செய்ய வேண்டுமே என்ற பயமும் நீங்கிவிட்டது.

புதிய இடத்தில் புதிதாக மீண்டும் வேலை ஆரம்பிப்பது என்பது இலேசான காரியமாக இருக்கவில்லை. ஆயினும் திருமதி அம்பலவாணரின் திறமை மிக்க வழிகாட்டலின் கீழ் குறுகிய காலத்திற்குள் எல்லா ஆரம்ப வேலைகளையும் பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தது.

புதிய முகாமையாளரின் கீழ் வந்ததும் எங்கள் மேல் பாரிய பொறுப்பு ஒன்று சுமத்தப்பட்டது. அதாவது Accreditation என்னும் தகமைச் சான்றிதழை பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு என்பதாகும். அது வரை Sri Lanka விலேயே அதைப்பற்றிய அனுபவம் தெரிந்த எந்தவொரு இரசாயன ஆராய்ச்சி நிறுவனமும் இருக்கவில்லை. Bamber & Bruce இந்த தகமையை பெற விண்ணப்பித்த முதல் நிறுவனம் ஆகும். ஆகவே மிகவும் சிரமப்பட்டு அயராது உழைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இக் குறிக்கோளை அடைவதற்கான பாரிய பொறுப்பு திருமதி அம்பலவாணரின் மேல் விழுந்தது. அவரும் அந்த சவாலை ஏற்று அயராது பாடுபட்டார். நாமும் அவரின் வழிகாட்டலின் கீழ் அதிக சிரமப்பட்டோம்.

Assessors ஐ திருப்திப்படுத்துவதற்காக Standard Operating Procedures போன்ற பலதரப்பட்ட ஆவணங்களை சேகரிக்க வேண்டியிருந்தது. இக்குறிக்கோளை அடைவதற்கு 3-4 வருடங்கள் பிடித்தன. சில சந்தர்ப்பங்களில் தோல்வியையும் தழுவ வேண்டி நேரிட்டது. இருந்தாலும் திருமதி அம்பலவாணரின் மனம் தளர்ந்ததே கிடையாது.

தகமை சான்றிதழ் கிடைக்கத் தவறிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முகாமையாளர் திருமதி அம்பலவாணரையே குறைகூறுவார். அந்தத் தவறுகளிற்கு அவரின் கீழ் வேலை செய்யும் நாங்களே காரணமாய் இருந்திருக்கலாம். ஆனால் ஒரு போதும் எங்கள் மேல் அந்த குற்றத்தைச் சுமத்தமாட்டார். தானே அந்த பொறுப்பை ஏற்றுக் கொள்வார். ஏனெனில் நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு வேலை செய்தோம் என்பதை அவர் விளங்கிக் கொண்டார். கடைசியில் அந்தக் குறிக்கோளை அடைந்தோம். Sri Lanka விலேயே முதன் முதலாக ASTEL Accreditation சான்றிதழை பெற்றது Bamber & Bruce என்ற பெருமை Madam அம்பலவாணருக்கும் அவர் மூலமாய் அவரின் கீழ் வேலை பார்த்த எங்களிற்கும் கிடைத்தது.

சில சமயங்களில் வேலை பார்க்க Staff போதாவிட்டால் அவரும் வந்து எங்களுடனேயே தோளோடு தோள் கொடுத்து வேலை செய்வார். தான் Chief Analyst என்ற பெருமையே கிடையாது. அவருடைய அந்த எளிமையான சுபாவம் எங்கள் மனதைக் கவர்ந்தது. அத்தோடு அது எங்களிற்கொரு முன் மாதிரியாகவும் படிப்பினையாகவும் விளங்கிற்று. அந்த சுபாவமே அவரை வெற்றிப் படியின் உச்சிக்குக் கொண்டு வந்தது என்று நான் கூறுவேன்.

இன்று நான் Astron Pharmaceutical Laboratory இல் Quality Control Officer ஆக கடமையாற்றுகிறேன். திருமதி அம்பலவாணரின் கீழ் நான் பெற்ற அனுபவங்களே என்னை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்ல எனக்கு உதவியாய் இருக்கிறது என்பதை நான் உறுதியுடன் கூறிக் கொள்கிறேன். அவரின் கீழ் கடமையாற்றும் பாக்கியத்தை எனக்கு தந்த ஆண்டவனுக்கே நன்றி. அவரின் கீழ் நான் பெற்ற பயிற்சி அனுபவத்தின் காரணமாய் நான் தற்போது வேலை பார்க்கும் Astron நிறுவனத்திற்கு Accreditation சான்றிதழை இந்த வருடம் பெற்றுக் கொடுக்க உதவியுள்ளேன்.

சொல்லிக் கொண்டு போனால் இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம் ஆயினும் நேரம் இடம் கொடுக்காது. இவ்விதமான ஒரு பெரிய குணக் குன்றாகிய Madam அம்பலவாணருக்கு இன்று மகளிர் தினத்தன்று இவ்வித கௌரவம் அளிக்கும் நிகழ்சியை ஒழுங்குபடுத்தியது மிகவும் பொருத்தமானதென்று நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அவரின் முன் மாதிரியை பின்பற்றி இந்த மகளிர் தினத்தன்று இங்கு கூடியிருக்கும் மகளிர் ஒவ்வொருவரும் உறுதி பூணுவோமாயின் மகளிர் சமுதாயம் முன்னேறும். நாட்டிற்கு நன்மை பயக்கும் என கூறி

முடிக்கிறேன்.

கடைசியாக Madam அம்பலவாணர் தனது ஓய்வு பெற்ற மீதிக் காலத்தை தனது குடும்பத்தினருடன் சுகபோகமாகவும் சந்தோஷமாகவும் சகல ஆசிகளையும் பெற்று வாழ ஆண்டவன் அருள்புரிவாராக என வாழ்த்தி எனது பேச்சை முடிக்கிறேன்.

நன்றி.

வணக்கம்.

## திருமதி யமுனா பற்றி

*திருமதி யமுனா கணேசலிங்கம் ஒருபிரல்யமான சமூகசேவகி. அவர் முன்னாள் மாநகரசபை முதல்வர் அமரர் திரு கணேசலிங்கம் அவர்களின் பாசமிகு துணைவியாவார். அன்னாருக்கு உறுதுணையாக இருந்து அவரின் வெற்றிக்கு அயராது உழைத்த ஒரு சிறந்த பெண்மணி. அது மட்டுமன்றி கொழும்பு இந்து மகளிர் மன்றத்தின் தலைவியாகவும் செயலாளராகவும் பல காத்திரமான செயல்களை ஆற்றியுள்ளார்.*

*தற்பொழுது வடகீழ் பிராந்திய பழைய மாணவர் சம்மேளத்திற்கு ஆக்கபூர்வமான தொண்டாற்றி வருகின்றார்.*

*இன்றைய தினம் அச்சம்மேளத்தின் சார்பில் நமது சிவகாமி பற்றித் தனது கருத்துக்களை கூறுவார்.*

## திருமதி யமுனா கணேசலிங்கத்தின் உரை

பிரதம விருந்தினர் திருமதி சரஸ்வதி ஜெயராஜா அவர்களுக்கும், சங்கத் தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்களுக்கும், மேடையில் அமர்ந்திருக்கும் பெரியோர்களுக்கும், பாரதி கண்ட புதுமைப் பெண்களாக பல துறைகளிலும் சிறந்து விளங்கும் யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் அனைவருக்கும் என் முதற்கண் வணக்கத்தை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாரெங்கும் பெண்ணின் பெருமையை எடுத்துக்காட்டி உத்தியோக பூர்வ அந்தஸ்தினை பெண்ணுக்கு வழங்கும் நாள் சர்வதேச மகளிர் தினமாகும். இத்தினம் ஐக்கியநாட்டு சபையால் பிரகடனப்படுத்தப்பட்டது.

பெண்களின் சாதனைகள் பற்றிய விழிப்புணர்வு முன்னர் எப்போதும் இல்லாத அளவிற்கு வேகமாக வளர்ந்து, வேரூன்றி முன்னேறி வருகிறது. பல்வேறு துறைகளிலும் தமது திறமைகளையும், ஆற்றல்களையும் வெளிப்படுத்தி வரும் பெண்களை கௌரவித்து, சிறப்பித்து வரும் பண்பாடு யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கே உரித்தாகும்.

உங்கள் கல்லூரியின் பழைய மாணவிகளை பல பொது இடங்களிலும், வெவ்வேறு சங்கங்களிலும் கண்டு மனதில்

வியந்துள்ளேன். எல்லாப் பெண்களிடமும் நான் கண்டது செயல் அடக்கம். அடக்கமாய் இருப்பவரிடத்து அறங்கள் எல்லாம் தாமே வந்தடையும் என்பது வள்ளுவர் கூற்று.

அந்த புகழுக்குரியவர்கள் கல்லூரியின் பழைய மாணவிகளாகிய நீங்கள்தான்.

இன்று இந்தக் கல்லூரியின் பழைய மாணவி ஒருவர் நல்லோர் அவையில் கௌரவிக்கப்படுகிறர் எனும் போது எனக்கு மிக்க மகிழ்சியாக உள்ளது. திருமதி சிவகாமி அம்பலவாணரை பற்றி நான் இங்கு கூற வந்ததை எனக்கு முன்னே பேசியவர்கள் கூறிவிட்டார்கள். எனவே அவரைப்பற்றி நான் கூற நினைப்பது “கொல்லன் தெருவில் ஊசி விற்பது போலாகும்” என எனக்கு விளங்கிவிட்டது. எனினும் அவரைப்பற்றி எனது கருத்துக்களை உங்களோடு பகிர விரும்புகிறேன்.

அவர் ஒரு புகழ் பூத்த குடும்பத்தில் பிறந்தவர் தந்தையர் வயித்தியலிங்கம் அவர்கள் கொம்மியூனிஸ்ட் (Communist) கட்சி ஸ்தாபாகர்களில் ஒருவர் ஆவார். எனவே அவரிடம் பிறந்தநாள் தொட்டு சுயநலமற்ற தொண்டாற்றும் மகிமை இருந்ததில் ஆச்சரியமில்லை. யாழ் இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்று உயிரியல் விஞ்ஞானம் (Bio Science) படிக்க பேராதனை பல்கலைக் கழகத்தில் நுழைந்து பட்டதாரியானார்.

பம்பர் அன்ட் புரூஸ் (Bamber & Bruce) நிறுவனத்தில் ஆய்வாளராக (Analyst) நுழைந்து தனது கடின உழைப்பினால் பிரதம பகுப்பாளராக (Chief Analyst) பதவி உயர்ந்தவர். அவரைப் பார்த்தால் நான் மேற் கூறியவற்றிற்கும் அவருக்கும் தொடர்பு இல்லாதது போல இருக்கும்.

அவர் பார்ப்பதற்கு எளிமையானவர், அமைதியானவர், அன்புருவானவர். வடகீழ் பிராந்திய பாடசாலைகள் அனைத்தும் ஒரு குடையின் கீழ் 1995ஆம் ஆண்டு NERESPAPF என்ற பெயரில் ஒன்று திரண்ட பொழுது அவரது கணவர் தலைவராகவும், நான் பொருளாளராகவும் பதவியேற்றோம். உங்கள் கல்லூரியின் பிரதிநிதியாக அவர் கூட்டங்களுக்கு சமூகம் அளித்தார்.

அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. அவர் அதிகம் கதைத்து நான் அறியேன். அன்று அவர் தனது கணவரின் பின்னே நின்று பல ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்கினார். இன்று தன் கணவரின் வழியில் இருந்து காரியதரிசியாக செயலாற்றி வருகிறார். தன்னலமற்ற சேவையாற்றி வருகிறார்.

அவரை இன்று நீங்கள் சிறந்த பெண்மணியாக கௌரவிப்பதில் நான் மிகவும் உவகையடைகிறேன். அவருக்கு என் அன்பான வாழ்த்துக்களை தெரிவித்து உங்களிடம் இருந்து விடை பெறுகிறேன்.

வணக்கம்.

## திருமதி சகுந்தலா துரைரட்ணம்

*திருமதி சகுந்தலா துரைரட்ணம் கார்கில்ஸ் நிறுவனத்தில் Quality Assurance Manager ஆக பணிபுரிந்து வருகின்றார். இதற்கு முன்பு Milco நிறுவனத்தில் இதே பதவியில் கடமை புரிந்துள்ளார். சிவகாமி அம்பலவாணரும் இவரும் 5 வருட காலம் இலங்கை இரசாயன மன்றத்தின் (Institute of Chemistry, Ceylon) இணைக் காரியதரிசிகளாக பணிபுரிந்துள்ளனர், என்ற ரீதியில் அம்மன்றத்தின் சார்பில் ஒரு சில வார்த்தைகள் கூறும்படி அவரை அன்புடன் அழைக்கின்றேன்.*

## திருமதி சகுந்தலா துரைரட்ணத்தின் உரை

சபைத் தலைவர் திருமதி சரஸ்வதி ஜெயராஜா அவர்களுக்கும், எமது அன்புக்கும் பாராட்டுக்கும் உரிய திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்களுக்கும், அவரை கௌரவிப்பதற்காக இங்கு கூடியிருக்கும் சகோதரிகள் அனைவருக்கும் என் வணக்கம்.

திருமதி சிவகாமி அம்பலவாணரை எனக்குத் தெரிய வந்து தற்போது 15 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது.

இலங்கை இரசாயனவியலாளர் சங்கம் என்ற விஞ்ஞான அமைப்பின் நிருவாகக் குழுவின் ஓர் முக்கிய அமைப்பினராகத் திருமதி அம்பலவாணர் கடமையாற்றிக் கொண்டிருந்த காலத்தில் அவருடன் சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

Institute of Chemistry, Ceylon எனப்படுகின்ற, இலங்கை இரசாயனவியலாளர் சங்கத்தில் திருமதி அம்பலவாணர் பல முக்கிய பதவிகளை வகித்தார்.

நிருவாக சபை உறுப்பினராகக் (Council Member) கடமையாற்றியுள்ளார். அதிலும் முக்கியமாக இரசாயன சங்கத்தின் சர்வதேச தொடர்புச் செயலாளராக் கடமையாற்றினார். ஏனைய உலக நாடுகளின் இரசாயன சங்கங்களுடன் தொடர்பைப் பேணி அந்நாடுகளில் இரசாயனத் துறையில் ஏற்பட்டு வரும் வளர்ச்சிகளையும், புதிய ஆராய்ச்சிகளையும் அறிந்து எமது இரசாயன விஞ்ஞானிகளுக்கு அறிவித்து வந்தார். அதேவேளை எம் நாட்டு விஞ்ஞானிகளின் செயற்பாடுகளையும் ஏனைய நாட்டு சங்கங்களுக்கு அறிவித்து வந்தார். IUPAC என்ற புகழ் பெற்ற விஞ்ஞான அமைப்புடன் தொடர்பு கொண்டு எமது விஞ்ஞான பட்டதாரிகளுக்கு IUPAC அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுக்கும் சேவையைத் தொடர்ந்து செய்து வந்தார்.

எம் நாட்டிலுள்ள இரசாயனத் தொழிற்சாலைகளைப் பற்றிய ஓர் தொகுப்பை வெளியிட இலங்கை இரசாயனவியலாளர் சங்கம் முன் வந்தது - இவ் வெளியீட்டிற்குப் பொறுப்பாக திருமதி அம்பலவாணர் நியமிக்கப்பட்டார். இரசாயன தொழிற்சாலைகளைப் பற்றி நிபுணர்கள் மூலம் எழுதுவித்து, அவற்றை சரிபார்த்து, பதிப்பிட்டு

வெளியிடுவது இலகுவான செயல் அல்ல. ஆனால் திருமதி அம்பலவாணர் திறமையாகச் செயற்பட்டு இந்தத் தொகுப்பை மிகச் சிறந்த தரத்தில் வெளியிட்டார்.

சமூக அலுவல் உபகுழுவின் உறுப்பினராகச் செயற்பட்ட திருமதி அம்பலவாணர் வருடாந்த நத்தார் கொண்டாட்டங்கள், வருடாந்த ஒன்று கூடல் நிகழ்ச்சிளை ஏற்பாடு செய்வதில் முக்கிய பங்கை வகித்தார். நிதி உறுப்பினர் உபகுழு, வெளியீட்டு உபகுழு ஆகியவற்றின் உறுப்பினராகவும் கடமையாற்றி சேவை செய்தார்.

1995 முதல் 2000ஆம் ஆண்டு வரை இரசாயன சங்கத்தின் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்ட திருமதி அம்பலவாணரின் பங்களிப்பு மிகவும் முக்கியமாக அமைந்திருந்தது.

இவ்வாறு இரசாயன சங்கத்தின் நிருவாகக் குழுவில் பல்வேறு பதவிகளை வகித்துக் கடமையாற்றினார். இவ்வாறு எத்தனை அங்கத்தவர்கள் பதவி வகித்த போதிலும் திருமதி அம்பலவாணர் அவர்களிடையே வேறுபட்டு காணப்பட்டார். அது எப்படி?

இந்த சங்கத்தின் தொழிற்பாடுளை நடாத்தும் பொறுப்புக்களை வெவ்வேறு அங்கத்தவரிடையே ஒப்படைக்கும் போது தனக்கு ஒதுக்கப்பட்ட சேவைகளை தயக்கமின்றி ஆர்வத்துடன் ஏற்றுக்கொள்வார். ஆரவாரமின்றி, மிகவும் அமைதியாக அனைவரிடமும் அன்பாகப் பேசி, அவர்களின் ஒத்துழைப்பைப் பெற்று ஒதுக்கப்பட்ட கடமைகளை மிகவும் சிறப்பாக நிறைவேற்றுவார். குழுவுடன் சோந்து செயற்படுந்திறமை திருமதி அம்பலவாணரிடம் மிகுந்து காணப்பட்டது.

குடும்பத் தலைவியாகவும், பொறுப்புள்ள அதிகாரியாகவும் செயற்பட்ட இவர் இரசாயன சங்கம் போன்ற மேலதிக சேவைகளில் ஈடுபடும் போது தனது வேலைப் பழுவையோ, அலுப்பையோ வெளிக்காட்டாமல் எப்போதும் அமைதியாகவும் எப்போதும் புன்னகையோடும் தொழில்களில் ஈடுபடுவார். மற்றையோரையும் ஊக்குவிப்பார்.

இவருடன் சேர்ந்து பல தொழிற்திட்டங்களில் ஈடுபடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஆனால் இந்தக் காலகட்டத்துக்குள் ஒரு முறையேனும் இவர் கோபப்பட்டோ, குரலை உயர்த்திப் பேசியோ கண்டது அல்லது கேட்டது கிடையாது. அப்படிப்பட்ட அபூர்வ குணம் படைத்தவர். இதனாலேயே இவர் என்ன பணிகளைத் தந்தாலும் ஏனைய அங்கத்தவர் மறுக்காமல் உடனே செய்வார்கள்.

பெண்கள், அதிலும் முக்கியமாக தமிழ்ப் பெண்மணிகள் விஞ்ஞானத் துறையில் பிரகாசிப்பது எம் நாட்டில் குறைவு. இந்த வகையில் நோக்கும் போது திருமதி அம்பலவாணர் இரசாயன துறையில் பெரிய நியமனங்களை ஏற்று அவற்றை செவ்வனே நிறைவேற்றியதன் மூலம் தமிழ் பெண்களுக்கே பெருமை தேடித் தந்திருக்கிறார்.

ஆகவே இவருடன் சேர்ந்து இவரது வழிகாட்டலில் இவ்வாறான சேவையில் ஈடுபடுவதற்குக் கிடைத்த சந்தர்ப்பங்கள் எனக்கு மிகவும்

பயனுள்ள மறக்கமுடியாத அனுபவங்களாகும்.

திருமதி அம்பலவாணரை சர்வதேச மகளிர் தினத்தில் கௌரவித்தும், சில வார்த்தைகள் பேச எனக்குச் சந்தர்ப்பமளித்த யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு அங்கத்தவர்களுக்கு எனது நன்றிகள்.

திருமதி அம்பலவாணர் மென்மேலும் புகழ் பெற்று கடவுளின் ஆசியுடன் பல்லாண்டுகள் சிறப்புற வாழ எனது பிரார்த்தனைகள்.

வணக்கம்.

## Mrs. Subadra Jeyasinghe

*Felicitation note given by Mrs. Subadra Jeyasinghe, on behalf of Sri Lanka Association of Testing Laboratories (SLATL). Mrs. Jeyasinghe is the Senior Quality Manager of Industrial Technology Institute (ITI). Mrs. Jeyasinghe worked hand in hand with Mrs. Ambalavanar since the inception of the Association.*

## Felicitation note given by Mrs. Subadra Jeyasinghe

It is a great pleasure for me to present this document, on behalf of Sri Lanka Association of Testing Laboratories (SLATL), to day to felicitate Mrs. Sivakamy Ambalavanar.

Mrs. S. Ambalavanar, the Chief Analyst of the Bamber & Bruce Ltd. had been the live wire of the Sri Lanka Association of Testing Laboratories (SLATL) since the time this idea was brought forward by the Swedish consultant Mr. Agust Jonsson way back in 1998. Mrs. Ambalavanar served as the secretary for the informal working group to set up the SLATL which consisted of representatives from the then Ceylon Institute of Scientific & Industrial Research, CISIR (presently Industrial Technology Institute, ITI) and the Sri Lanka Standards Institution, SLSI. During this time Mrs. Ambalavanar, tirelessly worked along with her superior, Dr. Suranjan de Silva to put forward the constitution of the SLATL.

With the inception of the SLATL in late 1998, Mrs. Ambalavanar was appointed as the Secretary of the interim executive committee and served in this capacity till early 1999. The Inaugural General meeting of the SLATL was held at 2.30 p.m. on 25$^{th}$ September 1998 under the auspices of Swedish International Development Agency (SIDA). The then Ambassador for Sweden in Sri Lanka, Mr. Torvald Akesson graced the occasion as Chief Guest. Mrs. Ambalavanar was appointed as the Secretary of the

executive committee. She served in this capacity for two terms, until February 2001 and then went on to be the Treasurer till May 2008. Mrs. Ambalavanar's capability in maintaining records and good time management was amply reflected during her tenure as both Secretary and Treasurer. Her single handed efforts towards increasing the membership of SLATL were very fruitful and the membership strength of SLATL has now risen to 90 from 46 at the time of inception. Her records were flawless and the auditors of the SLATL had an easy task.

During her tenure of office several Seminars and Workshops were organized, with local and foreign experts in the respective fields, to fulfill the objectives of the Association.

Mrs. Ambalavanar was elected unanimously as the President of the SLATL in May 2008 & continues to serve in this capacity. As the President, Mrs. Ambalavanar has a great vision to incorporate the SLATL as an Act of Parliament so that SLATL will be stronger in position to serve the country. She was instrumental in guiding the executive committee to initiate the first ever educational programme of the SLATL, the Medical Technicians certificate course and in streamlining the proficiency testing programme of the SLATL.

(This message was read out by Mrs. Sumathy Rajasingham of SGS Lanka Laboratory Services)

## திருமதி சரஸ்வதி ஜெயராஜா - பிரதம விருந்தினர்

*பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் திருமதி சரஸ்வதி ஜெயராஜா அவர்கள் எங்கள் கல்லூரியின் அதிபராக 13 வருடங்கள் கடமை ஆற்றியுள்ளார் அன்பு, பண்பு, விருந்தோம்பல், எல்லோரையும் மதித்து நடந்து கொள்ளல் போன்ற நற்பண்புகள் வாய்ந்தவர்.*

*நாட்டில் ஏற்பட்ட போர்க்காலச் சூழல், இடப்பெயர்வு போன்ற சவால்களையும் சமாளித்து மீண்டும் பாடசாலையை கட்டியெழுப்புவதற்கு அரும் பாடுபட்டார் அதில் வெற்றியும் கண்டார்.*

*அவரது பதவிக் காலத்தில் அவர் ஆற்றிய பணிகள், பண்பான செயற்பாடுகளால் உலகெங்குமுள்ள பழைய மாணவர் சங்கங்கள் தாராள மனத்துடன் பாடசாலைக்கு உதவியுள்ளன. இந்த வகையில் தான் அவருக்கும் சிவகாமிக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.*

*அதன் விளைவாக எமது கல்லூரிக்கு வேண்டிய உபகரணங்கள் போன்றவற்றை இலகுவாகப் பெற்றுக் கொண்டார். பல துணிச்சலான முடிவுகளை எடுத்து கல்லூரியை உன்னத நிலைக்கு கொண்டு சென்ற வீரப் பெண்மணி.*

*அவர் இன்றைய நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வந்திருப்பது மகிழ்ச்சி தருகின்றது. தமது உரையினை ஆற்றும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.*

# பிரதம விருந்தினர் திருமதி சரஸ்வதி ஜெயராஜாவின் உரை

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கம் - கொழும்புத் தலைவியும், இலங்கை பரிசோதனை ஆய்வுகூடங்களின் சங்கத் தலைவியும், Bamber & Bruce நிறுவனத்தின் பிரதம பகுப்பாய்வாளரும். இன்றைய நிகழ்வில் கௌரவம் பெற வருகை தந்திருப்பவருமான திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்களே, மேடையில் வீற்றிருக்கும் பாராட்டுரைகள் வழங்கிய நங்கையரே, கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட திருவாளர் கயிலாசபிள்ளை அவர்களே, கல்லூரிக்கு முன்னிருந்து தேவையேற்பட்ட பொழுதெல்லாம் வைத்திய உதவி வழங்கிய வைத்திய கலாநிதி ஆனந்தராஜா அவர்களே, இங்கு இல்லாவிட்டாலும் கல்லூரிக்குப் பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய திருவாளர் அம்பலவாணர் அவர்களே, சங்க உறுப்பினர்களே, வருகை தந்திருக்கும் பெரியோர்களே, பழைய மாணவிகளே உங்கள் அனைவருக்கும் எனது மாலை வணக்கத்தைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இன்று சர்வதேச மகளிர் தினம். இத்தினம் எவ்வாறு உருவாகிய தென்பதை நாம் நோக்குவோமானால் பெண்களின் விடிவுக்காக காலத்துக்குக்காலம் கொடுக்கப்பட்ட குரலின் ஒட்டுமொத்த விளைவினால் ஏற்பட்டதென்று கூறலாம். பெண்களின் சுபிட்சமான வாழ்வுக்காக கிரேக்க நாட்டில் லெஸிஸ்ட்ரா என்ற பெண்மணியின் தலைமையில் ஆரம்பத்தில் குரலெழுப்பப்பட்டது. பின்னர் பிரான்சியப் புரட்சியின் பின் பாரிஸிலும் பெண்களின் சுதந்திரம் பற்றிய கொந்தளிப்பு ஏற்பட்டது. 1908ஆம் ஆண்டு நியூயோர்க் நகரில் 15,000 பெண்கள் பெண்களுக்குச் சிறந்த முறையில் வருமானம் கொடுக்கப்பட வேண்டும், வாக்களிக்கும் உரிமை கொடுக்கப்பட வேண்டுமென்று ஊர்வலம் நடாத்தினர். 1909ஆம் ஆண்டு மாசி மாதம் 28ஆம் திகதி அமெரிக்காவின் முதலாவது தேசிய பெண்கள் தினம் பிரகடனப் படுத்தப்பட்டது. இதன் பின் 1913ஆம் ஆண்டு பெப்ரவரி வரை இத்தினம் கொண்டாடப்பட்டது.

1910ஆம் ஆண்டு கொப்பன்ஹேகனில் சர்வதேச பெண்கள் தினம் என்ற யோசனை முன்வைக்கப்பட்டது. அங்கு நடைபெற்ற கலந்துரையாடலையடுத்து 1913இல் மார்ச் 8ஆம் திகதிக்கு சர்வதேச பெண்கள் தினம் மாற்றப்பட்டது. முதலாம் உலகப் போரின் பின் 1917ஆம் ஆண்டு மார்ச் 8ஆம்திகதி ஐரோப்பாவில் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது. இதன் பின் உலகெங்கும் இம்முறை பரவி 1918இல் உலகில் முக்கிய தினமாக இத்தினம் உருவாகியது. 1975ஆம் ஆண்டு சர்வதேச பெண்கள் தினம் ஐக்கியநாடுகள் தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்டது. இத்தினம் ஐரோப்பிய நாடுகள் சிலவற்றிலும், ரஷ்யா, சீனா, வியட்னாம் போன்ற நாடுகளிலும் தேசிய விடுமுறை தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இப்படியாக உலகெங்கும் மகளிர் தினம் கொண்டாடப்படும் வேளையில் உலகில் ஒரு சிறு புள்ளியாகிய இலங்கையில், அதிலும் சிறியதான யாழ்ப்பாணத்தில், அதிலும் சிறிய புள்ளியான யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்களைக் கௌரவித்துக் கொண்டாடுவது பெரும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

சிவகாமி அம்பலவாணர் அவர்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் முன்னைநாள் அதிபர் திருவாளர் வயித்தியலிங்கம் அவர்களின் மகளாவார். இவர் நான்காம் வகுப்பிலிருந்து உயர்தர வகுப்புவரை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் கல்விகற்று, பல்கலைக்கழகம் சென்று விஞ்ஞான பட்டம் பெற்றவர். கல்லூரியின் வளர்ச்சியில் இவரும், இவரது கணவரும் பெரும் அக்கறை கொண்டவர்கள். நான் அதிபராக இருந்த காலத்தில் கொழும்புச் சங்கத்தினர், கல்லூரியின் தேவைகளைப் பூர்த்தி செய்ததுடன், இங்கிலாந்து, கனடா, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளிலுள்ள பழைய மாணவிகளுடனும் தொடர்பு கொண்டு கல்லூரியை வளர்ப்பதில் அரும்பாடுபட்டனர்.

சங்கத்தின் தூண்களாக திருமதி அபிராமி கயிலாசபிள்ளை, செல்வி சற்சொரூபவதி நாதன், திருமதி சிவகாமி அம்பலவாணர், திருமதி தயாநிதி செல்வநாயகம் போன்றோர் விளங்க ஏனையோர் அக்கட்டிடத்தின் கற்கள்போல் உறுதுணையாக இருந்து கல்லூரியை வளர்த்தனர் அவர்கள் அனைவரும் பெருமைப்படக் கூடிய பெண்மணிகளாவர். கல்லூரிக்குத் தேவையான பொழுதெல்லாம் தொலைபேசியில் தொடர்பு கொண்டால் அன்பாகவும், கனிவாகவும் கதைத்துத் தேவையைப் பூர்த்தி செய்வதில் வல்லவர் சிவகாமி அம்பலவாணர் அவர்கள்.

திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்களை ஆயிரத்தில் ஒருத்தியென்று கூறலாம். சூதுவாது அற்றவர். பார்வையிலே பிராமணப்பெண் போன்ற தோற்றம் கொண்டவர். குழந்தைத்தனமான மென்மையான பேச்சு. பாலிலும் வெண்மையான உள்ளம். தயிரினும் மென்மையான மொழி. நடந்தால் நிலத்திற்கும் நோகாது, காலுக்கும் நோகாது. அத்தகைய அடக்கம், ஆரவாரம் தற்பெருமையற்ற சிப்பிக்குள் முத்துப்போன்ற பெறுமதிவாய்ந்த நுண்ணறிவு பெற்ற மங்கை இவர்.

இவர் சங்கத்தின் தலைவியாக, செயலாளராக, பொருளாளராக, இதர நிறுவனங்களில் நிர்வாகப் பணிகளை மேற்கொண்டவராக விளங்கியவர். பல நிறுவனங்களில் அங்கத்துவம் பெற்றவர். பல கருத்தரங்குகளில் பங்கு பற்றியதுடன், பல கருத்தரங்குகளையும் ஒழுங்குபடுத்தி நடாத்தி அதில் வெற்றியும் கண்டவர். பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதிப் பாராட்டுப் பெற்றவர். அத்துடன் சமூகத்துடனும் தொடர்பு கொண்டு அதன் முன்னேற்றத்துக்கு ஒத்துழைப்பு வழங்குபவர்.

சிவகாமி அவர்கள் தனது தொழிலை நுட்பமாக, செயல்திறன் மிக்கதாகச் செய்வதில் வல்லவர். தனது இருபத்து மூன்றாவது வயதில் இங்கிலாந்தில் மஞ்செஸ்ரர் பல்கலைக்கழகத்தில் தொழில் நுட்ப வியலாளராக பணிபுரிந்து, ஆராய்ச்சி உதவியாளராகப் பதவியுயர்வு பெற்று

விஞ்ஞான முதுமானிப் பட்டம் பெற்றவர். கல்லூரி சம்பந்தமானதும், சங்கம் தொடர்பானதும், தனது தொழில் சார்ந்ததுமான வேலைகளைச் சிறப்பாகவும், நுட்பமாகவும் செய்தவர்.

பழைய மாணவர் சங்கத்துக்கு இணையத்தளம் ஒன்றை அமைத்து அதன் செயற்பாட்டை உலகெங்கும் பரப்புவதில் முன் நின்று உழைத்தவர். யாழ் நாதம் என்ற சஞ்சிகை திறமையாகவும், நேர்த்தியாகவும் வர முழுமூச்சாக நின்று உழைத்தவர். இவற்றிலும் மேலாக தனது 83 வயதான தாயாரையும் சிறந்த முறையில் பராமரித்து தனது கடமையையும் சரிவரச் செய்வதில் திருப்தி கண்டவர்.

இவரது விஞ்ஞான அறிவினையும் செயல் நுட்பத்திறனையும் கருத்திற் கொண்ட பழைய மாணவிகள் சங்கம் இன்று இவருக்கு 'தொழில் நுட்ப வித்தகி' என்ற பட்டத்தை அளித்துக் கௌரவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது. இவரது திறமை மேலும் வளரவேண்டும். இவர் சுகமாக வாழ வேண்டுமென வாழ்த்துகிறேன். இன்றைய தினம் என்னையும் கௌரவித்து திருமதி சிவகாமி அம்பலவாணர் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறுவதற்குச் சந்தர்ப்பமளித்த சங்க உறுப்பினர்களுக்கும் எனது உரையைச் செவிமடுத்த உங்களுக்கும் மனமார்ந்த நன்றியைக் கூறி விடை பெறுகிறேன்.

நன்றி

"தொழில் நுட்ப வித்தகி" திருமதி சிவகாமி அம்பலவாணரின்

# ஏற்புரை

முதற்கண் எல்லாம் வல்ல இறைவனை வணங்கிக் கொண்டு எனது ஏற்புரையை ஆரம்பிக்கின்றேன்.

பிரதம விருந்தினர் திருமதி சரஸ்வதி ஜெயராஜா அவர்களே! மற்றும் என்னைப் பாராட்டிப் பேசிய சகோதரிகளே! எங்கள் அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்திருக்கும் அன்பர்களே!. அனைவருக்கும் எனது மாலை வணக்கங்கள்.

இப்பாராட்டு நிகழ்வை ஒழுங்கு செய்த 'யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு' அங்கத்தவர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

சர்வதேச மகளிர் தினம் பெண்களுக்கு ஒரு முக்கியமான நாளாகும். தற்சமயம் பெண்கள் பல துறைகளிலும் முன்னேறி விட்டாலும் இன்னமும் நாம் உலகளாவிய ரீதியில் சில பெண்கள் அடிமைகளாகக் கருதப்படுவதையும், குடும்ப வன்முறைகளுக்கு ஆளாக்கப்படுவதையும் கண்கூடாகக் காண்கின்றோம். இந்த நிலை முற்றாக ஒழிக்கப்படவேண்டும். இதைக் கருத்ததில் கொண்டு பெண்கள் அமைப்பாகிய எங்கள் சங்கம் ஒவ்வொரு வருடமும் சர்வதேச மகளிர் தினத்தன்று எங்கள் சங்கத்துடன்

# கௌரவம் பெறும் போது - சர்வதேச மகளிர் தினம் 2009



பிரதம அதிதி வருகை தரும்போது



சொற்பொழிவாற்றியோர்




பிரதம அதிதியிடம் இருந்து
பெயர்க்கல் பெறும்போது



திருமதி அபிராமி கயிலாசபிள்ளை பரிசு
வழங்கியபோது



திருமதி சசிதேவி நீலகண்டன் பொன்னாடை
போர்த்தும்போது



தாய்,
தந்தையருடன்
சிறு குழந்தையாக



கணவர் பிள்ளைகளுடன்



சகோதரன் கோபால் சங்கரப்பிள்ளை குடும்பம்



சகோதரி லீலா தவக்குமாரன் குடும்பம்



சகோதரி விமலா மணிவாசகன் குடும்பம்



சகோதரி அம்பிகா பிரபாகரன் குடும்பம்



சகோதரன் மோகன் சுப்பிரமணியம் குடும்பம்





இலங்கைப் பரிசோதனை ஆய்வுகூட சங்க அங்குரார்ப்பண வைபவத்தின்போது

இலங்கைப் பரிசோதனை ஆய்வுகூட சங்க ஆராய்ச்சி மகாநாட்டில் தலைமை தாங்கும்போது





இலங்கைப் பரிசோதனை ஆய்வுகூட சங்கம் கௌரவிக்கும்போது

முதுமானிப் பட்டம் பெற்றபோது கணவருடன்





முதுமானிப் பட்டம் பெற்றபோது மாமா கலாநிதி சம்பந்தர், மாமி மேரியுடன்

பேராதனை பல்கலைக்கழக சங்கமித்தா இல்லத் தோழியருடன்



பம்பர் அன்ட் புறூஸ் முகாமைத்துவ அதிபர் பெயர்க்கல் தரும்போது



திருமதி ரிசெற் நயில்ஸ் பூச்செண்டு தரும்போது



பம்பர் அன்ட் புறூஸ் நிறுவன அலுவலர்களுடன்



பேரப்பிள்ளைகள் கஜன், கஜலட்சுமி



பிரியாவிடை வைபவத்திற்கு வருகை தந்தோர்



மாமா திரு. அம்மையப்பர், தங்கை மகள் வாசுகி, ஆச்சி திருமதி காரைக்காலம்மை சங்கரப்பிள்ளை

தொடர்புடைய ஒரு சிறந்த பெண்மணியைத் தெரிவுசெய்து கௌரவித்து வருகின்றது. இந்தவருடம் எங்கள் சங்க அங்கத்தவர்கள் என்னைக் கௌரவத்திற்கு உரிய பெண்ணாக தேர்ந்தெடுத்துள்ளார்கள். இதற்கு மீண்டும் ஒருமுறை நான் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெயரளவில் தான் கௌரவம் எனக்கு வழங்கப்படுகிறதே தவிர இந்தக் கௌரவம் என்னுடன் இணைந்து கருமம் ஆற்றிய எல்லோரையம் சாரும். எனது பெற்றோர்கள், யாழ் இந்து மகளிர் கல்லூரி, எனக்கு அறிவு புகட்டிய ஆசிரியப் பெருந்தகைகள், கல்லூரித் தோழிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழகத் தோழர்கள், முன்னாள் Manchester பல்கலைக்கழக Pharmacology பேராசிரியர், Manchester பல்கலைக்கழகத் தோழர்கள், Bamber & Bruce நிறுவனத்தில் பணியாற்றியோர், யாழ். இந்து மகளிர் சங்கம் - கொழும்பு அங்கத்தவர்கள், இலங்கை இரசாயன மன்ற (Institute of Chemistry, Ceylon) அங்கத்தவர்கள், இலங்கை விஞ்ஞான ஆய்வுகூடங்களின் சங்க (Sri Lanka Association of Testing Laboratories) அங்கத்தவர்கள், இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்க (Sri Lanka Association for the Advancement of Science) அங்கத்தவர்கள், வடகீழ்ப் பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சம்மேளன அங்கத்தவர்கள் எனப் பலரிடமும் பெற்ற அநுபவங்கள் எனக்கு மெருகூட்டின என்றால் மிகையாகாது.

முக்கியமாகக் கூறப்போனால் கைத்தலம் பற்றிய காலத்தில் இருந்து எனது முன்னேற்றத்திற்குப் பின்நின்று உழைத்தவர் எனது கணவர். அவரின் உறுதுணையில்லாமல் என்னால் இவ்வளவு தூரம் முன்னேறியிருக்க முடியாது. அவர் வெகு தொலைவில் இருந்தாலும் ஒவ்வொரு நாளும் அவருடன் மின் அஞ்சல் தொடர்பு உண்டு. எனவே என்றும்போல நெருக்கத்துடன் நாங்கள் குடும்பம் நடத்துகிறோம். அவருடன் சேர்ந்து என்னுடைய மக்களும், குடும்ப உறவினர்களும், நண்பர்களும் பல வழிகளில் உதவியுள்ளார்கள். அவர்கள் எல்லோருக்கும் நான் இத்தருணத்தில் எனது வணக்கங்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடும்பத்தினர் சார்பில் இங்கு வரவேற்புரை நிகழ்த்திய திருமதி அபிராமி கயிலாசபிள்ளை என்றும் எங்கள் சங்க நிதியைப் பேணிக் காப்பவர்.

பிரதம விருந்தினராக இங்கு வருகை தந்திருக்கும் எங்கள் கல்லூரி முன்னாள் அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராஜாவுக்கும் எங்கள் சங்கத்திற்கும் உள்ள பிணைப்பு பலர் அறிந்த விடயமாகும். இவரை எங்கள் சங்கம் சென்ற வருடம் கௌரவித்தது. இன்று வெளியிடப்பட இருக்கும் யாழ்நாதம் இதழ் 15 இவற்றை உங்களுக்கு எடுத்துக்கூறும்.

செல்வி சற்சொரூபவதி நாதன் பல ஆண்டுகளாகச் சங்கத் தலைவியாக இருந்து சங்கத்தை வழிநடத்தியவர்.

நிகழ்ச்சித் தொகுப்பு வழங்கிக் கொண்டிருப்பவரும் இங்கு உரையாற்றியவருமான திருமதி தயாநிதி செல்வநாயகம் எங்கள் சங்கம் ஸ்தாபிப்பதற்கு முன்னின்று உழைத்தவர்.

சிவச்செல்வி சிவலோகநாதனும் நானும் கல்லூரித் தோழிகள்.

அதேபோல் எங்கள் இருவரின் அப்பாமாரும் நீண்டகாலத் தோழர்கள்.

செல்வி சீதா செல்லையாவும் நானும் பல்கலைக்கழகத் தோழிகள். வரவில்லாமல் செலவுகள் செய்து மகிழ்ந்திருந்த அந்தக்காலம் மீளவும் திரும்பி வராது.

Bamber & Bruce நிறுவனத்தில் செல்வி மாலினி ரட்ணசிங்கம் எனது சேவைக்கால ஆரம்பத்திலும் திருமதி ரிசெற் நைல்ஸ் எனது மத்திய சேவைக்காலத்திலும் என்னுடன் சேர்ந்து பணியாற்றியவர்கள். வேலைநேரக் கட்டுப்பாடுகளையும் ஒழுங்குகளையும் Bamber & Bruce நிறுவனத்தில் நிலைநாட்டுவதற்கு செல்வி மாலினி ரட்ணசிங்கம் எனக்கு உடந்தையாக இருந்தவர். Accredited Laboratory ஆக Bamber & Bruce நிறுவனத்தை உயர்த்துவதற்கு திருமதி ரிசெற் நைல்ஸ் என்னுடன் சேர்ந்து உழைத்தவர். இலங்கையிலே முதல் Accredited Laboratory ஆக தரம் உயர்த்தப்பட்டது Bamber & Bruce நிறுவனம் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி யமுனா கணேசலிங்கம் ஆரம்ப காலத்தில் வடகீழ் பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சம்மேளன பொருளாளராகக் கடமை ஆற்றியவர். இக்காலகட்டத்தில் எனக்கு அவருடன் நெருங்கிப்பழகும் வாய்ப்பு எற்பட்டது. எடுத்த வேலையைத் திறம்பட முடிப்பதில் ஆர்வம் காட்டுபவர்.

திருமதி சகுந்தலா துரைரட்ணமும் நானும் இலங்கை இரசாயன மன்றத்தில் இணைச் செயலாளர்களாக 5 வருட காலம் சேவை செய்தோம். இக்காலத்தில் எனக்குப் பலவித அனுபவங்கள் ஏற்பட்டன. இரசாயனம் சம்பந்தமான சொற்பொழிவுகள் ஒழுங்கு செய்தல், செய்முறைகள் செய்து காட்டுவதற்கு ஒழுங்கு செய்தல் இரசாயன மாயாஜாலம் (magic) செய்வதற்கு ஒழுங்கு செய்தல், மாணவர்களிடையே வினாவிடைப் போட்டிகள் ஒழுங்குசெய்தல், திறமை மிக்க மாணவர்களுக்கும் இரசாயன வித்தகர்களுக்கும் பரிசில்கள் வழங்க ஏற்பாடு செய்தல், ஆண்டுப் பொதுக்கூட்டங்கள் (AGM) ஒழுங்கு செய்தல், வருடாந்தக் கூட்டத்தொடர்கள் (Annual Session) ஒழுங்கு செய்தல் என்பவற்றை நாம் இருவரும் இணைந்து செய்தோம். இவை எல்லாவற்றையும் கொழும்பிலும் கொழும்பிற்கு வெளியேயும் ஒழுங்கு செய்வது எங்களுக்கு இனிமையான விடயங்களாக இருந்தன. இந்த நாட்கள் எனக்கு மறக்க முடியாத நாட்களாகும்.

திருமதி சுபத்திரா ஜெயசிங்காவும், அவருடைய வாழ்த்துரையை வாசித்த திருமதி சுமதி ராஜசிங்கமும், நானும் இலங்கை விஞ்ஞான ஆய்வுகூடங்களின் சங்க முன்னேற்றத்தில் ஒருங்கிணைந்து செயற்பட்டு வருகின்றோம். விஞ்ஞான ஆய்வுகூடங்களைத் தரப்படுத்துதல் சர்வதேச ரீதியில் நடைபெற்று வருகின்றது. பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுகூடங்களின் (Accredited Laboratories) முடிவுகளை (results) எல்லா நாடுகளும் ஏற்றுக்கொள்ளுகின்றன. இதனால் திருப்பி ஆய்வு செய்யவேண்டிய (repeat analysis) அவசியம் இல்லை நேரமும் பணமும் மிச்சப்படும். இலங்கையில் உள்ள ஆய்வுகூடங்களின் தரத்தை உயர்த்துவதே இந்த சங்கத்தின் குறிக்கோளாகும்.

இந்த நேரத்தில் நான் இருவரை நினைவு கூர விரும்புகிறேன். ஒருவர் எனது பெரியப்பா திரு. சரவணமுத்து. பல்கலைக்கழக புகுமுகப் பரிட்சையில் நான் சித்தி அடைவதற்கு பல வழிகளிலும் உதவி புரிந்தவர். மற்றவர் முன்னாள் Manchester பல்கலைக்கழக Pharmacology பேராசிரியர் ஷினைடன். நான் முதுமானிப் (M.Sc.) பட்டம்பெற எனக்கு வழிகாட்டியவர். இவர்கள் இருவரும இப்போது எம்மிடம் இல்லை. இவர்களின் ஆத்ம சாந்திக்கு நான் பிரார்த்திக்கின்றேன்.

இங்கு வருகை தந்து இந்த நிகழ்விற்குச் சிறப்பூட்டிய உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்

*திருமதி கௌரி ரமணா*

திருமதி கௌரி ரமணா அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளரின் திணைக்களத்தில் சிரேஷ்ட உதவி பகுப்பாய்வாளராக பதவி வகிக்கின்றார். இலங்கை இரசாயன மன்றத்தில் அங்கத்தவராகவும் விளங்குகின்றார்.

எமது சங்கத்தின் செயலாளராகிய இவர் நன்றியுரை கூறி இறை வணக்கம் செலுத்தி இந்த நிகழ்வை நிறைவு செய்து வைப்பார்.

# நன்றி உரை

சங்கத் தலைவி அவர்களே, பிரதம விருந்தினர் அவர்களே, அமர்ந்திருக்கும் பெரியோர்களே, சபையோர்களே எல்லோருக்கும் வணக்கம்.

முதலில் எமது நிகழ்ச்சியை சிறப்பிப்பதற்காக வருகை தந்த உங்கள் எல்லோருக்கும் எமது சங்கத்தின் சார்பில் நன்றி. நன்றியை இவ்வாறு ஒரு வசனத்தில் சொல்லி முடிக்க முடியாது. தனித்தனியாக நன்றி சொல்லியாக வேண்டும்.

முதலில் எமது சங்கத்தின் தலைவியும் பாராட்டுக்குரியவருமான திருமதி சிவகாமி அம்பலவாணருக்கு எனது தனிப்பட்ட நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனெனில் நான் செயலாளராக இருந்தாலும் எனது வேலைகளில் பாதி வேலையை அவரே செய்கின்றார். இது மட்டுமல்லாது எமது பாடசாலைக்கு பலவகையான உதவிகளை எமது சங்கத்தின் மூலமாக செய்து முடித்த பெருமையிலும் இவருக்கு பங்குண்டு. முக்கியமாக பல்வேறு நிகழ்ச்சிகளிலும் ஆகக் கூடிய நுழைவுச் சீட்டுகளை இவர் விற்று உதவியுள்ளார். எமது சங்கத்தின் சார்பில் தலைவிக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிரதம விருந்தினர் எமது கல்லூரி முன்னாள் அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராஜா அவர்கள் தமது நேரத்தை ஒதுக்கி இந் நிகழ்விற்கு வருகை தந்து சிறப்பித்தமைக்காக எமது சங்கத்தின் சார்பில் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது சங்கத்தின் சார்பில் பேசிய சங்கத்தின் உபதலைவிகள் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை செல்வி சற்சொரூபவதி நாதன் திருமதி தயாநிதி செல்வநாயகம் அவர்களுக்கும் எமது சங்கத்தின் சார்பில் நன்றிகள் பல.

எமது சங்க உறுப்பினர்கள் திருமதி சிவச்செல்வி சிவலோகநாதன் செல்வி சீதா செல்லையா அவர்களுக்கும் எமது சங்கத்தின் சார்பில் நன்றிகள்.

Bamber & Bruce தாபனத்தின் சார்பில் பேசிய செல்வி மாலினி ரட்ணசிங்கம் திருமதி Triset Niles அவர்கள் தங்களின் பல வேலைகளின் மத்தியிலும் இதற்கு நேரத்தை ஒதுக்கி வருகை தந்து பேசியமைக்காக எமது சங்கத்தின் சார்பில் இதயபூர்வமான நன்றிகள்.

வடகீழ் பிராந்திய பழைய மாணவர் சம்மேளனம் சார்பில் பேசிய திருமதி யமுனா கணேசலிங்கம் தமது நேரத்தை ஒதுக்கி வருகை தந்து பேசியமைக்காக எமது உள்ளம் கனிந்த நன்றிகள் பல.

இலங்கை இரசாயன மன்றத்தின் சார்பில் பேசிய திருமதி சகுந்தலா துரைரட்ணம் தமது விலை மதிக்க முடியாத நேரத்தை ஒதுக்கி வருகை தந்து பேசியமைக்காக எமது சங்கத்தின் சார்பில் இதயபூர்வமான நன்றிகள்.

இலங்கை விஞ்ஞான ஆய்வுகூட சங்கத்தின் சார்பில் குறிப்பை எழுதிய திருமதி சுபத்திரா ஜெயசிங்காவிற்கு எமது நன்றிகள். அவர் எழுதிய குறிப்பை வாசித்த திருமதி சுமதி ராஜசிங்கம் தமது வேலைகளிற்கு மத்தியிலும் நேரத்தை ஒதுக்கி வந்தமைக்கு எமது அன்பு கனிந்த நன்றிகள்.

தற்போதைய யாழ் நாதம் இதழை பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் வெளியிட்ட எமது இதழ் ஆசிரியை திருமதி விமலா மணிவாசகனுக்கு எமது அன்பான நன்றிகள்.

எமது நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு எமக்கு மண்டபத்தை தந்து ஒழுங்குகளை செய்து தந்த இந்து வித்தியா விருத்திச் சபைக்கும் அதன் ஊழியர்களுக்கும் எமது சங்கத்தின் சார்பில் இதயபூர்வமான நன்றிகள்.

எமது நிகழ்ச்சிகளை நிழற்படமாக எடுப்பதற்கு வந்த வீடியோ Blossom நிறுவனத்திற்கு எமது மனம் கனிந்த நன்றிகள்.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறுவதற்காக வருகை தந்த சபையினருக்கு நன்றிகள் பல பல.

எமது நிகழ்ச்சிகள் பற்றி பிரசுரித்த வீரகேசரிக்கு எமது சங்கத்தின் சார்பில் மனம் கனிந்த நன்றிகள்.

கடைசியாக கூறினாலும் எமது சங்க உறுப்பினர்களினதும் ஒத்துழைப்பும், ஆதரவுமே இந் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற உதவியது. எமது சங்க உறுப்பினர்களுக்கு நன்றிகள் பல.

மீண்டும் எல்லோருக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன்.

வணக்கம்

திருமதி கௌரி ரமணா
கௌரவ செயலாளர்

Hari Om

12, Retreat Road
Colombo - 4
8-3-2009

எனது அன்புச் சகோதரி திருமதி சிவகாமி அம்பலவாணர்!! அவர்கட்கு:-

இப் பொன்னான நன் நாளில் பொருத்தமான பாராட்டுக்கள் உங்களை நாடி பறந்து வரும் வேளையில் நானும் எனது மனப்பூர்வமான, பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் என் சிறிய அளவில் மௌனமான முறையில் உங்கள் கையில் சமர்ப்பிக்கிறேன்.

மேடையில் ஏறி பாராட்டா விட்டாலும் என்றும் என் பாராட்டுக்கள் உங்களுக்கு உண்டு. சர்வதேச மகளிர் தினத்தில் அமைதியாக, என்றும் பண்புடன் எம் கல்லூரி அலுவல்களை வழி நடாத்தி, தலைவியாக, ஆனால் பெருமையற்று, சேவைகள் செய்தமைக்கும், பல பல பட்டப் படிப்புகள் நிறைந்த உங்கள் திறமைக்கும் ஏற்ற முறையில் இன்று சகலரும் போற்றி உங்களை கௌரவிப்பது மிக மிக பொருத்தமாக உள்ளது. என்றும் கடவுள் உங்களை வழி நடாத்தி ஆசீர்வதிக்க வேண்டுகிறேன்.

அன்பின்
சக மாணவி
பொன்மலர் கந்தசாமி

பரிசுடன் வந்த வாழ்த்து.

To My Dear Sivakami

God bless You

This comes
especially
to congratulate you
at this proud moment
in your life,
and also to wish that
your future be filled with
much happiness
and success in all that you do.

Congratulations
With Love
From:- Ponmalar.

# தொழில்நுட்ப வித்தகி சிவகாமி அம்பலவாணர்

எஸ். பேராசிரியன்

1970ஆம் ஆண்டு முற்பகுதியில் இங்கிலாந்து மன்செஸ்டர் பல்கலைக்கழக ஆய்வு கூடத்தில் ஒரு காலைப்பொழுது தொழில்நுட்பவியலாளர் சிவகாமி தனது வேலையில் மூழ்கியிருந்தவேளை மருந்தகவியல் பேராசிரியர் எச். ஷனிடின் சிவகாமியை ஆசிரிய பீடத்திற்கு வரும்படி அழைப்பு விடுத்தார். இயல்பாகவே பயந்த சுபாவமுடைய சிவகாமி ஏதோ என்னவோ என நெஞ்சு படபடக்க இவர் முன் ஆஜாரானார். 'உமது கடின உழைப்பும் விடாமுயற்சியும் அறிவாற்றலும் என்னை நன்றாகக் கவர்ந்துவிட்டன. மேலும் எனது ஆராய்ச்சி வெற்றிக்கு உமது ஒத்துழைப்பு உறுதுணையாக இருந்தது. எனவே இன்று முதல் உம்மை ஆராய்ச்சி உதவியாளராகப் பதவி உயர்த்துகிறேன்' என்றார். சிவகாமிக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. அப்பதவி மூலம் தனது நெடுநாளைய கனவாகிய உயர்பட்டப் படிப்பிற்கு வழி கிடைக்கும் என நம்பினார். மேலும் பேராசிரியர் ஷனிடின் 'இனிமேல் நீர் மேற்கொள்ளவிருக்கும் பகுப்பாய்வுகளைத் தொகுத்து ஒரு தத்துவக் கட்டுரை எழுதி உயர்கல்வி பேராசிரியர் குழுவிற்குச் சமர்ப்பித்து உயர்பட்டம் பெறும் நோக்குடன் செயற்படும்' எனப் பணித்தார். அவ்வாறே செயற்பட்டு அவர் வரைந்த ஆய்வுக் கட்டுரை மன்செஸ்டர் பல்கலைக்கழகத்தால் தரமானதென கணிக்கப்பட்டு அவருக்கு எம்.எஸ்.சி. பட்டம் வழங்கப்பட்டது.

அவர் எழுதிய 'தவளைத்தோல், மற்றும் தேரையின் நீர்ப்பையில் போக்குவரத்து முறையைப் பாதிக்கும் மருந்து வகைகளின் தாக்கங்களும், உட்தாக்கமும்' என்னும் ஆய்வுக்கட்டுரை அவருக்கு உயர் பட்டத்தை வழங்கியதுமல்லாது, சக ஆய்வாளர்களால் அரிய புதிய முயற்சி எனப் பாராட்டையும் பெற்றது. தொடர்ந்து சிவகாமி உயிரியல் துறையிலேயே பல ஆய்வுகளை மேற்கொண்டு அவ்வகை உயிரினத்தின் அவயவங்களில் மருந்து ரகங்களின் பாதிப்பு ஆகியவற்றை ஆராய்ந்து கட்டுரைகள் வரைந்தார். அக்கட்டுரைகள் உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற மருந்து மற்றும் மருந்தகவியல் சர்வதேச சஞ்சிகையில் பிரசுரமாகி அவருக்குப் பெரும் புகழையும் கீர்த்தியையும் கொடுத்ததுடன் விஞ்ஞானி என்ற சர்வதேச அங்கீகாரமும் கிடைக்கப்பெற்றார்.

சிவகாமி யாழ்ப்பாணத்தில் சைவக் குடும்பத்தில் பிறந்தார். தகப்பனார் வயித்தியலிங்கம் பெரும் சமூக சீர்திருத்தவாதி. அந்நாளில் கம்யூனிஸ்ட் வயித்தியலிங்கம் என்றால் யாழ்ப்பாணத்தில் தெரியாதவரே இல்லையெனலாம். அவர் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் அதிபராக இருந்து, மாணவர்களை முன்னேற்ற அயராது பாடுபட்டவர். தாயார் அன்னபூரணி. இரு சகோதரர்களுக்கும் மூன்று சகோதரிகளுக்கும் மூத்தவராகச் சிவகாமி பிறந்தார். யாழ். இந்து மகளிர் கல்லூரியில் சிறுவயதிலிருந்தே முதல் மாணவியாகக் கல்வி பயின்று அந்தக் கல்லூரியில் இருந்து பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட இரு

மாணவிகளில் ஒருவராகப் பல்கலைக்கழகம் புகுந்து 1966 இல் பி.எஸ்.சி பட்டம் பெற்றார்.

சிவகாமி ஜனாதிபதியின் மேலதிக செயலாளரும் பிரதமரின் ஆலோசகருமாக பெரும் பதவி வகித்த டாக்டர் அம்பலவாணரைக் கரம் பற்றி இல்லற பந்தத்தில் இணைந்து இரு பிள்ளைகளைப் பெற்றெடுத்தார். மூத்தவர் குமரன் இங்கிலாந்தின் லைசெஸ்டர் பல்கலைக்கழகத்தில் மாணவர் சங்க ஆலோசகராகக் கடமையாற்றுகிறார். இளையமகள் அனுராதா நாட்டிய மற்றும் சங்கீத ஆசிரியராக நியூசிலாந்தில் கடமை புரிகிறார்.

தற்போது சிவகாமி பம்பர் அன்ட் புரூஸ் நிறுவனத்தில் பிரதம பகுப்பாய்வாளராக கடமையாற்றுகின்றார். இதற்கு முன்பாக அதே நிறுவனத்தில் 1975 ஆம் ஆண்டு தொடங்கி உதவி பகுப்பாய்வாளராகவும் பிரதி பகுப்பாய்வாளராகவும் கடமையாற்றி உயர் அதிகாரிகளின் நன்மதிப்பைப் பெற்று அந்த ஆய்வு கூடத்தின் தலைவராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். இவரது அயராத முயற்சியினாலும் கடின உழைப்பாலும அந்த நிறுவனத்தின் மதிப்பு மற்றும் இலாபம் உயர்ந்ததுமல்லாது அவரது ஆய்வு கூடத்திற்கு அரசாங்க அங்கீகாரமும் கிடைத்தது. அகில இலங்கையிலுமே அரசாங்க அங்கீகாரம் பெற்ற முதலாவது ஆய்வுகூடம் பம்பர் அன்ட் புரூஸ் நிறுவனமாகும்.

சிவகாமி அகில இலங்கை இரசாயன (பட்டயவியலாளர்) சங்கத்தின் Fellow அங்கத்தவராகவும் உயிரியல் சங்கத்தின் அங்கத்தவராகவும் இருந்து இச்சங்கங்களில் இணைந்து பெரும் சமூக சேவையாற்றி வருகின்றார். இலங்கை இரசாயன சங்கத்தில் ஆட்சிக் குழுவில் கவுன்ஸில் அங்கத்தவராக, சர்வதேச தொடர்புகளுக்கான செயலாளராக பல்வேறு பதவிகள் வகித்து பல்வேறு கருத்தரங்குகள், அகில இலங்கை மாணவர்களுக்கிடையான போட்டிகள், சொற்பொழிவுகள், ஆண்டுப் பொதுக்கூட்டம், ஆய்வுக் கட்டுரை கருத்தரங்கு முதலியனவற்றை திறம்பட ஒழுங்கு செய்து நடாத்தி பெரும் பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். மேலும் அவர் இலங்கை பரிசோதனை ஆய்வு கூட சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராக இருந்து பல நிகழ்ச்சிகளை நடாத்தியதுடன் 2008 ஆம் ஆண்டு அதன் தலைவராக இருந்து அரும் பணியாற்றிவருகின்றார்.

1993 ஆம் ஆண்டிலிந்து யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் (கொழும்பு) சங்கத்தின் முக்கிய பதவிகளை வகித்து அரும்பணியாற்றி வந்துள்ளார். அவரது அயராத உழைப்பையும், விடாமுயற்சியையும் ஆளுமையையும் அவதானித்த உறுப்பினர்கள் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் அவரை தலைவராகத் தெரிவு செய்திருந்தனர்.

1995 ஆம் ஆண்டு நடைபெற்ற இடப்பெயர்வின் போது, யாழ். இந்து மகளிர் கல்லூரியில் தளபாடங்கள் உபகரணங்கள், ஆவணங்கள் என்பன அழிந்தும் திருட்டுப் போயும் கல்லூரிக்கு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்ட வேளை சிவகாமி அர்ப்பணிப்புடன் செயல்பட்டு பெருமுயற்சியெடுத்து, லண்டன், கனடா, மற்றும் அவுஸ்திரேலியா பழைய மாணவிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி நிதியைப் பெற்று பெரும் சிரமத்தின் மத்தியில் ஏனைய செயற்குழு உறுப்பினர்கள் அதிபர் ஆகியோருடன் இணைந்து கல்லூரியை பழைய நிலைக்குக் கொண்டு வரப் பெரிதும் உதவினார்.

இச்சங்கத்திலிருந்து ஆங்கில, தமிழ் தட்டச்சுகள், கம்பியூட்டர்கள், புரெஜெக்டர், பெருந்தொகை நூல்கள் முதலியவற்றை நன்கொடையாக அனுப்பி வைத்தார். மேலும் கடந்த 15 வருடங்களாக யாழ் நாதம் என்னும் சஞ்சிகையை பிரசுரித்து வந்துள்ளார்.

இவரின் சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் முகமாக அண்மையில் சரஸ்வதி மண்டபத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் (கொழும்பு) சங்கம் நடாத்திய சர்வதேச மகளிர் தின விழாவில் சிவகாமி அம்பலவாணர் சிறந்த பெண்மணியாகப் பாராட்டப்பட்டு தொழில்நுட்ப வித்தகி என்னும் கௌரவப்பட்டம் வழங்கப்பட்டது.

நன்றி: ஞாயிறு தினக்குரல் 15 மார்ச் 2009 பக்கம் 23

# சமூக சேவகி திருமதி சிவகாமி அம்பலவாணர்

யாழ்ப்பாணத்தில் சைவப் பாரம்பரியமும் தமிழும் வேரூன்றிய ஊரான நீராவியடியினை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி. சிவகாமி அம்பலவாணர் அவர்கள் மகளிர் தினத்தில் சிறந்த செயற்றிறன் மிக்க பெண்மணியாக தெரிவு செய்யப்பட்டு, அவருக்கு **'தொழில் நுட்ப வித்தகி'** என்ற விருது வழங்கப்பட்டதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவர் தனது ஆரம்பக்கல்வியினை யா/தமிழ் கலவன் பாடசாலையிலும் (தற்போது யா/ இந்து ஆரம்ப பாடசாலை) உயர் கல்வியை யா/இந்து மகளிர் கல்லூரியிலும் கற்று மேற்படிப்பினை பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் மன்செஸ்ரர் பல்கலைக் கழகத்திலும் மேற்கொண்டார்.

இவர் சிறந்த சமூக சேவகியாக தம்மை அர்ப்பணித்தார். 1993.8.21 அன்று யா/ இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம், கொழும்புக்கிளை முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. அதில் உறுப்பினராக இணைந்து கொண்டு தனது சேவையை மேலும் மெருகூட்டியுள்ளார். அன்று முதல் இன்று வரை கல்லூரி வளர்ச்சிக்கு அயராது உழைத்துக் கொண்டிருக்கின்றார்.

தனது சேய்ப்பாடசாலையான யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலைக்கு இவரின் முயற்சியாலும் இவரது சகோதரி திருமதி. விமலா மணிவாசகர் அவர்களாலும் எமக்கு பல கற்றல் உப கரணங்களையும் நிதி உதவிகளையும் வழங்கி எமது பாடசாலை வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் பங்கு கொண்டுள்ளார்கள் என்றால் மிகையாகாது. திருமதி சிவகாமி அம்பலவாணரின் சேவை மென்மேலும் வளர்ச்சியடைந்து

எதிர்காலத்தில் நல்ல சமூக சேவகியாக தம்மை வளப்படுத்தி, நல்ல தேக ஆரோக்கியத்துடன் வாழ எல்லாம் வல்ல நடுத்தோட்டத்து இரா ஜவரோதயப் பிள்ளையார் ஆசியினை வேண்டி நிற்கின்றோம்.

நன்றி

திருமதி சுபாங்கினி சுஜீவன்
தலைவி
பழைய மாணவர் சங்கம்
யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

என்னுடைய அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரான

## திருமதி சிவகாமி அம்பலவாணர்

(யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் – கொழும்பு)
அவர்களுக்கு

08.03.2009 சர்வதேச மகளிர் தினத்தன்று அவர்தம் சேவை நலம் பாராட்டி

## 'தொழில் நுட்ப வித்தகி'

என்னும் விருதினை வழங்கிச் சிறப்பித்தமையையிட்டு
யாழ் இந்து மகளிர் ஆரம்பபாடசாலை அதிபர் திருமதி. தனரஞ்சனி
துரைசிங்கம் அவர்கள் உளமிக மகிழ்ந்து மனமுவந்தளித்த

## 'பாராட்டு வாழ்த்துப் பாமாலை'

செந்தமிழ் வளர்த்திடும் செழிப்புமிகு யாழ்ப்பாண
இந்து மகளிர் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்க
திருமிகு தலைவர் திருமதி சிவகாமி அம்பலவாணருக்கு
விருப்பொடு வழங்கிய நல்விருது பொருத்தமானது தானே!

மாணவருலகின் இன்றைய மாபெருந்தேவையை உணர்ந்தே
மாண்புமிகு சேவையை ஆற்றிய பெண்மணி சிவகாமி தனக்கு
'தொழில் நுட்ப வித்தகி' என்ற பட்டமது சூட்டியே
பொழில் மிகு வாழ்வில் எழில் சேர்ந்தமையை வாழ்த்துகின்றேன்!

வளம் மிகுந்த வாழ்க்கையில் வயித்தியலிங்கம் அன்னபூரணி
களம் அமைத்துத் தந்த நற்பெண்மணியைப் பெற்றெடுத்தீர்!
உளம் மகிழ வாழ்த்துகின்றேன் உத்தமியே தர்மபத்தினியே!
வளமோடு நீர் வாழ்கவென வாயார வாழ்த்துகின்றேன்!

இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையின் இன்னோரன்ன தேவைக்காக
உந்து சக்தியால் நீர் எமக்களித்த தொழில்நுட்ப சாதனங்கள் பல
விந்தை தனைப் புரியவே உத்தமியே வேண்டுதல் செய்கின்றேன்
சிந்தையில் மகிழ்ச்சி நீர் பொங்கச் சீரோடு வாழ வாழ்த்துகின்றேன்!

கண்ணியம் மிகுந்தவரே! கடமை தவறாத வீரரே!
புண்ணியமே செய்த நாம் உமது செயலால் உயர்ந்தோமே!
மண்ணிலே நினது புகழ் மாண்புடன் திகழ்ந்திடவே
எண்ணிய கருமம் இனியதாய் நிறைவுற வாழ்த்துகின்றேன்!

சிந்தனைப் பெட்டகமே! சிறந்த தொழில்நுட்ப வித்தகியே!!
உந்தனை வாழ்த்துவதில் நான் உவகையே கொள்கின்றேன்
கந்தனை வணங்கி நீர் அன்புக் கணவர் பிள்ளைகளுடன் வாழ
வந்தனை செய்கின்றேன் வளமோடு வாழ்க பல்லாண்டே!

எனது அன்பு மாணவச் செல்வங்களுக்கு, அவர்களின் கல்வி அபிவிருத்திக்காக தொழில்நுட்ப சாதனங்களை அன்பளிப்பாய் வழங்கி அவர்களின் முன்னேற்றத்துக்காக உதவி, காலத்தின் தேவையை உணர்ந்து பூர்த்தி செய்த உத்தமி திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்கள் இன்னும் நீண்டகாலம் வாழ்ந்து இனி வரப்போகும் எதிர்கால மாணவசந்ததியும் வாழ்த்துக்கூற பூவோடும் பொட்டோடும் பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என்றும் உளமார வாழ்த்துகின்றேன்.

வாழ்க வளமுடன்!
வாழ்க நீடுழி வாழ்க வாழ்கவே!

*அன்புடன் வாழ்த்தி நிற்கும்*
*அதிபர் – திருமதி தனரஞ்சனி துரைசிங்கம்*
*யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.*
*யாழ்ப்பாணம்*
*2009.03.31*

## யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் 'சக்தி' சஞ்சிகையின் வெளியீட்டுக்கு சென்ற பொழுது ........

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் சஞ்சிகையான சக்தி இரு தசாப்தங்களாக வெளிவராது இருந்தது. இதனை வெளியிடுவதற்கு அப்போதைய அதிபராக இருந்த திருமதி சரஸ்வதி ஜெயராஜா அரும்பாடுபட்டு வெற்றி கண்டார். அவருக்கு உதவியாக இருந்த ஆசிரிய சமூகத்தினருக்கும் மாணவ மணிகளுக்கும் நன்றி கூற கடமைபட்டுள்ளோம். இதனை வெளியிடுவதற்கு 2002ஆம் ஆண்டு கொழும்பு பழைய மாணவிகள் சங்க செயலாளரான திருமதி சிவகாமி அம்பலவாணரை அழைத்திருந்தார். அப்பொழுது பாடப்பட்ட வரவேற்புப் பாடலில் சிவகாமிக்கு உரிய பகுதியும், அவருக்கு கூறப்பட்ட நன்றி உரையையும் கீழே காணலாம்.....

வரவேற்புப் பாடலில்.....

அம்பலவாணருக்கு அருகிருக்கும் அம்மை
அரியதிரு சிவகாமி என்னும் அந்த நங்கை
செம்மைசேர் விஞ்ஞானம் சிறப்புறவே கற்ற
சிறப்பான பெரும் பதவி தாங்கும் இந்த அம்மை

எம்நூலை ஏற்று வெளியிடவே வந்தார்
எமக்கினிய அறிவுரைகள் இயம்பிடவே வந்தார்
நம்தமிழர் பண்பதனை நாம் மறக்க மாட்டோம்
நாயகியே நல்லுரையை நல்கும்

நன்றி உரையில்......

பல வகையிலும் ஒத்துழைப்பு வழங்கும் கொழும்பு சங்கத்தின் செயலாளர் திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்கள் இன்று வருகை தந்திருந்தது எனக்கு பெருமையையும் மகிழ்ச்சியையும் அளிக்கின்றது. எமது சஞ்சிகையை அவர் வெளியிட்டு வைப்பதையிட்டுப் பெருமைப்படுகின்றேன்....

# வீரகேசரி பத்திரிகை



யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்-கொழும்பில் நடத்திய சர்வதேச மகளிர் தின நிகழ்வு 08.03.2009 அன்று மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. யாழ். இந்து மகளிர் கல்லூரி முன்னாள் அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராஜா பிரதம அதிதியாக கலந்து நிகழ்வை சிறப்பித்தார்.



நிகழ்வின் சிறப்பு அம்சமாக யாழ். இந்து மகளிர் கல்லூரியின் புகழ்பூத்த மாணவியும் யாழ். இந்து மகளிர் கல்லூரி - கொழும்பு பழைய மாணவிகள் சங்க தலைவியும் இலங்கை பரிசோதனை ஆய்வுகூடங்களின் சங்க தலைவியும் Bamber & Bruce நிறுவனத்தின் பிரதம பகுப்பாய்வாளராக பணிபுரிபவருமான திருமதி சிவகாமி அம்பலவாணர் சிறந்த பெண்மணியாகப் பாராட்டப்பட்டு **'தொழில் நுட்ப வித்தகி'** என்னும் பட்டம் அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

சங்கத்தின் வருடாந்த சஞ்சிகையான யாழ் நாதம் இதழ் 15 இதழாசிரியரான திருமதி விமலா மணிவாசகன் அவர்களினால் அன்றைய தினம் வெளியிடப்பட்டது.

திருமதி தயாநிதி செல்வநாயகம்; சிவகாமி அம்பலவாணருக்குப் பொன்னாடை போர்த்துவதையும் திருமதி விமலா மணிவாசகன் யாழ் நாதம் முதல் பிரதியை, சரஸ்வதி ஜெயராஜாவிற்கு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

நன்றி :- சங்கமம் சனிக்கிழமை, மார்ச்21, 2009 05 பக்கம்
வார வெளியீடு கதிர் ஞாயிற்றுக்கிழமை, மார்ச்22, 2009 10 பக்கம்

# Thank You Dear Madam

Views of Staff Members who have worked with Mrs. Sivakamy Ambalavanar during her career (15th February 1975 to 31st March 2009) at Bamber and Bruce (Pvt.) Ltd.

Your Support, Patience and Guidance will always be Appreciated.......

Dear Madam,

You are great and we miss you so much.

*Abeynanda*

Dear Madam,

My sincere thanks for all the guidance and kindness extended to me. Wish you a happy and healthy retirement.

*Vinoka*

Dear Madam,

Your advices and support gave me a whole new direction.

*Inoka*

Dear Madam,

We miss you so much........

*Sameera*

Dear Madam,

'You always was like a mother to me and I wish you a happy and healthy long life from the bottom of my heart'.

*Chamini*

Dear Madam,

Thank you very much for every thing.

*Darshani*

Dear Madam,

Your advice and support is in my mind forever. I wish you a happy and healthy long life.

*Y. Premaratne*

Dear Madam,

You are always good, kind, generous and helpful to me. During my association with you I never felt that you are superior to me. I always looked at you like my mother.

*Kandiah*

Dear Madam,

Your Kindness and Guidance is embedded in our hearts.

*Rohan Samaranayake*

Dear Madam,

Thank you very much for your kind co-operation.

*Hasika*

Dear Madam,

Thank you for your great advice and support to us.

*Bandara*

Dear Madam,

Thank you for your kind treatment to me as I was spending nice time here.

*Kumari Senivirathna*

Dear Madam,

I wish you a happy and healthy long life.

Selvaraj

Dear Madam,

Thank you for everything you have done for me and wish you a bright and prosperous future. . . .

*Kadhireshan*

Thanks a Million

Those who bring sunshine to others and always take time on their way, to reach out in kindness and friendship and brighten up somebody's day. . . Those who are thoughtful enough to find some pleasant and nice things to do, those who make others happy. . . Are certain to be happy, too!

*Your subordinates*

My dear Madam,

If I tried to write down, the gratitude I feel, I'd still be very short of expressing everything, for there's a lot, that mere words cannot reveal. . . So, this is but a humble token of my feelings that I send you, which says, "I really do appreciate, everything and I sincerely do Thank You."

*Your loving pupil, Priyanthi*

Dear Madam,

Thank you for Everything—What you have done for us was absolutely great and this comes to say that we always remember you with glad and thankful hearts.

*With love and special wishes, Ganga, Priyanthi, Amara, Champa, Shakoor, Trisette, Dharmasena, Varuni, Sandhamini, Harshi, Roshani, Jackie, Janaki, Vanigasekara, Malini and Ranji*

SLATL

To: Mrs Ambalavanar

IN
APPRECIATION
OF THE
SERVICES RENDERED
TO
SRI LANKA ASSOCIATION
OF TESTING LABORATORIES

From:
Executive Committee SLATL

06/04/2009

Dear Madam.

Thank you very much for your kindness for giving me a nice Character certificate. Kadhireshan gave it to me today.

I am really lucky to have had such a kind-hearted boss like you Also I am really proud to say that I was working under Mrs. Ambalavanar. And I really thank God who gave me a boss like you from my first appointment.

Not only Subject Matter but also I learnt great humanity from you. Sometimes you were a boss to me always guiding me and sometimes you were like my Mother always supporting me.

Dear Madam you taught me how to face problems and achieve goals. Sometimes I was wondering about your Patience and Silence and the Strong Spirit inside you.

My Dear Madam thousand hundred thanks for everything you have done for me and again and again I am saying that your Support, Patience and guidance will always be appreciated.

God bless you !

Yours loving,
Sameera.

பரிசு தந்தும், மாலை அணிவித்தும், பொன்னாடை போர்த்தும் வாழ்த்தியவர்கள்.

செல்வி சற்சொரூபவதி நாதன்
திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தன்
திருமதி சிவச்செல்வி சிவலோகநாதன்
திருமதி குகஜோதி விஜயநாயகம்
திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்
திருமதி சாரதாம்பாள் மனோகரன்
திருமதி S. நீலகண்டன்
திருமதி மல்லிகாதேவி சரவணபவானந்தன்
திருமதி கௌரி ரமணா
திருமதி மிதிலா ஸ்ரீ பத்மநாதன்

# பல்லாயிரம் மைல்கள் இடைவெளி ஆனால் நெருங்கிய திருமண வாழ்க்கை

நியூசிலாந்து நாட்டிற்கு நிரந்தர வதிவிற்கான விண்ணப்பத்தினை என்னுடைய மனைவியான சரசு என்று செல்லமாக அழைக்கப்படும் சிவகாமி சமர்ப்பித்துவிட்டு அனுமதியை எதிர்பார்த்து இருந்த காலம் அது. இன்றிலிருந்து சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு என்று நினைக்கிறேன். பாங்கொக் நியூசிலாந்து தூதரக அலுவலகத்திலிருந்து அவருக்கு கிடைத்த மின் அஞ்சலில் கேட்ட கேள்விகளில் ஒன்று, "நீங்களும் உங்கள் கணவரும் பல மாதங்களாக பிரிந்து வசிக்கின்றீர்களே. விவாகரத்து செய்து விட்டீர்களா?" இதை எனது மனைவி மின் அஞ்சல் மூலம் எனக்கு அனுப்பி இருந்தார். சிலருக்கு திருமண பந்தம் என்றால் விளங்கவில்லை. தொடர்பு சாதனங்கள் மிகவும் விருத்தி அடைந்துள்ள இந்த நாட்களில் எமது வாழ்க்கை நெருக்கமாக அமைவதற்கு இச்சாதனங்கள் மிகவும் உதவுகின்றன. நானும் சரசுவும் மின் அஞ்சல் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளாத நாட்களை விரல்விட்டு எண்ணலாம்.

1944 ஆம் ஆண்டு சரசு பிறப்பதற்கு முன்பு வீட்டில் நான்தான் செல்லப் பிள்ளை. 1954 ஆம் ஆண்டு என் தாயார் மறைந்த பின் என் தாயாரின் இடத்தை இன்றுவரை நிரப்பி உள்ள நான் அக்கா என்று அழைக்கும் சரசுவின் தாய் என்னை அரவணைத்து வழி நடத்தினார். அவருடைய மூத்த மகளான சரசுவுக்கு அந்த நாட்களில் 'குஞ்சு' என்று இன்னுமொரு செல்லப் பெயரும் இருந்தது. இப்பெயருக்கு ஏற்ற சிறுமியாக அவர் என் மடியில் தவழ்ந்து மழலை பேசிய நாட்கள் இன்றும் பசுமையாக என் மனத்தில் உள்ளன. அந்த நாட்களில் அவர் என்னை நல்ல மாமா என்று அழைப்பார்.

கணிதத்தில் இளமானி பட்டம் பெற்று 1960 ஆம் ஆண்டு நான் உத்தியோகம் பார்க்கத் தொடங்கிய நாட்களில் என் ஒரே தமையனார் திருமணம் செய்து கொண்டார். என்னுடைய திருமணம் பற்றியும் சிலர் பேசியது என் காதில் பட்டது. அந்த வேளை என் அண்ணியின் உயிர்த் தோழியாக விளங்கிய சரசு பற்றி ஏதோ பேசிக்கொண்டிருந்தபோது என் அண்ணா கேட்டார், "சரசு உனக்கு பொருத்தமான வாழ்க்கைத் துணைவியாக அமைவதை நீ விரும்புவாயா?" நான் ஒன்றும் சொல்லவில்லை. அடுத்த நாள் சரசுவும் நானும் தனிமையில் ஏதோ பேசிக்கொண்டிருந்தபோது சரசு என்னைக் கேட்டார், "நல்ல மாமா உங்கள் திருமணம் எப்போது. யார் என்னுடைய நல்ல மாமியாக வருவார்?" மங்கைப் பருவத்தை அண்மித்துக்கொண்டிருந்த சரசுவின் அக்கேள்வி எனக்கு ஒரு மனச்சுமையை தீர்ப்பதற்கு வழி வகுத்தது. "உனக்கு நல்ல

மாமி வர வழியில்லை'' என்றேன். "ஏன், நீங்கள் திருமணம் செய்யமாட்டீர்களா'' என்பது அடுத்த கேள்வி. "இல்லை திருமணம் செய்வேன். ஆனால் உனக்கு நல்ல மாமி வர வாய்ப்பில்லை'' என்பது எனது பதில். அந்த பதிலில் இருந்த கருத்தை அவர் புரிந்துகொண்டாரோ என்னவோ. "அடுத்தமுறை சந்திக்கும்போது எனக்கு சரியான பதில் வேண்டும்'' என்று கூறிவிட்டு அவர் வேறு அலுவலாக சென்றுவிட்டார். அன்று அவர் என்னுடைய அண்ணியுடன் ஏதேதோ அடிக்கடி பேசிக்கொண்டிருந்தார். எனக்கோ அன்றைய பொழுது கழிவது ஒரு யுகம்போல இருந்தது. அடுத்த நாள் சரசு என்னைச் சந்தித்தபோது எனக்கு நான் விரும்பிய பதில் கிடைத்தது.

மூத்தோருக்கு தெரிவிக்க வேண்டுமே. தாயற்ற நான், அன்பு அக்காவை நாடி எங்கள் விருப்பத்தை தெரிவித்தேன். காலப் போக்கில் சரசு பேராதனையில் விஞ்ஞான இளமானி பட்டம் பெற்றார். 1966 இல் எங்கள் திருமணம் நடந்தது.

அந்த நாட்களில் நான் சதுரங்கம் ஆடி பல பரிசுகளை பெற்றேன். எனினும் இலங்கை சதுரங்க முதன்மை வீரர் என்ற பட்டம் எனக்கு கிடைக்கவில்லை. இறுதிப் போட்டி 1966 ஒத்தோபர், அதாவது எனது திருமணம் முடிந்து சுமார் ஒரு மாதத்தில் நடைபெற இருந்தது. இளம் மனைவியை வீட்டில் இருத்திவிட்டு மூன்று வாரங்கள்வரை ஒவ்வொரு நாளும் மாலையில் ஐந்து மணி நேரம் ஆடவேண்டும். நிலைமையை சரியாக புரிந்து கொண்ட சரசு ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சியுடன் வாழ்த்தி விடை கொடுப்பார். எனக்கு வெற்றியோ தோல்வியோ இரண்டிலும் சமபங்காற்றினார். அவருடைய பங்களிப்பு வீண் போகவில்லை. எனக்கு முதன்மை வீரர் பட்டம் கிடைத்தது.

ஒரு வருடத்தின் பின் (1967 இல்) ஆண் குழந்தை (குமரன்) பிறந்தார். குழந்தை பிறந்து நாற்பது நாட்களில் நான் மேற் பட்டப் படிப்பிற்காக மான்செஸ்டர் செல்ல அலுவலகத்தின் மூலம் புலமைப் பரிசில் கிடைத்தது. "நீங்கள் போய் வாருங்கள்'' என்று சரசு இன்முகத்துடன் விடை கொடுத்தார். ஆனால் நாங்கள் அதிக நாட்கள் பிரிந்திருக்கவில்லை. மூத்த மகள் - மருமகன் மீது மிகவும் பாசம் வைத்திருந்த அக்காவும் அவர் கணவரும் பேரன் குமரனை தங்கள் பொறுப்பில் விட்டுச்செல்லும்படி சரசுவிடம் கூறி அவரை மான்செஸ்டருக்கு அனுப்பினார்கள்.

மான்செஸ்டருக்கு எனக்கு உறுதுணையாக இருப்பதற்கு வந்த சரசுவுக்கு அந்த ஊரில் உள்ள பல்கலைக் கழகத்திலே ஒரு உத்தியோகம் கிடைத்தது. கருமமே கண்ணாக உழைத்த சரசு கைமேல் பலனும் பெற்றார். நான் கலாநிதி பட்டம் பெறும் வேளையில் சரசு விஞ்ஞான முதுமானி பட்டம் பெற்றார்.

1972 இல் திரும்பி வந்து சொந்த வீடு கட்டி இருவரும் கொழும்பில் வேலை பார்த்தோம். வரும்போது கருவுற்றிருந்த மனைவி ஒரு பெண் குழந்தையை (அனுராதா) பெற்றெடுத்தார். குமரனும் அனுராதாவும்

கல்வியில் தங்கள் திறமையை வெளிப்படுத்திக்கொண்டு வரும் வேளை 1983 கலவரங்கள் நடைபெற்றன. இதன் விளைவாக அவர்கள் சில காலம் யாழ்ப்பாணத்தில் கல்வி கற்க நேர்ந்தது. இச்சோதனை காலத்தில் எங்கள் இருவருக்கும் பதவி உயர்வுகளும் தேடி வந்தன. குமரனை பட்டப் படிப்பிற்கு இங்கிலாந்து அனுப்பினோம். 1988 இல் சரசுவின் தந்தை காலமானார். அனுராதாவை கொழும்பிற்கு அழைத்து பரத நாட்டியத்தில் அரங்கேற்றமும் வைத்தோம். பின்னர் இங்கிலாந்து அனுப்பினோம். அங்கு சரசுவின் தம்பி கோபாலும் அவர் மனைவி சந்திராவும் எங்கள் பிள்ளைகளை வழி நடத்தினார்கள்.

கலவரங்களில் கணவரை இழந்து பின் ஒரே மகளையும் பறிகொடுத்த சரசுவின் தங்கை விமலா மற்றும் அல்லல் பட்டு புகலிடம் தேடிவந்த உறவினர் சிலரும் எங்களுடன் தங்கினார்கள். சரசுவின் இளைய தம்பி மோகன் கொழும்பில் ஆசிரியர் உத்தியோகம் பெற்று எங்களுடன் தங்கினார். எல்லோரும் கொழும்பிற்கு வந்ததும் அக்காவும் வந்து மகள் சரசுவுடன் தங்கினார்.

காலப் போக்கில் சரசு அவர் உறுப்பினராக இருந்த பல சங்கங்களில் உயர் பதவிகளை வகித்தார். பதவி புகழ் எல்லாம் தேடி வந்தாலும் அலுவலகத்திலும் சரி, பொது சங்கங்களிலும் சரி, வீட்டிலும் சரி கடமை உணர்வில் என் மனைவி சிறந்து விளங்கினார். எடுத்த கருமத்தினைச் சரிவரச் செய்வதில் அவர் தன்னையே மறந்து விடுவதும் உண்டு.

அலுவலகத்தில் நான் முன்னேறி வேலைப் பளு அதிகரித்தபோது வேலை முடித்து எவ்வளவு நேரங்கழித்து களைப்புடன் வந்தாலும் இன்முகத்துடன் வரவேற்று என் தேவைகளை எல்லாம் சரிவரக் கவனிப்பார். சுருங்கக் கூறுவதென்றால் குடும்பம் சீராக முன்னேற அவர் செய்த பணி மகத்தானது.

மகனுக்கு அவர் விரும்பிய பெண்ணையே மணம் முடித்து வைத்தோம். இங்கிலாந்து பழக்க வழக்கங்களில் ஊறிப்போன அப்பெண்ணுக்கும் குமரனுக்கும் மணவாழ்க்கை ஒத்துப் போகவில்லை. இதன் காரணமாக அவர்கள் விவாகரத்து செய்து கொண்டார்கள். இதில் அவர்களின் மேல்நாட்டு சூழ்நிலை முக்கிய இடம் வகித்ததை சரசுவும் நானும் தெளிவாக விளங்கிக் கொண்டோம்.

மகளுக்கு குடும்பத்தில் மிகவும் நெருக்கமான உறவினரை இருபகுதியினரும் ஒத்து திருமணம் செய்து வைத்தோம். ஆனால் சுமார் நான்கு வருடங்களின் பின்னர் அவர்களின் வாழ்வில் புயல் வீச ஆரம்பித்தது. ஒரு மகனும் ஒரு மகளும் பிறந்த பின்னர் சரசு நேரே நியூசிலாந்து சென்று நிலைமையை அறிந்து வந்தார். புயலைத் தணிக்க நான் போய் எடுத்த முயற்சி கைகூடவில்லை. எனவே விவாகரத்தில் முடிந்த இத்திருமணத்தில் மகள் தன் பிள்ளைகளை பராமரிப்பதற்கு உதவியாக நாங்கள் இருவரும் நியூசிலாந்தில் காலங்கழிக்க நேரிட்டது. அதிக நாட்கள் கொழும்பில் காலம் கழித்து உத்தியோகம் பார்க்கும் சரசுவின் மீது ஏனைய குடும்பத்தவரின் பொறுப்புகளை கவனிக்க வேண்டிய

சுமையும் வந்தது. அவர் ஒரு சுமைதாங்கி ஆகவும் திறம்பட செயல் ஆற்றி வருகின்றார். மகள் அனுராதா கிறைஸ்ட்சேர்ச்சில் பரத நாட்டியத்தில் பெறும் சாதனைகளை அவ்வப்போது கேட்டு மகிழ்வார்.

இத்தருணத்தில் அவருடைய திறமையை பாராட்டி அவர் கௌரவிக்கப்படுவது எனக்கு ஒரு தருமசங்கடமான நிலையை ஏற்படுத்தி உள்ளது. நேரே அந்த நிகழ்வில் பங்குபற்ற முடியாத துர்ப்பாக்கிய நிலையில் இறைவன் என்னை வைத்துள்ளார். ஆனால் எங்கள் கடமையில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டிய மனப்பக்குவத்தையும் அவர் கொடுத்துள்ளார்.

**1960 தொடக்கம் இன்றுவரை எங்கள் பந்தத்திற்கு ஆணிவேராகத் திகழ்ந்தது நாங்கள் எங்கள் நன்மை தீமை எல்லாவற்றையும் ஒளிவு மறைவின்றி பரஸ்பரம் பகிர்ந்து வந்த பழக்கம் ஆகும். நான் ஆரம்பத்தில் எழுதியபடி எத்தனை ஆயிரம் மைல்கள் எங்களைப் பிரித்தாலும் என்றும்போல இன்றும் கருத்தொருமித்த தம்பதிகளாக குடும்பம் நடத்திக் கொண்டு இருக்கிறோம்.**

**மங்கியதோர் நிலவினிலே நான் அன்று கண்ட பதினாறு வயது மங்கை பல பல கோணங்களில் என் மனதில் இன்றும் இருக்கிறாள்.**

*கலாநிதி வி. அம்பலவாணர்*
*2009-03-21*

## என் அம்மம்மா

நான் கொழும்பில் பிறந்தேன். நான் பிறந்த நாள் முதல் நியூசிலாந்து வரும்வரை அம்மாவுடன் சேர்ந்து அம்மம்மா என்னைப் பராமரித்து வந்தார். எனக்கு அந்த நாட்களில் அம்மம்மா என்றால் நல்ல பிரியம். காலையில் அம்மம்மா தனது அலுவலகம் சென்றுவிடுவார் மாலையில் நான் அம்மப்பாவுடன் காரில் சென்று அம்மம்மாவை வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வருவேன். நானும் அம்மம்மாவும் சேர்ந்து மாடிப்படிகளில் இருந்து கார் ஓட்டுவோம். அம்மம்மா தானும் ஒரு குழந்தையாக மாறி என்னுடன் சேர்ந்து விளையாடுவார். நான் அம்மம்மாவுடன் சேர்ந்து சமைத்து அம்பப்பாவுக்கு சாப்பாடு கொடுப்பேன். பின்பு நானும் அம்மம்மாவும் சேர்ந்து படிப்போம். சிறுபிள்ளைப்பாடல்கள் பல அம்மம்மாவிடம் இருந்து நான் கற்றுக்கொண்டேன். .படம் பார்த்துச் சொல்லல், கதை சொல்லல் என்பனவும் நானும் அம்மம்மாவும் மாறிமாறிச் செய்வோம். அந்த நாட்கள் எனக்கு மிகவும் இனிமையாகக் கழிந்தன. நான் நியுசிலாந்து வந்தபின் அம்மம்மா விடுமுறைகளில் இங்கு வரும்போது அவவுடன் சேர்ந்து விளையாடி படித்து மகிழ்வேன். **என் அம்மம்மா சுகமாக வாழ எனது வாழ்த்துக்கள்.**

அன்புப் பேரன் கஜன்.
நியுசிலாந்து 30.03.2009

# நான் கண்ட அம்மா

நான் குழந்தைப் பருவத்தில் அம்மம்மா, பெத்தப்பா, ஆச்சி ஆகியோரின் பராமரிப்பில் வளர்ந்தேன். எனவே அவர்களுடன் எனக்கு ஒரு விசேட உறவு என்றும் உள்ளது. ஐந்து வயது தொடக்கம் அம்மா, அப்பாவுடன் கொழும்பில் வசித்தேன். பின்னர் பதினெட்டு வயதில் இங்கிலாந்து வந்து வசிக்கின்றேன்.

பெற்றோர்கள் இருவருமே என்னையும் தங்கை அனுராதாவையும் மிகவும் அன்புடன் வளர்த்தார்கள். அப்பாவுக்கு கந்தோர் வேலை அதிகம். எனவே அம்மாதான் பெரும்பாலும் என் அன்றாட அலுவல்களில் உதவி வந்தார். அவர் மிகவும் மென்மையான சுபாவம் படைத்தவர். எவ்வளவு வேலைகள் இருந்தாலும் அவர் மனம் தளரமாட்டார். மற்றவர்களின் வேலைகளையும் சேர்த்து தானே செய்து முடித்து விடுவார். என்னுடன் அவர் கோபப்படடு நான் அறியேன். எப்பொழுதாவது மற்றவர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து கோபம் வந்ததை நான் பார்த்திருக்கிறேன். அந்த நேரங்களில் அவர் அதிகம் பேசமாட்டார்.

அம்மம்மா, பெத்தப்பா, ஆச்சி ஆகியோர் அவரிடம் தனி பற்றுதல் கொண்டிருந்தார்கள் என்று நினைக்கிறேன். எந்த முக்கிய விடயம் என்றாலும் சரசுவுடன் ஒரு யோசனை கேட்டு செய்வோம் என்று அவர்கள் பேசிக்கொள்வார்கள். பெரிய மாமாவை விட அம்மாவின் ஏனைய சகோதரங்கள் அம்மாவிலும் மிகவும் இளையவர்கள். என்வே என்னையும், அனுவையும் போல அவர்களும் அம்மாவிற்கு பிள்ளைகள்போல அவரின் அன்பை பெற்றார்கள். எங்களுடன் கொழும்பில் இருந்து படித்த ஆசையம்மாவின் மக்கள் பிருந்தா, திலீபன் ஆகியோரையும் அரவணைத்து அம்மா அன்புடன் வளர்த்தார்.

விஞ்ஞான பட்டதாரியான அம்மா எங்களுக்கு விஞ்ஞான பாடங்களில் மிகவும் உதவினார். எந்த ஒரு கேள்வியையும் மிகவும் நுணுக்கமாக படித்து எங்களுக்கு தெளிவாக விளக்குவார்.

பிற்காலத்தில் நானும் தங்கையும் மனமுடைந்து இருந்த வேளைகளில் அம்மா தைரியம் கூறி எங்களை முன்னேற வைத்தார். மன உறுதியும் விடா முயற்சியும் அவருக்கு பல துறைகளிலும் புகழ் தேடிக்கொடுத்தது. சிறந்த அம்மாவான அவர் சிறந்த பெண்மணியாக கௌரவம் பெற்றது எங்கள் எல்லோருக்கும் மிகவும் மகிழ்ச்சியை கொடுத்தது.

உத்தியோகத்தில் இருந்து ஓய்வுபெறும் அம்மா அனுவுடனும் என்னுடனும் வந்து வசித்து எங்களை மகிழ்விக்கும் நாட்களை எதிர்பார்த்து உள்ளோம்.

அன்பு மகன்
அ. குமரன்
2009 . மார்ச்.

# என் அம்மா

சிறு வயதில் இருந்தே ஒரு முழுநேர வேலைக்குச் சென்றாலும் என்னை தன்னால் இயன்ற அளவு ஒரு குறையும் இல்லாமல் அம்மா வளர்த்து வந்தார். எனக்கு சங்கீதம், நடனம், சித்திரம் போன்ற கலைகளில் இருந்த ஆர்வத்தை அவதானித்து அக்கலைகளுக்கு உரிய வகுப்புகளில் என்னை சேர்த்து தினமும் அழைத்துச் சென்று உற்சாகமும் அளித்தார். மாலையில் வீடு வந்ததும் வேலையோடு வேலையாக என் வீட்டுப் பாடங்களிலும் உதவி வந்தார்.

1983 சூழ்நிலை காரணமாக நான் யாழ்ப்பாணத்தில் என்னுடைய அம்மம்மா – பெத்தப்பா ஆகியோரின் அரவணைப்பில் பாடசாலை கல்வியை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் தொடர்ந்தேன். அந்த வேளை அம்மம்மா – பெத்தப்பா ஆகியோரின் அன்பு எத்தகையது என்பதை என்னால் உணர முடிந்தது. அந்தச் சமயத்தில் அம்மா ஒவ்வொரு மாதமும் இரண்டு அல்லது மூன்று நாட்கள் அங்கு வந்து என்னைப் பார்த்துவிட்டு செல்வார். அவ்வேளைகளில் என்னுடைய சகல தேவைகளையும் பொறுமையுடன் நிறைவேற்றி வைப்பார். எனக்கு பிடித்தமான இனிய சிற்றுண்டிகளையும் செய்து வைத்து விட்டுச்செல்வார். ஒவ்வொரு முறையும் அவர் என்னை விட்டு வேலை நிமித்தம் கொழும்பு செல்லும்போதும் அவரது பிரிவு என்னை மிகவும் வாட்டும்.

1987 தொடக்கம் நான் கொழும்பு வந்து மீண்டும் அம்மாவுடன் வசிக்கமுடிந்தது. க.பொ.த (சாதாரணம்) பரீட்சைக்கு படிக்கும்போது விஞ்ஞானப் பாடத்தில் அம்மாவும் கணிதத்தில் அப்பாவும் மிகவும் உதவியாக இருந்தார்கள். அவர்கள் எனக்கு 1989 இல் பரத நாட்டிய அரங்கேற்றம் ஒழுங்கு செய்து சிறப்பாக நடத்தி வைத்தார்கள். க.பொ.த (உயர்தரம்) பரீட்சை முடிந்ததும் என்னை பொறியியல் பட்டப்படிப்பிற்காக இங்கிலாந்திற்கு அனுப்பி வைத்தார்கள்.

இங்கிலாந்தில் என்னுடைய அண்ணா என்னை மிகவும் அன்பாக கவனித்து வந்தார். என் பெற்றோரினதும் அண்ணாவினதும் ஊக்கம் என்னை மின் பொறியியலாளர் பட்டதாரி ஆக்கியது.

1996 ஆம் ஆண்டு என் பெற்றோர் எங்கள் உறவினரான ஒருவருடன் எனக்கு திருமணம் செய்து வைத்தார்கள். நான்கு வருடம் திருமண வாழ்க்கை சுமுகமாக இருந்தது. இக்காலத்தில் கஜன், கஜலக்ஷ்மி என்னும் இரு குழந்தைகளையும் பெற்றேன். கஜன் பிறந்தபோது கொழும்பில்

இருந்தேன். கஜனுக்கு 'செல்லா' என்ற செல்லப் பெயரை அம்மா கொடுத்து மிகவும் அன்பாக வளர்த்தார். இப்பெயர் இன்றும் செல்லப் பெயராக நிலைத்துள்ளது.

இறைவன் செயலை என்ன என்று சொல்வது? அடுத்த நான்கு ஆண்டுகளும் திருமண வாழ்க்கை மிகவும் கரடுமுறடாக மாறியது. நியூசிலாந்து நாட்டில் வாழ்ந்த எம்மை அம்மா வந்து பார்த்துவிட்டு மிகவும் மனக்கவலையுடன் சென்றார். பின்னர் 2005 ஆம் ஆண்டு அப்பா வந்திருந்த வேளை பெற்றோரின் அனுமதியுடன் திருமண பந்தத்தை முறித்துக்கொண்டு சிறார்களுடன் மகளிர் இல்லத்தில் சிலகாலம் வசித்தேன். இதன்பின்னர் சட்ட நடவடிக்கைகள் ஆரம்பமானது. 2007 இல் விவாகரத்து பெற்றேன். இக்காலப் பகுதியில் அப்பாவும் அம்மாவும் தங்கள் சிரமங்களை பொருட்படுத்தாது ஒருவர்மாறி ஒருவராக வந்திருந்து என் மனச்சுமைகளை பகிர்ந்து என்னை ஆறுதல் அடையச் செய்தார்கள்.

அம்மாவும் அப்பாவும் அன்று அளித்த வரப்பிரசாதமான பரத நாட்டியம், கர்நாடக சங்கீதம் ஆகியவை இன்று எனக்கு கைகொடுக்கிறன. என் அமைதிக்கு உறுதுணையாக இக்கலைகள் என்னுடன் பின்னிப் பிணைந்துள்ளன. நான் கிறைஸ்ட்சேச்சில் பரதநாட்டியத்திலும் கர்நாடக சங்கீதத்திலும் பெறும் சாதனைகள் எல்லாம் இத்தருணத்தில் அம்மாவின் சாதனைகள் என்றே நான் கருதுகிறேன்!

*அனுராதா அம்பலவாணர்.*
*2009-03-21*

சர்வதேச மகளிர் தின விழாவில் விருந்து உபசார அனுசரணையாளர்:-

சன்விச், குளிர் பானம், Tissue, Paper plate -
திருமதி அபிராமி கயிலாசபிள்ளை & செல்வி சிவமலர் சுப்பிரமணியம்

கேசரி -
திருமதி பொன்மலர் கந்தசாமி & திருமதி கௌரி ரமணா

பற்றிஸ் -
திருமதி தயாநிதி செல்வநாயகம்

மோதகம் -
திருமதி மிதிலா ஸ்ரீ பத்மநாதன்

ரோல்ஸ் -
திருமதி விமலா மணிவாசகன்

வாழைப்பழம் -
திருமதி நந்தினி மோகன்

# சித்தி

எனது சித்தப்பா கலாநிதி வி. அம்பலவாணர், சித்தி திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்களின் திருமண வைபவம் தான் எனது வாழ்வில், எனக்கு முதலாவதாக நினைவில் இருக்கும் நிகழ்வு. அன்று முதல் சித்தியை நான் நன்கு அறிந்து வந்துள்ளேன். சித்தி எல்லோருடனும் மிகவும் அன்பாகவும் பண்பாகவும் பழகுவார். அவர் வன்சொல் பாவித்ததை நான் ஒரு போதும் கேட்டதில்லை.

சித்தப்பா கலாநிதி பட்ட கல்விக்காக இங்கிலாந்திற்கு சென்ற போது தானும் அவருடன் கூடச்சென்று மேற்படிப்பு கற்று எம்.எஸ்.சி.யில் தேறினார். ஆனால் அவர் தான் ஒரு பெரிய பட்டதாரி என்றோ மேல் நாட்டில் கல்வி கற்றவர் என்றோ தன்னை ஒரு போதும் காட்டிக் கொள்வதில்லை. எப்போதும் மிகவும் பணிவாகவே இருப்பார்.

அவர் பல ஆண்டுகளாக தான் படித்த யாழ் இந்து மகளிர் கல்லூரி வளர்ச்சிக்காக அருந்தொண்டாற்றி வருகின்றார். சென்ற மகளிர் நாளன்று அவரின் பாரிய பணிகளுக்காக அவர் சிறந்த பெண்மணியாக தெரிவு செய்யப்பட்டு ‘தொழில் நுட்ப வித்தகி’ என்ற விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். அதையிட்டு நாம் எல்லோரும் மிகவும் பெருமையடைகிறோம்.

அவரும் சித்தப்பாவும் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து மென்மேலும் நற்பணிகள் செய்ய எல்லாம் வல்ல இறைவனை வணங்குகிறேன்.

*திரு க. அரவிந்தன்*

---

பரிசுடன் வந்த வாழ்த்து.

8/03/2009 To:- Dear Saras,

Congratulations
&
Best Wishes

Kailas Aththan
Kamala Acca & Malar

# தாயான அக்கா

இந்து சமுத்திரத்தின் முத்து எனப்படுவது இலங்கையாகும். இலங்கையின் சிகரம் எனப்படுவது யாழ் குடா நாடு ஆகும். யாழ் குடா நாட்டின் வலிகாமம் எனப்படும் யாழ்ப்பாணத்தின் மேற்றிசையில் பொலிந்து விளங்குவது அராலியூர் ஆகும். அங்கு மருதநில நெற்களனிகளின் மத்தியில் அமைந்த உதரான் திருப்பதியில் எழுந்தருளி அருள்பாலிக்கும் சிந்தாமணி விநாயகருக்கு வழி வழித் தொண்டு புரிந்து ஒழுகும் சைவ வேளாண் குலத்தில் வந்தவர் வைத்திலிங்கம் என்னும் பெரியார்.

இவரின் கனிஷ்ட புத்திரர் அம்பலவாணர் ஆவார். அம்பலவாணர் தன்னுடைய மாமனாகிய விதானையார் சங்கரப்பிள்ளை முத்துக்குமாருவின் திருமகள் சிவகாமிப்பிள்ளையைத் தன் வாழ்க்கைத் துணையாகப் பெற்றார். இவர்களின் கனிஷ்ட புத்திரர் வயித்தியலிங்கம் ஆவார். 1915-5-25இல் மண்ணில் உதித்த வயித்தியலிங்கம் அவர்கள் இளவயதிலேயே பெற்றோர்களை இழந்தார். தாயின் பாசத்தைத் தமது மூத்த அண்ணியிடமும் தந்தையின் அரவணைப்பைத் தன் தாய்மாமன் வைத்திய கலாநிதி சங்கரப்பிள்ளை அவர்களிடமும் பெற்று வளர்ந்தார். யாழ்ப்பாணக் கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே கணிதத்தில் சூடிகையாக விளங்கினார். கொழும்பு பல்கலைக் கழகத்தில் இவர் முதல் மாணவனாகச் சித்தி பெற்றார்.

1936இல் புலமைப்பரிசில் பெற்று இங்கிலாந்து சென்று புகழ்பெற்ற கேம்பிறிஜ் பல்கலைக் கழகத்தில் தமது கல்வியைத் தொடர்ந்து B.A, B.Sc. பரீட்சைகளில் சித்தி அடைந்ததோடு கணித பாடத்தில் விசேட சித்தியும் பெற்றார். 1939இல் இலங்கை திரும்பிய இவரை அணைக்க எத்தனையோ பெரிய பதவிகள் காத்திருந்த போதும் அவற்றை உதறித் தள்ளி, பாட்டாளி வர்க்கத்தின் உயர்வுக்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார். இவர் ஆடம்பரம் அற்ற, எளிய, பண்பான சிந்தனையாளனாகத் தன் வாழ்க்கையை நடத்தினார்.

இவரின் தாய்மாமனார் சங்கரப்பிள்ளைக்கும் காரைக்காலம்மையாருக்கும் 1926இல் பிறந்த புத்திரிக்கு உலகுக்கெல்லாம் படியளக்கும் அன்னையின் பெயரான அன்னபூரணி என்னும் பெயரை சூட்டி மகிழ்ந்தார்கள். இவர் நாவலர் சைவ வித்தியாசாலையிலும் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலும் கல்வி பயின்றார். இவர் அராலி மேற்கில் லக்தீவா நெசவாலையை திறமையாக 15ந்து வருடங்கள் நிர்வகித்து

வந்தார்.

1943ஆம் ஆண்டில் திருவளர் செல்வி அன்னபூரணியைத் திரு வயித்தியலிங்கம் தன் இல்வாழ்க்கைத் துணைவியாக விரும்பிப் பெற்றார். இல்லறம் என்னும் நல்லறம் இயற்றி, அதன் நன்கலமாக ஆறு மக்கட் செல்வங்களைப் பெற்றனர்.

இவர்களின் மூத்த மகவாக 1944-09-20இல் உதித்த பெண் குழந்தைக்கு தன் தாயார் நினைவாகச் சிவகாமி என்றே பெயர் சூட்டி மகிழ்ந்தார். இவரும் தந்தையைப் போலவே கல்வியில் சிறப்புப் பட்டங்கள் பெற்று விளங்கினார். இவருக்கு இயல்பாகவே தந்தையாரின் குணங்களும் வாய்க்கப் பெற்றார்.

1966இல் திட்டமிடல் அமைச்சில் பணிபுரிந்த அம்பலவாணரை காதல் திருமணம் புரிந்து கொண்டார். அம்பலவாணர் - சிவகாமி தாத்தா-பாட்டி பெயர்ப் பொருத்தமாகவும் சிதம்பரத்து இறைவன்-இறைவி பெயர்ப் பொருத்தமாகவும் அமையப்பெற்றது. இவர்களுக்கு பிறந்த மகனுக்கு கலியுகவரதன் முருகனின் பெயரான குமரன் என்னும் பெயரையும் பெண் குழந்தைக்கு அனுராதா என்னும் பெயரையும் சூட்டி மகிழ்ந்தார்கள். இவர்கள் அனுராதா மூலமாக கஜன் என்ற பேரனையும் கஜலட்சுமி என்ற பேத்தியையும் அடைந்து மகிழ்ந்தார்கள்.

இவர் தன் சகோதரங்களுக்கு மட்டுமன்றி மற்றையவர்களுக்கும் முன் மாதிரியாக விளங்குகின்றார். இவரின் வாழ்க்கையை மூன்று பிரிவுகளாக நோக்கலாம். ஆனால் அவை ஒன்றோடு ஒன்று கலக்காது வாழ்ந்து வருகின்றார். பம்பர் அன்ட் புரூஸ் நிறுவனத்தில் பிரதம பகுப்பாய்வாளராக கடமையாற்றினார். 2009-03-31இல் தன் வேலையில் இருந்து ஓய்வு பெற்றார். தனக்கு கீழ் வேலை பார்த்த எல்லோரையும் அன்னையின் ஸ்தானத்தில் இருந்து அன்புடன் வழி நடத்தி சென்றமையினால், அவர்கள் மனதில் எல்லோரும் ஒரே குடும்பம் என்ற சினேக பாவம் உருவாகியது.

அக்கா ஒரு முறை சத்திரசிகிச்சை செய்து வைத்தியசாலையில் அரைமயக்கத்தில் இருந்தபோதும் "கந்தோரில் தேநீர் கொடுக்க வேண்டும். ஆவணம் ஒன்றை விஜயசேகரவிடம் கொடுக்க வேண்டும்" என்று பலவாறு கூறிக் கொண்டு இருந்தார். அந்த அளவுக்கு அவர் தனது வேலையிலும், தனக்கு கீழ் வேலை பார்த்த பணியாளரிடம் கொண்ட பாசத்தையும் பற்றையும் அறிந்து கொள்ள முடிந்தது.

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தில் அங்கத்துவம், ஸ்ரீ லங்கா பரிசோதனை ஆய்வுக் கூடங்களின் சங்கத் தலைவி, இலங்கை இரசாயன மன்றத்தில் அங்கத்துவம் என்பவற்றுடனான சமூகத் தொண்டு. இலங்கை இரசாயன மன்றத்தின் மூலம் மாணவரிடையே வினாடி விடை போட்டி, அவுஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளில் நடைபெறும் விஞ்ஞான வினாத்தாள்களை தருவித்து மாணவரிடையே பரீட்சை வைத்தல் என்பனவற்றை ஒரு தாய் தன் பிள்ளைகளுக்கு எப்படி

அக்கறையுடன் செய்வார்களோ, அது போல் ஆர்வத்துடனும், கடமையுணர்வுடனும் செய்தார்.

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு, வட கீழ் பிராந்திய பழைய மாணவர் சம்மேளனம், தனது கணவருக்கு உதவியாக சகோதரக் கல்லூரியான யாழ் இந்து கல்லூரி பழைய மாணவர் சங்கம் என்னும் பாடசாலைகளின் அமைப்புகளின் செயற்திட்டங்களை மிக ஆர்வத்துடன் செயற்படுத்துவார். அத்துடன் நாடகம், நாட்டியம் போன்ற கலைநிகழ்ச்சிகளை வைப்பதற்கு நுழைவுச் சீட்டுக்களை எல்லோரிலும் முன்னோடியாக விற்றுக் கொடுப்பார். இதன் மூலம் இவர் தன்னை உருவாக்கிய பாடசாலையின் மீது வைத்துள்ள பற்றையும் கல்வி வளர்ச்சியில் வைத்துள்ள பற்றையும் நன்றாக அறிய முடிகின்றது.

அக்கா குடும்பத்தில் மூத்த மகளாக பிறந்தபடியால் தனது சகோதரர்களை அணைத்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் செய்கின்றார். இதற்கு உறுதுணையாக இருக்கும் நல்ல மாமாவுக்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். எனக்கு திருமணமாகி எட்டு வருடங்களுக்குப் பின்னர் தான் ஒரு மகள் பிறந்தாள். ஒருமாத விடுமுறையில் வந்து அம்மாவுக்கு உதவியாக ஒரு தாய் போல் என்னை பார்த்தார். 1983ஆம் ஆண்டு நாட்டில் அதர்மம் தலைவிரித்தாடிய போது எனது கணவரை பறிகொடுத்து தவித்த என்னை ஆறுதல் சொல்லி தனது குடும்பத்துடன் என்னை தல யாத்திரை அழைத்துச் சென்று வந்தார்.

அத்துடன் இந்த அதிர்ச்சியைத் தாங்க முடியாது வெளியில் காட்டாவிட்டாலும் உள்ளுக்குள் மருகிமருகி ஐயாவின் உடல் நலம் கெட்டது. அன்று தொட்டு அக்காவும், மாமாவும் எங்களுக்கு பெரும் உதவியாக இருக்கின்றார்கள். 1988இல் ஐயா காலமானார்.

1990ஆம் ஆண்டு எனது அன்பு மகள் மூளைக் காய்ச்சல் வந்து விண்ணுலகம் எய்திவிட்டாள். இதனால் நான் பெரிதும் கலங்கி யிருந்தேன். அன்றிலிருந்து என்னை தங்களுடன் தங்கவைத்து பாராமரித்து வருகின்றார்கள். 1996ஆம் ஆண்டு ஆச்சி காலமானதும் அம்மாவும் இவர்களின் பாராமரிப்பில் இருக்கின்றார். இவ்வாறு இவர் ஒரு **"தாயான அக்காவாக"** எங்களுக்கு துணையாக உள்ளார்.

*திருமதி விமலா மணிவாசகன்*
*2009-04-10*

பரிசுடன் வந்த வாழ்த்து. To:- Sivakamy,

With Best Wishes.

From:- J/Hindu Ladies' College O.G.A Colombo 8/03/2009

# பிரியாவிடை வைபவம்

எமது சங்கத் தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணர் மகளுடன் வசிப்பதக்காக நியூசிலாந்துக்கு 2009-05-03ஆம் திகதி பயணம் செய்கின்றார். ஆதலால் அவருக்கு சங்க அங்கத்தவர்கள் இலக்கம் 24 டீல்பிளேஸ் ஏ யில் உள்ள உபதலைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளையின் இல்லத்தில் 24-04-2009ஆம் திகதி மாலை 4.00மணி தொடக்கம் 5.30 மணி வரை ஒரு பிரியாவிடை வைபவத்தை வைத்தார்கள். இது ஒரு ஒன்றுகூடலாகவும் அமைந்தது. எல்லோரும் மகிழ்ச்சியுடன் கலந்துரையாடினார்கள்.

இவ்வைபவத்துக்கு வருகைதந்தோர்:

திருமதி சிவகாமி அம்பலவாணர்
திருமதி அபிராமி கயிலாசபிள்ளை
திருமதி சரஸ்வதி ஜெயராஜா
திருமதி தயாநிதி செல்வநாயகம்
செல்வி சற்சொரூபவதி நாதன்
செல்வி சிவமலர் சுப்பிரமணியம்
திருமதி கௌளரி ரமணா
திருமதி கௌளரி தேவசேனாதிபதி
திருமதி விமலா மணிவாசகன்
திருமதி ருக்மணி அரசரத்தினம்
திருமதி மிதிலா ஸ்ரீ பத்மநாதன்
திருமதி சிவச்செல்வி சிவலோகநாதன்
திருமதி குகஜோதி விஜயநாயகம்
திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்
திருமதி மல்லிகாதேவி சரவணபவான்
திருமதி திலகா விஜயரத்தினம்
திருமதி மனோன்மணி அருணாசலம்
திருமதி சாரதாம்பாள் மனோகரன்
திருமதி தனபாக்கியம் நித்தியானந்தன்
திருமதி கார்த்திகா பரமநாதன்
திருமதி திலகா வீரசிங்கம்

ஆகியோர் ஆவார். வந்திருந்தவர்களில் திருமதி கார்த்திகா பரமநாதன் புது அங்கத்தவர் ஆவார். அவருக்கும் மற்றவர்களுக்கு மிடையில் அறிமுகம் நடைபெற்றது. உதவிச் செயலாளராக இருந்து சங்க வளர்ச்சிக்கு உதவிய திருமதி திலகா வீரசிங்கம் அவர்கள் U.K சென்று ஐந்து வருடங்களுக்கு பின் வருகை தந்தமை எல்லோருக்கும் மிக்க மகிழ்ச்சியளித்தது. சிற்றுண்டி தேநீர் விருந்துடன் இவ்வைபவம் இனிதே நிறைவடைந்தது.

பிரியாவிடை வைபவத்தில் விருந்து உபசார அனுசரணையாளர்:-

சன்விஸ், கட்லட், குளிர் பானம், ஐஸ் கோப்பி, Tissue - திருமதி அபிராமி கயிலாசபிள்ளை & செல்வி சிவமலர் சுப்பிரமணியம் கேசரி - திருமதி பொன்மலர் கந்தசாமி பற்றிஸ் - திருமதி கௌளரி ரமணா பயித்தமுருண்டை - மல்லிகாதேவி சரவணபவானந்தன் அரிசி முறுக்கு - திருமதி விமலா மணிவாசகன்.

# BIO DATA of Mrs. S. Ambalavanar.
# Chief Analyst, BAMBER & BRUCE LIMITED.

Full Name : **Mrs. Sivakamy Ambalavanar**

Date of Birth : 20 - 09 - 1944

Academic qualification:

(a) B.Sc. (Ceylon) 1966 (General Degree)
Subjects: Chemistry, Botany and Zoology.

(b) M.Sc. (Manchester) 1971
Pharmacology by thesis.

Title of Thesis: Actions and Interactions of drugs affecting transport processes in frog skin and toad bladder.

Other training :

Underwent a 2 months training course at the Ceylon Institute of Scientific and Industrial Research (C.I.S.I.R.) in Microbiological techniques, from November 1976 to January 1977.

Other Qualifications:

(a) Associate Member of the Institute of Chemistry, Ceylon (A.I.Chem.C.) from 4th April 1977.
Promoted as a fellow Member (F.I.Chem.C.) on 3rd October 1986.

(b) Chartered Chemist (C.Chem)

(c) Member of the Ceylon Association for the Advancement of Science, SLAAS Section E from 21st May 1976. Joined as a member SLAAS Section B later.

(d) Member of the Institute of Biology (M.I.Biol.S.L.) from 24th December 1995.

(e) Representative of Bamber & Bruce Ltd. which is an Institutional Member of the Sri Lanka Association of Testing Laboratories since 25th September 1998.

Present Employment:-

Chief Analyst, Bamber & Bruce Ltd., 22/A, Vijaya Kumaranatunga Mawatha, Colombo 5, from July 1981 to date.
Bamber & Bruce (Pvt.) Ltd. is an Accredited Analytical Laboratory which handles the analysis of food & food products, oils & fats, fertilizers, water & effluents, beverages etc. The analytical work is carried out mainly to assess the physical, chemical & microbiological qualities of the samples submitted by the customers. The test reports are issued to the respective customers.

In addition the Laboratory provides consultancy services and undertakes project work. We service Government Organisations, Private Sector Organisations and Individual Customers.

In Sri Lanka, Bamber & Bruce (Pvt.) Ltd. was the first Analytical Laboratory that was granted Accreditation. The Accreditation number of Bamber & Bruce is 001.

Previous Positions:

(a) Deputy Analyst, Bamber & Bruce Ltd., 171, W. A. Silva Mawatha, Colombo 6, from January 1980 to June 1981.

(b) Assistant Analyst, Bamber & Bruce Ltd., 171, W. A. Silva Mawatha Colombo 6, from February 1975 to December 1979.

(c) Research Assistant, Department of Pharmacology, University of Manchester, U.K. from October 1970 to January 1972.

(d) Technician, Department of Pharmacology, University of Manchester U.K. from February 1968 to September 1970.

RESPONSIBILITIES AND DUTIES:

I served the Department of Pharmacology, as a Technician during the period February 1967 to September 1970. I helped Professor H. Schnieden & Dr. G. Mawer in their research work. The nature of the work was as follows:

(a) Estimation of Amylobarbitone in human urine and serum using gas chromatography.

(b) Investigation of the action of drugs (sympathomimetics, methylxanthines, antidiuretic hormones etc.) on isolated animal

tissues, using organ baths.

As a result of the success of my research investigations I was upgraded from Technician to Research Assistant to enable me to do my M.Sc. degree. During the period October 1970 to January 1972, in addition to my normal research work, I was in charge of the organisation of weekly seminars at the Department of Pharmacology, University of Manchester.

During the period February 1975 to December 1980 I was involved in the analysis of the samples received by our firm (Bamber & Bruce Ltd.). The analytical work involves the determination of moisture content, impurities, free fatty acid, iodine value, saponification value, unsaponifiable matter, geraniol content, cinnamic aldehyde content, flash point, viscosity, aerobic plate count, most probable number of coliforms E.Coli etc.

From January 1980 to June 1981 , in addition to routine analytical work I helped Mr. P. Tharmalingam the then Chief Analyst in his work. I also trained the new-comers in analytical work before placing them at suitable points.

PUBLICATIONS:

(a) Sivakamy Ambalavanar, R.W. Foster and H. Schnieden "Effects of Sympathomimetics on water movement across toad isolated bladder" Journal of Pharmacy and Pharmacology 1972, 24, 501.

(b) Sivakamy Ambalavanar, R.W. Foster and H. Schnieden. " The adrenoceptors mediating catecholamine effect in frog isolated skin "Journal of Pharmacy & Pharmacology 1973, 25, 55 - 59.

(c) S. Ambalavanar " Role of the Private Sector Analytical Laboratories in attaining NIC Status" Chemistry in Sri Lanka Vol. 11, No. 1, 21 - 23.

POSITIONS HELD IN PROFESSIONAL ORGANISATIONS:

(a) Council Member of the Institute of Chemistry, Ceylon from July 1993 to June 1994.

(b) Hony. Secretary/International Relations, Institute of Chemistry, Ceylon from July 1994 to June 1996.

(c) Coordinator for the publication of the Chemical Industries in Sri Lanka - Part II on behalf of the Institute of Chemistry, Ceylon.

(d) Served in several committees of the Institute of Chemistry, Ceylon such as the Social Affairs Committee, House, Finance & Membership Committee, Editorial and Publicity Committee etc.

(e) Acting Secretary, Institute of Chemistry, Ceylon from October 1995 to March 1996.

(f) Secretary, Institute of Chemistry, Ceylon from July 1996 to June 2000.

(g) Council Member, Institute of Chemistry, Ceylon from July 2000 to June 2002

(h) Secretary, Informal Working Group, in the formation of the Sri Lanka Association of Testing Laboratories (SLATL) from 22nd May 1998 to 25th September 1998.

(i) Secretary, Interim Executive Committee, SLATL from 25th September 1998 to 12th February 1999).

(j) Secretary, Executive Committee, SLATL from 12th February 1999 to 18th February 2001

(k) Treasurer, Executive Committee, SLATL from 18th February 2001 to 7th May 2008.

(l) President, Executive Committee, SLATL from 7th May 2008 to date

SOCIAL & CULTURAL ACTIVITIES:

(a) Assistant Secretary, Jaffna Hindu Ladies College Old Girls Association - Colombo, from August 1993 to December 1995.

(b) Secretary, Jaffna Hindu Ladies College Old Girls Association – Colombo, from January 1996 to February 2007

(c) President, Jaffna Hindu Ladies College Old Girls Association – Colombo, from February 2007 to date.

(d) Member of the Young Women Hindu Association since 1992.

(e) Represented Jaffna Hindu Ladies College, which is a Member of North East Region Schools Past Pupils Federation.

(f) Hony. Joint Secretary of the North East Region Schools Past

Pupils Federation

PARTICIPATION AT SEMINARS, WORKSHOPS ETC.

(a) Management "Everyday concerns of the Executive" presented by Industrial Commercial Consultants Ltd. Management Consultants held at Hotel Ceysands from 2nd to 5th October 1980.

(b) The seminar on water analysis methods conducted by the WEDC (Water and Waste Engineering for Developing Countries) group of Loughborough University of Technology, England, along with the Ministry of Local Government Housing & Construction in Sri Lanka held in Colombo on 11th and 12th January 1982.

(c) The course on Industrial Waste Water Treatment organised by the WEDC Group of Loughborough University of Technology, England, along with the Ministry of Local Government Housing & Construction in Sri Lanka held in Colombo on 11th and 12th February 1982.

(d) The third WEDC Group Training Programme - Water pollution control course at National Water Supply and Drainage Board, Ratmalana, from 12th to 23rd December 1983.

(e) The seminar on Chemistry in the Rubber Industry organised by Institute of Chemistry, Ceylon and the Plastic and Rubber Institute held in Colombo on 6th April 1984.

(f) The workshop on "Techniques in Analytical Chemistry" conducted by the Institute of Chemistry, Ceylon in association with the Centre for Analytical Research & Development, Department of Chemistry, University of Colombo and held in Colombo from March 14 - 17, 1985.

(g) Helped the Japan Ports Consultants Ltd., in their project work on sea water pollution control which they did for Sri Lanka Ports Authority during June and July 1985.

(h) A discussion on National Scheme for Accreditation of Laboratories in Sri Lanka initiated by Mr. BEN OGLE of the National Association of testing Authorities - Australia held in Colombo on 29th October 1985.

(I) The workshop on "Quality Control of Consumer products & Consumer Protection" conducted by the Institute of Chemistry,

Ceylon in association with the Ceylon Institute of Scientific and Industrial Research, City Analysts Laboratory, City Microbiologist Laboratory, Government Analyst Department and Sri Lanka Standards Institution held in Colombo on 21 - 23 November 1985.

(j) The national workshop on Food Control Strategy Organised by Ministry of Health held in Colombo on 21 -23 July 1986.

(k) The seminar on "Use of Chemicals and Health Hazards in Plantation Sector" organised by Congress Labour Foundation Friedrich Ebert Stiftung held in Colombo on 17th & 18th July 1987.

(l) The Seminar/Workshop on "Science & Technology for National Economic Development Conducted by the Sri Lanka Association for the Advancement of Science held in Colombo on 11th February 1988.

(m) "Chemist and the Environment" Theme Seminar, Institute of Chemistry Ceylon, twenty first annual session held at BMICH on 7th July 1992.

(n) Seminar & Workshop on Atomic Absorption Spectroscopy organised by Buck Scientific Inc. USA sponsored by EMSO Limited. June 6, 1994.

(o) Seminar & Workshop on "Gas Chromatography & Infra - Red Spectroscopy" Organised by Buck Scientific Inc. USA sponsored by Emso Limited. June 7, 1994.

(p) Laboratory Quality Training by Dr. ALAN G ROWLEY of Rendel Science & Environment, Great Guildford House, 30 Great Guildford Street, London SEI OES, England during June 1992 held in Colombo.

(q) Good Laboratory Management Practice - A training Course for Laboratory Managers by Dr. MAX ROBERTSON (New Zealand) in conjunction with ASTEL Sri Lanka held at CISIR auditorium on 3rd & 4th August 1995.

(r) Seminar/Workshop on Laboratory Quality Management & Accreditation under the Swedish International Development Agency (Sida) Technical Assistance on Strengthening the Quality Infrastructure in Sri Lanka coordinated by Sri Lanka

Standards Institution.13 - 14 December 1995.

(s) Sida Technical Assistance Programme on strengthening the Quality Infrastructure in Sri Lanka for selected laboratories. 9 - 10, September 1996

(t) Microbiological Food Quality Control organised by 3 M Lanka (Private) Limited together with the Department of Food Science & Technology – Faculty of Agriculture – University of Peradeniya. held at Fingara Town & Country Club, Boralesgamuwa on 10th August 2007 from 9.30 a.m. to 4.00 p.

SPECIALISED TRAINING

(a) Specialised training programme on analysis of environmental samples (soil & water) foliage and fertiliser at the Laboratories of AGRICULTURAL RESEARCH AND ADVISORY SDN, BHD., (ARAB), WEST MALAYSIA, provided as part of our joint participation on consultancy work undertaken by ARAB in Sri Lanka, 13th - 20th September 1993.

(b) Workshop on Environmental Impact Assessment (EIA) Methods, organised by the Central Environmental Authority in association with the Natural Resources and Environmental Policy Project (NAREPP)/International Resources Group IRG), 25th - 28th November 1994 at Hotel Villa Ocean View, Wadduwa.

(c) Advanced Training Course in Atomic Absorption Spectrophotometry at Buck Scientific, Inc., 58, Fort Point Street, East Norwalk, CT 06855, USA 7th - 9th October 1996. The following aspects were covered: Day 1 - Overview of Atomic Spectroscopy and Principles of Operation. Day 2 - Sample preparation and instrument calibration. Advanced operation and special techniques. Day 3. Advanced methods and review of standard laboratory practices.

(d) SIDA Technical Assistance Programme on strengthening the Quality Infrastructure in Sri Lanka for selected six laboratories. Went to Stockholm, Sweden on a study visit to get practical experience in the Management of Testing Laboratories for 10 days from 2nd March 1997 to 11th March 1997. There was a guided visit to 5 laboratories in Sweden and demonstrations were given on how the laboratories are managed. The two consultants

Mr. Agust Johnson and Mr. Bengt Dahlberg taught us the key aspects in quality management.

(e) Laboratory Accreditation – Assessor Training Programme conducted by SWEDAC (Swedish Board for Accreditation and Conformity Assessment) and sponsored by SIDA (Swedish International Development Agency) organized by Sri Lanka Standards Institution and held at Colombo on 06 – 10 October 1997.

ORGANISATION OF SEMINARS (through Sri Lanka Association of Testing Laboratories):

'Role of Testing Laboratories – Current Status and Future Challenges' held at the Auditorium of Sri Lanka Association for the Advancement of Science, Vidya Mandiraya, 120/10, Wijerama Mawatha, Colombo 7 on 18th February 2000 from 9.00 a.m. to 12.15 p.m. (2nd AGM)

Public Lecture on 'ISO 17025 – A New International Standard for Accreditation of Testing Laboratories' by Dr. Alan Rowley, FRSC., C.Chem, Consultant, UNIDO Integrated Industrial Development Support Programme Organised by Indusrial Technology Institute and Sri Lanka Association of Testing Laboratories held at ITI Auditorium on 1st November 2000 at 5.00 p.m.

'Calibration: The Key Aspects for Testing Laboratories' held at the Auditorium of Sri Lanka Association for the Advancement of Science, Vidya Mandiraya, 120/10, Wijerama Mawatha, Colombo 7 on 16th February 2001 between 9.00 a.m. and 12.15 p.m. (3rd AGM)

Seminar on waste disposal organised by the Sri Lanka Association of Testing laboratories held at the Auditorium of Laurentius Building, Industrial Technology Institute, Vidya Mawatha, Colombo 7 on 7th May 2008 from 9.00 a.m. to 12.00 noon.

Awareness Seminar on Medical Testing Laboratory Waste Management and New Regulations organised by Sri Lanka Association of Testing Laboratories held at the Auditorium of Industrial Technology Institute, 363, Bauddhaloka Mawatha, Colombo 7 on 15th August 2008 from 9.00 a.m. to 1.00 p.m.

EXPERIENCE IN COMPUTERS:

I have experience in the following soft-ware packages based on practical usage:

MS Word, Excel and Publisher.

Address:

Office: Bamber & Bruce Ltd., 22/A, Vijaya Kumaranatunga Mawatha, Colombo 5.
Telephone: 2514254, 2514105
Fax: 2514813
E-mail: bbruce@sltnet.lk

Residence: 61/2, Abdul Gaffoor Mawatha, Colombo 3.
Telephone: 2573638
E-mail: ambalv@slt.lk

30-03-2009

## அம்மம்மா

நான் நியுசிலாந்தில் பிறந்தபடியால் எனக்குச் சிறுபிள்ளையாக இருக்கும்போது அம்மம்மாவைத் தெரியாது. தொலைபேசியில் அவவுடன் கதைப்பது எனக்கு ஞாபகம் இருக்கிறது. விடுமுறைகளில் அம்மம்மா இங்கு வரும்போது அவவுடன் சேர்ந்து விளையாடுவேன். எனது பாடசாலையில் கொடுக்கும் செயல்களையும் அம்மம்மா ஆர்வத்துடன் எனக்கு சொல்லித் தருவார். நான் எவ்வளவு குறும்புகள் செய்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாது என்னை ஆக்கவேலையில் ஊக்குவிப்பார்.

என்னுடனும் அண்ணாவுடனும் சேர்ந்து வசிக்க அம்மம்மா தன் வேலையில் இருந்து ஓய்வுபெற்று இங்கு வருவது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. நானும் அம்மம்மா மாதிரி கௌரவம் பெற்றுப் பலர் மதிக்க வாழ ஆசைப்படுகிறேன்.

அன்புப் பேத்தி கஜலட்சுமி
நியுசிலாந்து 30.03.2009

ISO/ IEC: 17025
TL 001 - 01

# BAMBER & BRUCE LIMITED

Presented
by
the Management and staff
on the occasion of her retirement
as Chief Analyst
after34 years of service
to

## Mrs. S. AMBALAVANAR

In appreciation of
the invaluable and dedicated
service rendered to the Laboratory.

31st March 2009



ஜோன் கீல்ஸ் நிறுவனத்தின் தலைவர்
திரு. பொஸ்ரொக் உடன்



யப்பானிய சர்வதேச கூட்டு நிறுவனத்துடன்
சேர்ந்து செயலாற்றும்போது



பம்பர் அன்ட் புறூஸ் நிறுவன
அலுவலர்களுடன் சுற்றுலாவின் போது



பம்பர் அன்ட் புறூஸ் நிறுவன அலுவலர்
ஒருவரின் பிரியாவிடை வைபவத்தின்போது



கலாநிதி மைக்கல் ஹொலிங்ஸ்வேத் அவர்
மனைவி கிறிஸ்ரீன் உடன் அவர்கள் இல்லத்தில்



கலாநிதி பொப் பொஸ்ரர் அவர் மனைவி
பெரில் உடன் அவர்கள் இல்லத்தில்

# திருமண வைபவம் வரவேற்பு உபசாரணையின்போது



கணவருடன்



திரு. என். சபாரட்ணம், திரு. எம். மயில்வாகனம்,
ஸ்ரீ. மணி ஐயர், திருமதி விமலா
ஆறுமுகம் ஆகியோருடன்



கல்லூரி, பல்கலைக்கழகத் தோழிகளுடன்



நெருங்கிய உறவினர்களுடன்



திரு. பீற்றர் கெனமன் அவர்களுடன்



பாட்டனார் திரு. அ. செல்லப்பா அவர்கள்

PRINTED BY : UNIE ARTS (PVT) LTD, COLOMBO -13. TEL : 2330195